24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும்
(Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



FREE
Real Estate
Classes start
every week
Call:416.321.6969

நதி 24 | பாலம் 09 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 01, 2014

# கனடாவின் செல்வம் மிக்க நடுத்தர வர்க்கம்

உலகிலேயே செல்வம் மிக்க நடுத்தரவர்க்க மக்களை கனடா கொண்டுள்ளது என BBC செய்தி நிறுவனம் New York Times இனுடைய அறிக்கையை மேற்கோள்காட்டி கடந்த ஏப்பிரல் 22, 2014 இல் செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் பணக்காரர்கள் மிகவும் பணக்காரர்களாக மாறுவதாகவும் மற்றும் நடுத்தர ஏழை மக்கள் மிகவும் ஏழைகளாக மாறி வருவதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

கடந்த 35 வருடங்களாக உலகில் உள்ள பல்வேறு நாடுகளில் இருந்து தகவல்களை சேகரித்து வரும் Luxembourg Income Study (LIS) எனப்படும் Luxembourg இல் உள்ள நிறுவனமே New York Times இற்காக இந்த அறிக்கையை தயாரித்து இருந்தது. இந்த அறிக்கை 1980 ஆம் ஆண்டில் இருந்து 120,000 குடும்பங்களின் வருமானத்தை கணிப்பதன் மூலம் தயாரிக்கப்பட்டது.



இவ் அறிக்கை தயாரிக்க வருமானவரி கழித்த பின்னர் கிடைக்கும் வருமானத் தொகையே கருத்தில் எடுக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டு நடுத்தர வருமானம் உள்ள அமெரிக்க மக்களில் ஒருவரின் வருமானம் $18,700 ஆக இருந்தது. (Median per capita income). அதாவது அமெரிக்காவில் உழைப்பவர்களில் அரைவாசிப்பேர் இதற்கு கீழ்ப்பட்ட வருமானத்தையும் மற்றைய அரைவாசிப்பேர் இதற்கு மேற்பட்ட வருமானத்தையும் பெறுபவர்களாக இருந்தார்கள். அமெரிக்க நடுத்தர மக்களின் வருமான அதிகரிப்பை விட கனடிய நடுத்தர மக்களின் வருமான அதிகரிப்பு விரைவாக வளர்ச்சியுற்று இப்போது உலகில் உள்ள எல்லா நாடுகளினது நடுத்தர மக்களின் வருமானத்துடன் ஒப்பிடும்போது கனடிய நடுத்தர மக்களின் வருமானமே அதிகூடியதாக உள்ளது என LIS ஐ சேர்ந்த பேராசிரியர்களான Janet Gornick மற்றும் Branko Mijanovic தெரிவித்துள்ளார்கள்.

இதற்கு மூன்று முக்கிய காரணங்களை சுட்டிக்காட்டும் LIS ஆராய்ச்சியாளர்கள் முதலாவதாக கல்வியின் முன்னேற்றத்தை காரணமாக காட்டுகிறார்கள். அமெரிக்க நடுத்தர மக்களின் கல்வி வளர்ச்சி கனடா உட்பட மற்றைய வளர்ச்சியடைந்த நாடுகளின் நடுத்தர மக்களது கல்வி வளர்ச்சியை விட மிகவும் குறைவானதாகவே கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது என்கிறார்கள்.

இரண்டாவது காரணமாக அமெரிக்க நிறுவனங்கள் தமது வருமானத்தை முதலீட்டாளர்களிடம் பகிர்ந்து கொள்வதாகவும் அவர்கள் மற்றைய வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்களுக்கு பங்கு கொடுப்பது போல் பிரித்து கொடுப்பதும் இல்லை என்கிறார்கள்.

மூன்றாவது காரணமாக கனடிய மற்றும் ஐரோப்பிய அரசாங்கங்கள் நடுத்தர வர்க்க மக்களின் வரிச்சுமையை குறைக்க பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுத்ததும் ஒரு காரணம் என்கிறார்கள். நடுத்தர மக்களின் வருமானம் இவ்வாறு இருப்பினும் மேல் மட்ட மக்களது வருமானம் அமெரிக்காவில் அபரிதமாக அதிகரித்துள்ளது. உலகில் அதிகூடிய மேல்மட்ட மக்களின் வருமானத்தை கொண்ட நாடாக கடந்த 35 வருடங்களாக அமெரிக்காவே தொடர்ந்து இருந்து வருகிறது.

முற்காலத்தில் ரோம் சாம்ராச்சியத்தில் 500 பணக்கார பிரபுக்கள் சராசரி ரோமிய மக்களை விட 10,000 மடங்கு பணக்காரர்களாக இருந்தார்கள் என சரித்திரம் கூறுகிறது. தற்காலத்தில் அமெரிக்காவின் முதல் 500 பணக்காரர்களும் அமெரிக்க நடுத்தர மக்களின் வருமானத்தை விட 40,000 மடங்கு அதிக வருமானம் உடையவர்களாக இருக்கிறார்கள்.


Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி

TOYOTA MARKVILLE
905.294.8100

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
அவசரகால பல் வைத்திய சேவைகள்
பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

THE TRUSTED MORTGAGE SPECIALISTS
"I Work for you Not for the Bank"
BonaFide
Some Terms & Conditions May Apply
•I will arange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate of 1% per month.

Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com

## உலகின் செல்வாக்குள்ளவர்கள் பட்டியலில் இடம்பிடித்த தமிழர்

உலகில் செல்வாக்குள்ள 100 பேர் பட்டியலில் தமிழகத்தை சேர்ந்த முருகானந்தம் என்பவர் இடம்பிடித்துள்ளார். தமிழகத்தின் மிகச்சிறிய கிராமத்தில் பிறந்தவரான அருணாச்சலம் முருகானந்தம் பத்தாம் வகுப்பு படிப்பை பாதியிலேயே நிறுத்தியவராவார். வெல்டிங் நிறுவனம் ஒன்றில் உதவியாளராக வேலை செய்த முருகானந்தத்திற்கு பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். ஒரு நாள் அவர் தனது மனைவி மறைத்து மறைத்து எதையோ எடுத்து செல்வதைப் பார்த்து எதை அவர் மறைத்துக்கொண்டு செல்கிறார் எனக்கேட்ட போது இதெல்லாம் பெண்கள் சமாச்சாரம் என்று கூறியிருக்கிறார்.

அப்போதுதான், அவரது மனைவி மாதவிடா ய் காலங்களில் நாப்கினுக்குப் பதிலாக பழைய துணியை பயன்படுத்தி வருவது புரிந்தது. நாப்கின் விலை மிக அதிகமாக இருந்ததே இதற்கு காரணம். தமிழகம் முழுக்க உள்ள ஏழைக் குடும்ப பெண்களின் நிலை இது தான். எனவே, இந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் முருகானந்தத்திற்கு ஏற்பட்டது. உடனடியாக இது குறித்து தீவிர தேடுதலில் ஈடுபட்டார். குறைவான விலையில் பெண்களுக்கு நாப்கின்



தயாரிக்கும் இயந்திரத்தை தயார் செய்யும் பணியில் ஈடுபட்டார். அவரது தீவிர முயற்சிக்கு ஒரு கட்டத்தில் நல்ல பலன் கிடைத்தது. தனது சொந்த முயற்சியில் இந்த இயந்திரத்தை உருவாக்கிய இவர் இன்று பல்வேறு நாடுகளுக்கு அதை ஏற்றுமதி செய்து சாதனை படைத்து வருகிறார். மேலும் தமிழகத்தில் உள்ள சுய உதவி குழு பெண்களுக்கு இந்த இயந்திரத்தை மலிவான விலையில் வழங்கி அவர்களின் வாழ்க்கை தரம் உயர பாடுபட்டு வருகிறார். இவரது இயந்திரத்தின் மூலம் தயாரிக்கப்படும் நாப்கின் தரமாகவும், விலை மிகக்குறைவாகவும் உள்ளது. ஏழை மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அவரது இந்த கண்டுபிடிப்பு உலகளாவிய அளவில் அவருக்கு பாராட்டுகளை குவித்துள்ளது. தற்போது அமெரிக்காவில் உள்ள டைம்ஸ் இதழ் வெளியிட்டுள்ள தகவலில், உலகின் செல்வாக்குள்ள 100 பேர் பட்டியலில் முருகானந்தம் இடம் பிடித்துள்ளார். முருகானந்தத்திற்கு அமெரிக்க அதிபர் ஒபாமா விருது வழங்கி சிறப்பிக்க உள்ளார்.

## சிவிலியன் ஒருவரை ஆளுனராக நியமிக்க வேண்டும்

சிவிலியன் ஒருவரை ஆளுனராக நியமிக்க வேண்டுமென வட மாகாணசபை முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். போர் இடம்பெற்ற காலத்தில் வடக்கிற்காக ஆளுனராக நியமிக்கப்பட்ட முன்னாள் படையதிகாரிக்கு பதிலாக சிவிலியன் ஒருவரை நியமிக்கும் வரையில் பொறுமையுடன் எதிர்வரும் ஜுலை மாதம் வரையில் காத்திருக்கின்றோம். அரசாங்கம் எமக்கு உடைந்த நாற்காலியை வழங்கியுள்ளது. உடைந்த நாற்காலியை



வழங்கி உட்காரச் சொன்னால் எவ்வாறு அமர்வது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். வட மாகாணசபையின் அமர்வில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## யாழ். மாநகர சபை ஆகஸ்ட் மாதம் கலைக்கப்படும்!

யாழ். மாநகர சபை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் கலைக்கப்படவுள்ளதாக ஈபிடிபி கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா திங்கட்கிழமை தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையில் திங்கட்கிழமை நடைபெற்ற தற்காலிக தொழிலாளர்களாக கடமையாற்றிய 87 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாநகர சபை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் கலைக்கப்பட்டாலும், அடுத்த ஆட்சி வரும் வரையில் மாநகர சபை செயற்படும். உங்கள் தொழிலுக்கும் தொழில் தருநருக்கும் விசுவாசமாக இருக்க வேண்டும். அத்துடன் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.



நேர்மையான, நடைமுறைச் சாத்தியமான அரசியலை நான் பின்பற்றிக் கொண்டு வருகின்றேன். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நானும் ஒரு வகையில் காரணம். ஒரு காலகட்டத்தில் ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டவன் என்ற காரணத்தினால் மக்களின் கருத்துக்களுடன் சேர்ந்து போவதற்கு இணங்கி வருகின்றேன். இங்கு வழங்கப்படும் நியமனங்கள் எவரின் அழுத்தத்தினாலும் வழங்கப்படவில்லை என்பதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த நிகழ்விற்கு வருகை தர தவறிவிட்டவர்களுக்கான நியமன கடிதங்கள் விரைவில் வழங்கப்படுமென்றும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார்.




## கூட்டமைப்பின் அடுத்தகட்ட நகர்வுகள் பற்றி சம்பந்தன் தலைமையில் கூட்டம்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்க்கமான முடிவெடுப்பதற்காக கட்சியின் முக்கிய கூட்டமொன்று எப்பிரல் 30.2014 இல் நடை-பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்மந்தன் தலைமையில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் உட்பட திருகோணமலை நகரசபை தலைவர் க. செல்வராஜா மற்றும் உப தலைவர் சிறிஸ்கந்தராஜா, திருகோணமலை மாவட்ட இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் க. துரைரெட்ணசிங்கம், கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள், வடமாகாண சபை அமைச்சர்கள், வடமாகாணசபை உறுப்பினர் கள் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் சி. தண்டாயுதபாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த முக்கிய சந்திப்பில் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு பேச்சுக்கான தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தம், கூட்டமைப்பின் உயர் மட்டக் குழுவின் தென்னாபிரிக்க விஜயம், ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் இலங்கை அரசிற்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை



நாடுகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களை இலக்கு வைத்து தொடரும் அரசின் பழி வாங்கும் நடவடிக்கைகள் உள்ளிட்ட சமகால நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

விளம்பரம் பத்திரிகையை இணையத்தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# தென்னாபிரிக்க முயற்சி வெற்றி பெறுமா?




தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றினை காண்பதற்கு இப்போது தென்னாபிரிக்காவின் அனுசரணை இடம் பெறப்போவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. ஆனால், இந்த அனுசரணை எவ்விதமாக இருக்கப் போகின்றது என்பது பற்றி தெளிவான தகவல்கள் இல்லை. போர் நடைபெற்ற காலங்களில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளின் போது வேறு நாடுகளின் அனுசரணை பெறப்பட்டு வந்த நிலையில், போரின் பின்னான காலகட்டத்தில் இடம்பெற விருக்கும் பேச்சுவார்த்தைகளில் இன்னு மொரு நாடு அனுசரணை வழங்கவிருப்பது இதுவே முதற் தடவையாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகவும், அவசியமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் என்பனவே உடனடி விடயங்களாக கொள்ளப்பட்டன. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்பது ஒரு குறிப்பிட்ட, நீண்டகால நோக்கிலானதாக கணிப்பிடப்பட்டது. ஏனெனில், அரசியல் தீர்வு பற்றி நாட்கணக்கில் - மாதக்கணக்கில் பேசிக் கொண்டிருக்கும் போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான, உடனடிப் பிரச்சினைகள் பின்தள்ளப்பட்டு விடக்கூடாது என்கிற வகையில் அது திட்டமிடப்பட்டது.



போர் முடிவடைந்த பின்னர் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் சில சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. ஆனால் அவை இடையில் தடைப்பட்டு விட்டன. இதற்கு காரணம் பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கத் தரப்பால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் நடைமுறைப் படுத்தப்படாமையே ஆகும். உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள், கட்டம் கட்டமாக அல்லது நீண்டகால நோக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் என பிரித்து இப்பேச்சுவார்த்தை கள் இடம்பெற்றன.

கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள கைதிகளின் பிரச்சினை, காணாமல் போனோரின் பிரச்சினை மற்றும், போரினால்

ஆனால், உடனடிப் பிரச்சினைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதாரண விடயங்கள் கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவேதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பேச்சுக் களிலிருந்து விலகிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னர், அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கூட்டமைப்பினர் பங்கேற்று பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்கிற வற்புறுத்தல் இன்று வரை தொடர்கின்றது. கூட்டமைப்பினர் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கேற்காமலிருப்பதே தீர்வு குறித்த முயற்சிகள் தள்ளிப்போவதற்கு காரணம் என அரசாங்கம் குற்றம் சுமத்தியும் வருகின்றது. அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள தெரிவுக்குழு மீது நம்பிக்கை இல்லாத விடயம் ஒரு புறமிருந்தாலும், முன்னர் இடம்பெற்ற பேச்சுக்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றை நடைமுறைப்படுத்தினால் மட்டுமே தெரிவுக் குழுவில் கலந்துகொள்வது பற்றி பரிசீலிக்க முடியும் என கூட்டமைப்பு தெரிவித்து வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலை யில்தான் இப்போது தென்னாபிரிக்காவின் அனுசரணை பற்றிய முனைப்புக்கள் தோன்றியுள்ளன. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு சர்வதேசத்தின் மத்தியஸ்தம் ஒன்றே இப்போதுள்ள வழி என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்புகின்றனர். தமிழ் மக்களும் அவ்வாறே எதிர்பார்க்கின்றனர். ஆனாலும், சர்வதேச மத்தியஸ்தத்தை அரசாங்கம் விரும்பவில்லை. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கடும்போக்காளர்களும் ஏனைய கடும்போக்கு சிங்கள அரசியல்வாதிகளும் வெளிநாட்டவரின் அனுசரணையை பகிரங்கமாகவே எதிர்த்து வருகின்றனர்.

ஆனால். 'அனுசரணை' 'மத்தியஸ்தம்' போன்ற சொல்லாடலுக்கு அப்பால், இரு தரப்பின் பேச்சுவார்த்தைகளை அவதானிக்க ஒரு கண்காணிப்பாளர்- சாட்சியாளர் இருப்பது பேச்சுக்களின் முன்னேற்றத்திற்கு ஆரோக்கியமானதாகவிருக்கும் என்பதே பொதுவான கருத்தாகவுள்ளது. முன்னர் விடுதலைப்புலிகளோடு, சர்வதேச மத்தியஸ் தத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தை களுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற மிதவாதத் தலைமைகளுடன் சர்வதேச அனுசரணையுடன் பேசுவதற்கும் நிறையவே வித்தியாசம் உள்ளது.

பேச்சுக்களும், அது முறிவடைந்ததும் கடுமையான போர் நடவடிக்கைகளும், பின்னர் ஒரு பேச்சும் அதன் பின்னர் போரும் என இடம்பெற்ற கடந்த கால அனுபவங்களை யாரும் மறந்துவிட முடியாது. பொதுவாக சொல்வதானால் போரிலிருந்து சற்று ஓய்வெடுக்கவும், அடுத்த கட்டப் போருக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளவுமே பேச்சுவார்த்தைகள் தேவைப்பட்டன. ஆனால், மிதவாதிகளுடன் பேசுகின்றபோது அவ்வாறானதொரு நிலை ஏற்படுவதில்லை. இது அரசாங்கத்திற்கு நன்றாக விளங்கும். ஆனால், இவ்வாறானதொரு பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் ஏன் தயங்க வேண்டும்? அதற்கு காரணம் இருக்கின்றது. ஒரு சாட்சியாளர் அல்லது கண்காணிப்பாளர் முன்னிலையில் பேசுகின்றபோது, அரசாங்கம் இணக்கம் தெரிவிக்கும் விடயங்களை தட்டிக்கழிக்க முடியாதநிலை ஏற்படும். இது அரசாங்கத்தின் காலங்கடத்தும் தந்திரோபாயத்தை பாதிப்பதோடு சர்வதேசத்திற்கு பதில் சொல்லும் இக்கட்டான நிலையையும் ஏற்படுத்தும். இதுதான் பிரச்சினை.

அமெரிக்க சார்புடைய மேற்கு நாடுகளை இப்போது வெறுக்கும் இலங்கை அரசாங்கம் தென்னாபிரிக்காவை வரவேற்றுள்ளமைக்கு என்ன காரணம் என்பதை ஆராய்வதற்கு முன்னதாக தென்னாபிரிக்காவின் வகிபாகம் இதில் எந்த வகையில் அமையப் போகின்றதென்பதுதான் கேள்வியாகவுள்ளது. அரச தரப்பிற்கும் தமிழர் தரப்பிற்குமிடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளுக்கு தென்னாபிரிக்கா உதவியளிப்பது குறித்து நீண்ட நாட்களாகவே பேசப்பட்டு வந்தது. உதாரணமாக, கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி ஜேக்கப் சூமா, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் இலங்கை அரசுடனும், தமிழ் தேசிய கூட்டமைப்புடனும் பேசி தமது நாட்டின் அனுபவங்களை பகிர்ந்துகொள்ள முன்வந்திருந்தார். இலங்கை அரசின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தீர்வைக் காண்பதற்கும் தென்னாபிரிக்க அரசு முன்வந்தது. இலங்கைக்கான இந்த விவகாரத்தைக் கையாள தென்னாபிரிக்கா வின் ஜனாதிபதி ஜேக்கப் சூமாவினால் விசேட தூதுவராக சிறில் ரமபோசா நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் குழுவினர் அண்மையில் தென்னாபிரிக்காவிற்கு அழைக்கப்படுவதற்கு முன்னதாக அரசதரப்பின் குழுவொன்று அங்கு சென்று பேச்சுக்களை நடத்தி யிருந்தது. அதன் பின்னரே கூட்டமைப்பினர் சென்றனர். தமது தென்னாபிரிக்க பயணத்தின் போது, பேச்சுவார்த்தைக்கு தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ரமபோசாவை தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியதாக கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் தென்னாபிரிக்க நாட்டின் வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார பிர- தியமைச்சர், தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் ஆகியோரையும் நாம் சந்தித்துக்

**- விகிர்தன் -**

தொடர்ச்சி 32ஆம் பக்கம்



# மே தினம் - மேன்மையான தினம்!

'அரசு விடுமுறை தொலைக்காட்சி சிறப்பு நிகழ்ச்சிகள் தியேட்டரில் அலைமோதும் கூட்டம்' தொழிலாளர் தினத்தில் இவை மட்டுமே கொண்டாட்ட அறிகுறிகளாகிவிட்ட நிலையில், தொழிலாளர்களின் இன்றைய நிலை குறித்தும், ஈஷாவில் சத்குரு தொழிலாளர்களிடத்தில் கொண்டுள்ள பிணைப்பு குறித்தும் இங்கே ஒரு பார்வை'

## தினந்தினம் மே தினம்!

காவிரி வெள்ளப்பெருக்கு
கண்டு நாளாச்சு,
இவனின் வியர்வைப் பெருக்கு
தீராத கதையாச்சு!

சாக்கடையைத் தூர்வாரி
சாலையையும் சலவை செய்து
டீக்கடைக்குப் போனால்,
அங்கே அவனுக்குத் தனி டம்ளர்.

கொத்தனாருக்கு வீடும் டிரைவருக்குக் காரும்
உழவனுக்கு நல்ல சோறும்
கிடைப்ப தெப்போது?!

நாளை இவன் இல்லை என்றால்
நாறிவிடும் நம் பொழப்பு!

இவனுக்காக இன்று,
வீதி எங்கும் பொதுக் கூட்டம்
நாடெங்கும் ஊர்வலங்கள்
நடக்கிறது ஜோராக!

'மே 1' மட்டுமல்ல
எல்லா(மே) அவனின் தினம்தான்.
- ராஜா கண்ணன், சிவகாசி

செருப்போ, சோப்போ, பற்பசையோ, முகம் துடைக்கும் கைக்குட்டையோ நாளை முதல் விற்பனைக்கு இல்லையென்றால், அப்போது நம் நிலை என்னவாகும்? நமது அன்றாட வாழ்வென்பது, எங்கோ உலகின் கடைக்கோடியில் இருக்கும், ஒவ்வொரு மனிதனின் உழைப்பையும் சார்ந்ததாகவே உள்ளது. ஆனால், நாம் உழைப்பாளர்களுக்குத் தகுந்த மதிப்பளிக்கிறோமா?

'சேவாதார்'

'சேவாதார் வந்துட்டாங்களா'?

'அந்த சேவாதார் அண்ணாகிட்ட இதக் குடுத்திடுங்க'

இப்படி, ஈஷாவில் 'சேவாதார்' என்ற வார்த்தை மிகவும் பிரசித்தி பெற்றுள்ளது.

நம்மால் மின்விசிறி இல்லாமல் இருக்க முடியாது. வெயிலில் செருப்பு இல்லாமல் நாலு அடிகூட எடுத்து வைக்க முடியாது. ஆனால் எங்கோ ஒருவர் நமக்காக செங்கல் சுமக்கிறார். கொளுத்தும் வெயிலில் ஒருவர் ரோடு போடுகிறார். நாம் சாப்பிட்ட தட்டினை ஒருவர் எடுத்துச் சுத்தம் செய்கிறார். மருத்துவமனைகளில் நோயாளிகளின் காயத்தை, தன் கைகளால் சுத்தம் செய்கிறாள் ஒரு பெண்.




Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

இவர்களை நாம் வெறும் தொழிலாளர்களாகப் (லேபர்ஸ்) பார்த்தால், அது நம் முதிர்ச்சியின்மையையே காட்டுகிறது. அவர்களின் உழைப்பில்லாமல், எவ்வளவு பணம் வைத்திருந்தாலும் நாம் சொகுசாக வாழ்வதென்பது சாத்தியப்படாது.

'இந்தாப்பா ஆட்டோ!'

'ஏய் சர்வர்! இந்த டேபிள நல்லா க்ளீன் பண்ணு.'

'டேய்'! லோடு வந்திருக்கு, மூட்டை எல்லாத்தையும் குடோன்ல இறக்கி வை!'

ஏன் இவர்களை இப்படி அழைக்க வேண்டும்?

'வேலை செய்யறதுக்கு சம்பளம் வாங்குறாங்கல்ல, அப்புறம் என்ன?' என்ற மனோபாவம் நம்மிடையே இருந்தால், நமது வாழ்க்கை வாழ்க்கையாக இல்லாமல் வியாபாரக் கணக்குகளுக்குள் சிக்கிச் சிதைந்துவிடும். நம்மால் செய்ய இயலாத வேலையை இன்னொருவர் செய்கிறார் என்பதை உணர்ந்தாலே, அவர் மீது நிச்சயம் மதிப்பு வரும். நாம் சிறுநீர் கழித்த இடத்தை, ஒரு மனிதர் தன் கைகளால் சுத்தம் செய்ய விருக்கிறார் என்பதை நினைத்துப் பார்த்தால், நமது வார்த்தைகளில் தானாக மரியாதை பிறக்கும்.

சேவாதார்?

'சேவாதார் வந்துட்டாங்களா?

"அந்த சேவாதார் அண்ணாகிட்ட இதக் குடுத்திடுங்க"

இப்படி, ஈஷாவில் 'சேவாதார்' என்ற வார்த்தை மிகவும் பிரசித்தி பெற்றுள்ளது. 'யார் இந்த சேவாதார்கள்'? 'இது என்ன புதுப் பதவியா?' என நீங்கள் கேட்பது புரிகிறது. ஆம், ஈஷாவில் பணிபுரியும் தொழிலாளர்களை சேவாதார் (சேவை செய்பவர்) என்றே அழைக்கிறோம்.

இது சத்குருவின் வேண்டுகோள்.

ஈஷாவில் ஆதியோகி ஆலயம், சூரியகுண்டம் என தியானலிங்கப் பரிக்கிரமாப் பணிகள் சில ஆண்டுகளாக இரவும் பகலும் முழுவீச்சில் தொடர்ந்து நடந்தன. பல தன்னார்வத் தொண்டர்களின் ஒத்துழைப்பு இருந்தாலும், எங்கெங்கோ வெளிமாநிலத்தில் இருந்து, தங்கள் குடும்பங்களைப் பிரிந்து, பிழைப்பு தேடி வந்துள்ள நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இல்லையென்றால் ஈஷாவில் நடக்கும் பணிகள் அவ்வளவு எளிதல்ல!

கடுமையான வார்த்தைகளுடன் விரட்டி விரட்டி வேலை வாங்கும் மேஸ்திரிகள் இங்கே கிடையாது. ஏதோ வாங்குகிற சம்பளத்திற்கு வேலை செய்வோம் என்றில்லாமல், இங்கே நடக்கும் பணியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டுள்ள சேவாதார்கள், தங்களின் முழு விருப்பத்தோடு சிரித்த முகங்களுடன் பணியாற்றுவதைக் காணமுடிகிறது.



சத்குரு வாசுதேவ்

பல ஆண்டுகளாக ஈஷாவில் துப்புரவுப் பணிபுரியும் பெரியவர் 'கருப்பு'. தரிசன நேரத்தின்போது, சேவாதார் கருப்பைக் கடந்து செல்லும் சத்குரு, எப்போதும் ஸ்பெஷலாக அவரை நமஸ்காரம் செய்து விட்டுப் போவார்.

'மூனு மாசத்துக்கு முன்னால, 'என்னம்மா முகம் ரொம்ப வாடிப்போயிருக்கு, ஏதாவது கவலையா?' ன்னு போற வழியில எங்கிட்ட கேட்டாரு குருசாமி (சத்குரு).

'நீங்க இருக்கும்போது எனக்கென்ன சாமி கவல'ன்னு நான் சொன்னவுடனே, அப்படி சிரிக்குறாருய்யா குருசாமி! அவரு அப்படிக் கேட்டவுடனே எங் கவலயெல்லாம் பறந்து போயிருச்சுயா!' என உணர்ச்சி பொங்கக் கூறிக்கொண்டிருந்த அந்த சேவாதார் அம்மாவிற்கு 60 வயதிற்கு மேல் இருக்கும்.

ஈஷாவில் தொழிலாளர்கள் என்றோ, கூலிகள் என்றோ எந்தப் பிரிவினையும் இல்லை, எல்லோரும் தங்களால் முடிந்த உழைப்பை முழு ஈடுபாட்டுடன் கொடுத்து, புன்னகை பூக்கும் முகங்களுடன் வலம் வருகிறார்கள். உங்களுக்கு முடி திருத்தம் செய்பவரை சேவாதார் என அழைப்பதற்கு சங்கோஜமாகக் கருதினால், அண்ணா என்றோ, தம்பி என்றோ அழைக்கலாம். உண்மையில், நீங்கள் அப்படி அழைக்கும்போது, உங்கள் மனமும் முகமும் ஒருவித இறுக்கத்திலிருந்து விடுபடுவதை உணர முடியும்.

இந்த உலகில் முதலாளிகள் என்று யாருமில்லை, நாம் செய்யும் முதலீடுகள் எதுவாயினும் இந்த இயற்கையிலிருந்து எடுக்கப்பட்டதே!

நம் அனைவருக்கும் ஒரே முதலாளி, இயற்கை மட்டும்தான்!

இந்தக் கட்டுரை 'காட்டுப் பூ' இதழில் வெளியாகியுள்ளது.




**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**



# மோட்கேஜ் கிளினிக்



தயா (PK) கந்தையா BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001083
**Cell : 416-716-8707**

ஜெ.(Jey) இராசதுரை. MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேண்டுமா?
- கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமேன்டையும் ஒரே பேமேண்டாக மாற்ற வேண்டுமா?
- ரீபைனான்ஸ் செய்ய வேண்டுமா?
- 2 வது மற்றும் 3வது மோட்கேஜ் தேவையா?
- பாங்க்ரப்சி செய்தோருக்கான மோட்கேஜ் தேவையா?
- உரிய நேரத்தில் மோட்கேஜ் தவணைப் பணத்தினை செலுத்தமுடியாது பவர் ஒப் சேலினை எதிர்நோக்குகிறீர்களா? உடனடித்தீர்வுக்கான ஆலோசனைகள் தேவையா?
- உங்கள் வீட்டினை வாடகைக்கு விட வேண்டுமா?
- அனைத்து ரியல் எஸ்டேட் சம்பந்தமான சேவைகளையும் குறைந்த செலவில் செய்ய வேண்டுமா?
- மற்றும் பல சேவைகள்

CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

rapid realty inc.®

80 Nashdene Road, Suite # 211. Toronto, ON. M1V 5E4.

# மாற்றத்திற்கான வழி பிரகாசமானதாக இல்லை!

## தாயக மடல்

ஒரு நாட்டில் ஜனநாயகம் நிலைத்திருக்க வேண்டுமானால் அந்நாட்டில் பலமானதொரு எதிர்கட்சி இருக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமானதாகும். இலங்கையில் இன்றுள்ள மோசமான நிலைக்கு பலமான எதிர்கட்சி ஒன்று இல்லாமையும் ஒரு பிரதான காரணமாகும். எதிர்கட்சி என்பது ஆளும் கட்சியின் எதிர்க்கட்சி என்பது பொருளல்ல. அவ்வாறு ஒரு எதிர்க்கட்சி செயற்படுவதும் தவறானது. உண்மையில் நாட்டின் எதிர்க்கட்சி என்பது ஒரு மாற்று அரசாகும். ***(Alternative Government)*** ஆளும் கட்சியின் சரி தவறுகளை சுட்டிக்காட்டி அதனை சரியான பாதையில் வழிநடத்துவதும், ஜனநாயக விழுமியங்களை ஆளும் தரப்பு தட்டிக்கழிக்க விடாமல் கட்டிக்காப்பதும் எதிர்கட்சியின் பொறுப்பு மிக்க கடமையாகும். சுதந்திரமடைந்த காலம் தொட்டு இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திர கட்சியுமே மாறி மாறி ஏற்று நடத்தி வந்திருக்கின்றன. பின்னர் வந்த காலங்களில் இப்பிரதான கட்சிகள் வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியை கைப்பற்றும் நிலை வந்தது. காரணம் தனிக் கட்சிகளின் ஆதிக்கம் காலம் கடந்து போய்விட்டது. இலங்கையில் மட்டுமல்லாது இந்தியாவிலும் இதேபோன்ற நிலைதான். இலங்கையில் இன்று ஆட்சி நடத்துவது கூட்டுக்கட்சிகள்தான். சிறீலங்கா சுதந்திர கட்சி பிரதான பாத்திரம் வகித்தாலும் பல கட்சிகள் இணைந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்கிற கூட்டமைப்பினது ஆட்சியே நடைபெறுகின்றது.

ஆனால், இன்று எதிர்கட்சி பலமிழந்து போயுள்ளமை நாட்டில் ஜனநாயகத் தன்மைக்கு மோசமானதொரு பாதிப்பை ஏற்படுத்தி விட்டுள்ளது. கடந்த தேர்தல்களை அவதானித்துப் பார்த்தால் ஆளும் தரப்பை, எவ்விதத்திலும் நெருங்கிச் செல்ல முடியாதபடி ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்து வந்திருக்கின்றது. இனி வரப்போகும் தேர்தல்களிலும் இந்நிலைதான் தொடரப்போகின்றது. அடுத்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தலோ அல்லது நாடாளுமன்ற தேர்தலோ நடைபெறக்கூடிய சாத்தியமுள்ள நிலையில், அதனை எதிர்கொள்ள எதிர்க்கட்சிகள் தயார் நிலையில் இல்லை. எதிர்க்கட்சிகளின் இந்தப் பலவீனத்தை நன்கறிந்த காரணத்தினால்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ சவால்விடும் தொனியில் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார். அதாவது, இப்போது நாட்டில் தேர்தல் அவசியமில்லை ஆனால், தேர்தல் தேவையெனில் எதிர்க்கட்சிகள் முடிவெடுத்து அறிவித்தால் அரசாங்கம் அதனை நடத்த தயாராக வுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.



**- வன்னியிலிருந்து ஆதித்தன் -**

இந்நிலையில், இலங்கை அரசாங்கத்தின் முன்னாள் இராஜதந்திர அதிகாரியான தயான் ஜயதிலக்க அண்மையில் தெரிவித்திருக்கும் கருத்தொன்றையும் கவனிக்கலாம்.

சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவராகவும், சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராகவுமானால் மாத்திரமே இலங்கை அரசியல் சமநிலைக்கு வரும் எனவும், இப்போது நாட்டில் சரியானதொரு எதிர்க்கட்சி இல்லை எனவும் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது தோன்றியுள்ள கடும்போக்குவாதிகளின் (பொது பல சேனா போன்ற அமைப்புகள்) நடவடிக்கைகளுக்கும் அரசியல் சமநிலை இன்மையே காரணம் என்றும் அவர் கூறுகின்றார். இந்த நிலையைப் போக்குவதற்கு, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவையும், சரத் பொன்சேகாவையும் ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களாக தேசிய பட்டியலின் ஊடாக உள்வாங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். அவர்கள் நாடாளுமன்றத்துக்குள் செல்வதால், அரசாங்கத் தரப்பில் இருந்தும் அவர்களுக்கு ஆதரவுகளை வழங்க சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

அவ்வாறு செய்தால் மாத்திரமே அடுத்த வருடம் நடைபெறும் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இல்லை என்றால், ஐக்கிய தேசிய கட்சியின் காலம் நிறைவடைந்து விடும் என்றும் அவர் எதிர்வு கூறுகின்றார். ஆனால், இது எந்தளவில் சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியே!

இன்று பிரதான எதிர்கட்சியாக உள்ள ஐக்கிய தேசிய கட்சியினால் உடனடியாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியா விட்டாலும் தனது பலத்தை மக்கள் மத்தியில் பெருக்கி ஒரு பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக வர முயற்சிக்கலாம்.

அவ்வாறு வரும் பட்சத்திலேயே ஒரு அரசியல் சமநிலை ஏற்படும். ஆனால், அதன் முதற்கட்டமாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையில் மாற்றம் ஏற்பட வேண்டும். கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியில் நிகழ்ந்த உட்கட்சி முரண்பாடுகள் காரணமாக பல உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு தாவினார்கள். இதன் காரணமாகவும் ஐக்கிய தேசியக்கட்சி பலவீனமடைந்தது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராகவுள்ள ரணில் விக்கிரமசிங்க தனது தலைமைப் பதவியை விட்டுக் கொடுக்காமலிருப்பதும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணமாகப் பார்க்கப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதியான பிரேமதாஸவின் புதல்வர் சஜித் பிரேமதாஸ போன்றோரிடம் கட்சித் தலைமையை ஒப்படைத்தால் கட்சியில் ஒரு மாற்றம் ஏற்படலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஆனாலும், அதற்கு ரணில் தயாராக இல்லை.

இதில் நல்லதொரு உதாரணமாக மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) நடவடிக்கையை குறிப்பிடலாம். ஜே.வி.பியின் தலைவராக இருந்த சோமவன்ஸ அமரசிங்க தனது தலைமைப் பதவியை கட்சியின் இளைய தலைமுறையிடம் கையளித்துள்ளார். அனுரகுமார திசாநாயக்கவிடம் அதனை ஒப்படைத்தார். அந்த நிகழ்வில் அவர் உரையாற்றும் போது கட்சியின் வளர்ச்சியே முக்கியமானது, பதவிகளல்ல எனவும், தாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியை போன்று பதவியை கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பவர்களல்ல எனவும் குறிப்பிட்டிருந்தார். அண்மையில் நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல்களில் முன்னரை விடவும் அதிக வளர்ச்சியினை ஜே.வி.பி அடைந்துள்ளதையும் இதன் மூலம் காணமுடிந்தது. ஆனால், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறானதொரு முடிவை எடுக்க முன்வரப் போவதில்லை. அதே நேரத்தில் ஏனைய எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு பொதுவான வேலைத் திட்டத்தின் கீழ் தேர்தல்களை எதிர் கொள்ளக்கூடிய ஆளுமை மிக்கவராகவும் அவர் இல்லை. இந்த நிலையில் நாட்டில் ஒரு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதோ அல்லது பலமான எதிர்கூட்டணி ஒன்று உருவாவதோ இப்போதைக்கு சாத்திய மில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. இன்று ஆளும் அரசாங்கத்தை எடுத்துக் கொண்டால் பொது பல சேனா போன்ற கடும்போக்குவாதிகளை கட்டுப்படுத்தக் கூட முடியாத நிலையிலுள்ளது. அதற்கு காரணம் வாக்கு வங்கியை தக்கவைக்க வேண்டும் என்கிற கொள்கையுடனான அதன் நோக்கமும் செயற்பாடும் தான்.

கடும்போக்காளர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தினாலோ அல்லது அவர்களின் குற்றங்களை தண்டிக்க முற்பட்டாலோ குறித்து கடும்போக்காளர்களின் பின்னாலுள்ளவர்களின் வாக்குகளை இழக்க வேண்டியிருக்கும் என அரசாங்கம் பயப்பிடுவதாகவே தோன்றுகின்றது.

ஒட்டுமொத்தமாக பார்ப்போமானால், நாட்டிலுள்ள பல்வேறு குணாதிசயம் கொண்ட அனைத்து தரப்பினரையும் வாக்கிற்காக அரவணைத்துப் போகும் நிலையில் அரசாங்கம் செயற்படுவதும், எதிர்கட்சிகள் பலமழிந்து ஒன்று சேர முடியாத நிலையும் இந்த அரசாங்கம் மேலும் தொடர்ந்து பலமாக ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. இன்னும், ஒரு பொது வேலைத்திட்டம் குறித்து சிந்திக்கவோ, அதற்கான ஒரு அடியைக் கூட எடுத்துவைக்கவோ முடியாமலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினால் அடுத்து வரப்போகும் தேர்தல்களில் கூட இந்த அரசாங்கத்தை அசைக்க முடியாத நிலையே ஏற்படப் போகின்றது. எனவே, இலங்கையில் ஜனநாயகத்திற்கான வெளி இன்னும் எவ்வளவு காலத்திற்கு வெறுமையாக இருக்கப் போகின்றது என்பதுதான் இன்று விடைதெரியாத கேள்வியாகவுள்ளது.

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

விளம்பரம் பத்திரிகையை
இணையத்தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# தரமான கிறடிட் பெறுமதியை பெறுவது எப்படி?




**தொடர் - 414**

## CREDIT RATING

அடமானக் கடனைப் பெறுவதற்கு, வாகனக் கடன் அல்லது கிறடிற் காட் பெறுவதற்கு தரமான கிறடிட் பெறுமதியை (Score) வைத்திருப்பது மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. மனிதரை நம்பா விட்டாலும் கிறடிட் பெறுமதியை நம்பியே இந்தக் காலம் நகர்கின்றது. அந்த அலையிலே நாம் எல்லோரும் செல்ல வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறோம். எனவே எவ்வாறு தரமான கிறடிட் பெறுமதியை (Credit score / good credit rating) பெறலாம் அல்லது தொடர்ந்து தக்க வைக்கலாம் என்பதனை ஆராய்வோம்.

தரமான கிறடிட் பெறுமதியைக் கொண்டிருக்கா விட்டால் முதலாவதும் முக்கியமானதாகவும் கடன் பெறுவதோ, வாடகைக்கு இடம்பெறுவதோ கடினமாகலாம், அவ்வாறு கடன் பெற்றாலும் வட்டிக்கடன் அதிகரிக்கலாம். அல்லது கடனைத் திருப்பி அடைக்கும் காலம் (Amortization) அதிகரிக்கலாம். அல்லது அதிக ஆரம்ப முதலீடு கேட்கலாம். (Higher down payment) அல்லது Co-signer/ Guarantor இன் உதவியைக் கூட நிர்ப்பந்திக்கலாம். இவற்றில் முதலிடம் (Credit Score) ஆகும்.

எமது கடவுட்சீட்டை (passport) எவ்வாறு கவனமாக பாதுகாக்கிறோமோ அவ்வாறே Credit Score ஐயும் பாதுகாக்க வேண்டும். பொதுவாக கிறடிட் பெறுமதி 300 இற்கும் 900 இற்கும் இடையில் காணப்படும். பெரிய பெறுமதி சிறந்ததாக கருதப்படும். அனேகமாக 600 இற்கு குறைந்த பெறுமதியான கிறடிட் பெறுமதி நல்லதாக கொள்ளப்படமாட்டாது. எனவே குறைந்த




பெறுமதியான கிறடிட் ஐ கொண்டவர்கள். தமது பெறுமதியை அதிகரிக்க வழி கண்டு பிடிக்க வேண்டும். முக்கியமாக வீடு வாங்க Credit Score மிக முக்கியமானதாகும்.

எமது கிறடிட் பெறுமதியின் பெரும்பகுதி பிந்திக் கொடுப்பனவு செய்தல் மோசமானது. கொடுப்பனவு செய்யாமல் தவிர்ப்பது மிகவும் மோசமானது. சிறிய பெறுமதியானாலும், பெரிய பெறுமதியாக இருந்தாலும் எதுவாயினும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கொடுப்பனவு செய்வது மிகவும் முக்கியம். சிலர் மொத்தக்கடனை ஒன்றாக திருப்பி செலுத்தலாம் எனவும் கூறியுள்ளார்கள். அது சரியான முறையல்ல. சிறிய அளவானாலும் அந்தந்த காலத்தில் திருப்பி செலுத்த வேண்டும்.

கால எல்லைக்குள் குறைந்த பெறுமதியை (Minium Payment) செலுத்தியாக வேண்டும்.

கடனை மீளச்செலுத்தும் காலத்தை ஞாபகத்தில் வைத்திருக்க முடியாமல் இருந்தால் தானியங்கி திருப்பி கொடுப்பனவு (Automatic Withdrawal) முறையை பின்பற்றலாம்.

எமது கடன் தொகையின் அதிகபணத்தை பாவித்திருந்தாலும் கிறடிட் பெறுமதி குறையக் கூடிய சந்தர்ப்பம் உண்டு. (உதாரணமாக $5000 மொத்த கடன் தொகையில் $3000 ஐப் பாவித்தால் 60% பாவிக்கப்பட்டுள்ளது. அதாவது 50% இற்கு மேலாக பாவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக 50% இற்கு மேல் பாவிக்கும் போது Credit Score குறைய சந்தர்ப்பம் உண்டு.

நீண்ட காலமாக எமது கிறடிட் ஐ நல்ல முறையில் பராமரித்து வருவதும் சிறந்ததாக கொள்ளப்படும். சிலர் தமது கிறடிட் காட்டை பாவிக்காமல் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். அதுவும் நல்லதல்ல. சிறிய பணத்தையாவது பாவித்து குறிப்பிட்ட காலத்தில் திருப்பி செலுத்துதல் வேண்டும். Credit Bureau எமது திருப்பி கொடுப்பனவு செய்யும் முறையை (Repayment Patern) மிகவும் கவனமாக பார்க்கும்.

எத்தனை கடன் தருபவர்கள் (Lenders) எமது கிறடிட்டை பார்க்கிறார்கள் என்பதும் முக்கியம். பொதுவாக 5 இற்கு மேற்பட்ட நிறுவனங்களில் கிறடிட் காட்டிற்கு பத்திரம் நிரப்பும் போது (Completing Application Form) சகலரும் எமது கிறடிட் ஐ எடுப்பார்கள்.

தொடர்ச்சி 24ஆம் பக்கம்

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated



"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

*Raja Mahendran*, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

**CHURCH & ROSSLAND HOUSE FOR SALE**



4 + 1 Bedroom house for sale. Finished bsmt. Great location Pickering village, very spacious, full of sunlight.

**Asking price: 649,000**

**HWY 427 & BURHAMTHORPE CONDO FOR RENT**

2 Bedroom condo. for rent. 2 Washrooms. Laminate floors. Close to major Highways, airport & Downtown, Grocery stores.



**Asking price: $1,450**

## இந்திய நாடாளுமன்றத் தேர்தல் 2014

# தமிழ்நாடு: ஓர் அலசல் ஜெயிக்கப்போவது யாரு?

சென்ற இதழ் தொடர்ச்சி

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு நிலவரம் குறித்து சென்ற இதழில் பார்த்தோம். அதில் அ.தி.மு.க., தி.மு.க. கட்சிகளின் நிலை பற்றி அலசியிருந்தோம். தேர்தல் அறிவிப்பு வெளியான போது அ.தி.மு.க.வினரிடம் இருந்த உற்சாகம் குறைந்துள்ளதாகவும் மாறாக தொடக்கத்தில் உற்சாகம் இல்லாமல் இருந்த தி.மு.க.வினர் உற்சாகமடைந்திருப்பதையும் கண்டோம். ஆனால், ஏப்ரல் 24 அன்று தேர்தல் முடிந்துள்ள நிலையில், ஆளும் கட்சி அதிகாரமும் அதன் மூலம் கடைசி இரண்டு நாட்களில் கச்சிதமாக பணப்பட்டுவாடாவை முடித்துவிட்டதும் அ.தி.மு.க.வினரிடம் பழைய உற்சாகத்தைக் கொண்டு வந்திருக்கிறது. வாக்காளர்கள்தான் கொஞ்சம் நொந்து போயுள்ளனர். கடந்த சட்டமன்றத் தேர்தலில் ஒரு ஓட்டு மதிப்பு 2000 ரூபாய் வரை உயர்ந்திருந்த நிலையில் தற்போது ஓட்டுக்கு தலா 200 ரூபாய்தான் விநியோகிக்கப்பட்டுள்ளது!

இனி மற்ற கட்சிகள் நிலவரம் பற்றி பார்ப்போம்.

### எளிய மக்கள் கட்சி

'ஆம் ஆத்மி' புதிய கட்சி மட்டுமல்ல அரசியலுக்கு புதியவர்களின் கட்சியும்கூட. 'என் 44 வருடப் பொது வாழ்க்கையில் நான் உறுப்பினராக சேரும் முதல் கட்சி இதுதான்' என்கிறார், இக்கட்சியின் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் வேட்பாளர் பத்திரிகையாளர் ஞாநி. இக்கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் நிலையும் இதுதான்.




இந்திய மத்திய அரசில் காங்கிரஸ், பா.ஜ.க.வுக்கு மாற்று உருவானால்தான் இந்திய அரசியலில் ஆரோக்கியமான மாற்றங்கள் வரமுடியும் என்று பலர் நினைப்பது போலவே, தமிழகத்தில் தி.மு.க, அ.தி.மு.க ஆகிய கட்சிகளுக்கு மாற்று உருவானால்தான் தமிழக அரசியலில் ஆரோக்கியமான மாற்றங்கள் வரமுடியும் என்று நினைப்பவர்கள் கணிசமாக இருக்கிறார்கள். ஆனால், இவர்களுக்கு தேர்வு செய்ய ஒரு மாற்று கட்சிகூட இல்லை என்னும் நிலைதான் எல்லா தேர்தல்களிலும் இருந்தது. கம்யூனிஸ்டுகள் உட்பட எல்லா கட்சிகளும் இந்த இரண்டு பெரிய கட்சிகளின் எதாவது ஒரு அணியில் கூட்டு சேர்ந்துவிடுவதால் வாக்காளர்களுக்கு தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகளில் ஒன்றை தேர்வு செய்தாக வேண்டிய நிலை. மூப்பனார் தா.ம.கா. தொடங்கிய போது ஒரு மாற்றுக் கட்சியை உருவாக்கும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. ரஜினிகாந்த் வாய்ஸூம் அப்பொழுது அவருக்கு உதவியிருக்கும். ஆனால், அதனை அவர் சரியாக பயன்படுத்திக்கொள்ளாமல் கருணாநிதியின் அரசியல் மறுபிரவேசத்துக்கு கொடுத்துவிட்டார். விஜயகாந்த் கட்சி தொடங்கி தி.மு.க, அ.தி.மு.க. இரண்டுடனும் கூட்டணி சேரமாட்டேன் எனத் தனித்து நின்றதால் தே.மு.தி.க. ஒரு மாற்று சக்தியாக வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கடைசி சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்ததுடன், அதன்பிறகான தே.மு.தி.க. செயல்பாடுகள் தி.மு.க., அ.தி.மு.க. போல்தான் அக்கட்சியும் என்ற எண்ணத்தையே வாக்காளர்கள் மத்தியில் உருவாக்கி யிருக்கிறது. இந்நிலையில் மாற்றத்தை விரும்பும் வாக்காளர்களின் தேர்வாக உதயமாகியிருக்கிறது 'ஆம் ஆத்மி'. டில்லியில் கடைசி சட்டமன்றத் தேர்தலில் வென்று, காங்கிரசுக்கும் பிஜேபிக்கும் மாற்றாக இன்னொரு சக்தி இருக்கமுடியும் என்ற மக்கள் நம்பிக்கையை தூண்டியதால், இன்று நாடு முழுவதும் 'ஆம் ஆத்மி' மீதான நம்பிக்கை இளைய தலைமுறையினரிடம் மலர்ந்திருக்கிறது. 'ஆரோக்கியமான அரசியல் அம்சங்களின் தொகுப்பாக இக்கட்சி வளரும் வாய்ப்பு இருக்கிறது' என்கிற நம்பிக்கையை சமூக ஆர்வலர்கள், கலைஞர்கள் மத்தியிலும் ஆம் ஆத்மி உருவாகியிருக்கிறது. தமிழகத்தில் ஆம் ஆத்மி வேட்பாளர்கள் வெற்றிபெறுவார்கள் எனச் சொல்ல முடியாது. ஆனால், நிச்சயம் கணிசமான வாக்குகளைப் பெறுவார்கள் என நம்பப்படுகிறது. அது தி.மு.க., அ.தி.மு.க. இரண்டு கட்சிகளில் யாருக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தேர்தல் முடிவுகளில் தெரியும். ஆனால், ஆம் ஆத்மி வரவால் தே.மு.தி.க. பெரும் பாதிப்படையும் என்பது நிச்சயம்.

### தே.மு.தி.க

மேலே பார்த்தது போலவே தி.மு.க., அ.இ.அ.தி.மு.க ஆகிய கட்சிகளுக்கு மாற்று உருவானால்தான் தமிழக அரசியலில் ஆரோக்கியமான மாற்றங்கள் வரமுடியும் எனக் கருதும் வாக்காளர்களுக்கு வேறு வாய்ப்புகள் இல்லாமல் இருந்ததுதான், சென்ற தேர்தல்களில் தே.மு.தி.க.வின் பலமாக இருந்தது. ஆனால், தற்போது அவர்களுக்கு பல வாய்ப்புகள். ஆம் ஆத்மி என்ற புதிய கட்சியின் வரவு மட்டுமல்லாமல், கம்யூனிஸ்டுகள் வேறு தனித்து நிற்கிறார்கள். எனவே, இந்தத் தேர்தல் தே.மு.தி.க.வுக்கு நிச்சயம் பெரும் பின்னடைவாகத்தான் இருக்கப் போகிறது. பி.ஜே.பி., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளுடன் கூட்டணி

அமைத்து நின்றாலும் சென்ற தேர்தல்களில் விஜயகாந்த் தனியாக நின்றபோது வாங்கிய வாக்குகளைவிட இந்தத் தேர்தலில் குறைவாகவே வாங்க வாய்ப்புள்ளது. அது இனி வரும் தேர்தல்களில் கூட்டணி பேச்சுவார்த்தைகளில் அவரது பலத்தைக் குறைக்கும்!

### பா.ம.க

திராவிடக் கட்சிகளுடன் மாறிமாறி கூட்டு சேர்ந்து டெல்லியில் பதவிகளை அனுபவித்த பா.ம.க. இனி எந்த திராவிடக் கட்சியுடனும் கூட்டு இல்லை என்று அறிவித்திருந்தது. ஆனால், இன்னொரு திராவிடக் கட்சியான ம.தி.மு.க. இருக்கும் பி.ஜே.பி. அணியில் இணைந்துதான் இக்கட்சி தேர்தலை சந்தித்திருக்கிறது. அதைவிட முக்கியம் விஜயகாந்த் இருக்கும் அணியில் இருப்பது. இது, பா.ம.க.வில் தற்போது அன்புமணியின் முடிவே இறுதி முடிவு என்பதையும் மருத்துவர் ராமதாஸின் பிடி தளர்ந்திருக்கிறது என்பதையும் உறுதிபடுத்தியிருக்கிறது. மத்தியில் அமைச்சராக இருந்த அன்புமணிக்கு டெல்லி அரசியலின் சுவை தெரியும். எனவேதான், கட்சியில் மற்றவர்களின் எதிர்ப்பையும் தாண்டி அவர் பாஜகவுடன் கூட்டணி அமைப்பதில் விடாப்பிடியாக இருந்தார். கொள்கையைக் காட்டிலும் அதிகாரத்துக்குச் செல்லவேண்டும் என்பதை முன்னிறுத்தியே அவரது அணுகுமுறை இருக்கிறது. வன்னியர் சாதி சங்கமாக உதயமாகி, பிறகு பாட்டாளி மக்கள் கட்சி என அரசியலுக்கு வந்த ராமதாஸ், கடைசி இரண்டு தேர்தல்களில் சந்தித்த பின்னடைவுக்குப் பிறகு மீண்டும் சாதி அரசியலுக்கு திரும்பினார். தர்மபுரி சம்பவம் போன்ற சாதி உணர்வைத் தூண்டும் கலவரங்களை ஊக்குவித்தார். அதன் பலன்களை இத்தேர்தலில் அறுவடை செய்யலாம் என நினைத்துள்ளார். அந்த தைரியத்தில்தான் இதுவரை தேர்தலைச் சந்திக்காத அன்புமணி தர்மபுரி தொகுதியில் நின்றார். அதில் அவர்கள் வெற்றியும்



## - வாக்காளன் -

பெறுவார்கள் எனத்தான் தெரிகிறது. தர்மபுரி உட்பட பா.ம.க. நின்ற அனைத்துத் தொகுதிகளிலும் ஓட்டுப்பதிவு அதிகமாக இருப்பது, பா.ம.க.வுக்கு வெற்றி வாய்ப்புகளை அதிகரித்திருக்கிறது.

### ம.தி.மு.க

ஆந்திராவில் என்.டி.ராமராவ் என்ற ஜாம்பவானை வீழ்த்தி கட்சியைக் கைப்பற்றிய சந்திரபாபு நாயுடு மாதிரி, கருணாநிதியை வீழ்த்தி தி.மு.க.வைக் கைப்பற்றக்கூடியவர் என ஒரு காலத்தில் நம்பப்பட்டவர் வைகோ என்ற வை.கோபால்சாமி.

ஆனால், கட்டெறும்பு தேய்ந்து கடுகு ஆன மாதிரி இன்று ஒரு சிறு கட்சியாக சுருங்கிவிட்டது, ம.தி.மு.க. 'அவர் ரொம்ப நல்லவர் அவர் மட்டுமாவது ஜெயிக்க வேண்டும்' என்பதுதான் ம.தி.மு.க.வையும் வைகோவையும் பற்றி, ஒவ்வொரு தேர்தலிலும் தமிழகம் முழுக்க அரசியல் பார்வையாளர்களின் எண்ணமாக இருக்கும். ஆனால், வைகோ ஒவ்வொரு தேர்தலிலும் தோற்றுக்கொண்டே வருவார். இந்தமுறையாவது வெல்வாரா? தி.மு.க. வேட்பாளர் தேர்வு சரியில்லை என்பதால், வைகோவுக்கு இந்தமுறை 50:50 வாய்ப்புள்ளது என கருத்துக் கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன. வைகோ நிற்கும் விருதுநகர் தொகுதி தேவர் சாதியினர் அதிகமுள்ள தொகுதி அவர்களுக்கு அடுத்தபடியாக நாடார் சாதியினர் அதிகமுள்ளனர்.

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

AERO COURIER
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
Tel: 416.292.0444
5635 Finch Ave East Unit 2&3
Toronto On.M1B 5K9

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இலவச ஆலோசனை வழங்கப்படும்



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.
இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796
வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)



Sell your home **faster** and more **money**

Markham/Finch
$429,000
3+3 Bedrooms, 2 W Rooms
Newer Roof, Newer Windows, Huge Backyard W/Big Deck,

Bayly/Pick Beach Rd
$499,900
4 Bedrooms, 3 W Rooms
Main Floor Laundry,Open Concept From Living To Eat In Kitchen

Markham Rd/Steeles Ave.
$549,000
3 Bedrooms, 3 W Rooms
Finished Basement W/Thermally Insalated Cork Floors

Salem/Taunton
$549,900
4 Bedrooms, 3 W Rooms
Professionally Landscaped Front And Backyard! Amazing Wide Ravine Lot!

Main St Stouffville/10th Line
$549,900
4 Bedrooms, 4 W Rooms
Brand Newer Stainless Steel Kitchen Appliances, Professionally Painted

Bur Oak/ Markham
$569,000
4 Bedrooms, 3 W Rooms
Convenient Main Floor Laundry, Move In Condition,Great Location

16th Ave/Donald Cousens Pkwy
$614,900
4+1 Bedrooms, 4 W Rooms
Mirrored Closets, Gas Fireplace, Pot Lights, Breakfast Area,

Neilson/Staines
$648,800
4+1 Bedrooms, 4 W Rooms
Finished Bsmt W 1 Bedroom, & Entertainment Room

Salem/Taunton
$675,900
4 Bedrooms, 4 W Rooms
9Ft Ceilings, Pot Lights, Hardwood Floors And Shutters Throughout

E Of Mccowan / 16th Ave
$709,900
4+1 Bedrooms, 4 W Rooms
Professionally Finished Basement With Bathroom, Oak Staircase

Brimley/Highglen
$739,000
4+1 Bedrooms, 5 W Rooms
Prof Fnshd Bsmt With Ensuite Bdrm,New Rf/2011

9th Line/14th Ave
$759,900
4 Bedrooms, 4 W Rooms
Potlights,Double Door Entry ,Huge Family Room And Kitchen

9th Line/14th Ave
$779,000
4 Bedrooms, 3 W Rooms
Pot Lights,Crown Moulding,Upgraded Light Fixtures&Shade-O-Matic Shutters

Castlemore/Alfred Paterson
$799,000
4 Bedrooms, 4 W Rooms
Pot Lights, French Door, Semi Stone Front, Marble Fire Place

Aurora Road East Of Mccown Rd
$2,899,999
5 Bedrooms, 6 W Rooms
Architecture Are Showcased In The Home, Situated On A Panoramic Size Cul-De-Sac

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent
**Your home sold in 30 days or we buy it**



RE/MAX

**Elaguppillai Srinathan (Mike) B.Sc**
Sales Representative/Builder
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@yahoo.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770

I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

KZG 647-200-5833

# புதுப்பிக்கப்படாத சாரதி அனுமதி பத்திரமும் கைகொடுக்காத காப்புறுதியும்

## கனடிய தகவல் தொடர் 218

'மில்லர் எதிர் கார்லூச்சியோ' (Miller Vs Carluccio) என்னும் வழக்கில் கனடிய உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை அடிப்படையாக வைத்து நீதித்துறை சம்பந்தப்பட்ட தகவல்கள் வெளிவரும் சஞ்சிகை ஒன்றில் கனடிய வக்கீல் திரு. மார்க் மேசன் (Mr. Mark Mason) எழுதியிருந்த கட்டுரை ஒன்று சாரதி அனுமதி பத்திரம் வைத்திருந்து வாகனம் செலுத்தும் சகலரையும் சற்று எச்சரிக்கை செய்யும் விதமாகவே அமைந்திருந்தது.

அது வேறு ஒன்றுமல்ல 'நடந்த சம்பவம் இதுவே தான்'

திரு. பாற் கார்லூச்சியோ (Mr. Pat Carluccio) என்பவர் செலுத்திக் கொண்டு போன '2001 ஆம் ஆண்டு 'போர்ட் ஸ்போர்ஸ்' (Ford Sports) வாகனம் ஒன்று ஏப்ரல் 11, 2006 இல் இன்னொரு வாகனத்துடன் விபத்துக்குள்ளானது. அவரின் குடும்பத்துக்கு சொந்தமான கட்டிட கம்பனிக்கு உபயோகிக்கும் இவ்வாகனத்தினை அங்கு ஊழியராக பணி புரியும் இவரும் வாகனம் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டவர் என்று இந்த வாகன காப்புறுதியில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் ஏற்கனவே பல வருடங்கள் வலிமையாகவிருந்த அவரது சாரதி அனுமதிபத்திரம் விபத்து நடைபெறுவதற்கு மூன்று மாதத்தின் முன்பே காலாவதியாகி யிருந்ததும், அவரும் அதனை கவனிக்காது புதுப்பிக்காமல் விட்டது அவருக்கும் விபத்து நடந்த போது பொலிசார் சுட்டிக்காட்டிய தருணத்திலேயே திகைப்புடன் தெரியவந்தது.

- 'கவனமில்லாமல் வாகனம் செலுத்தியது' (Careless driving)
- நெருக்கமாக பின் தொடர்ந்தது' (Following too closley)
- அனுமதி பத்திரம் இல்லாது வாகனம் செலுத்தியது' (Failure to have valid drivers's license)

என மூன்று வெவ்வேறு குற்றசாட்டுகளில் தண்டனை ரிக்கற் வழங்கப்பட்டது. நீதிமன்ற விசாரணைக்கு மனு செய்த இவர் முதல் இரு குற்றங்களையும் ஏற்றுக்கொண்டார். ஆனால், ஒன்ராரியோ போக்குவரத்து அமைச்சிலிருந்து சாரதி அனுமதி பத்திரம் காலாவதியாகும் திகதி அண்மிக்கும் நேரம் புதுப்பித்தலை நினைவூட்டும் கடிதம் வரவில்லை என்பதனை அவர் உறுதி செய்தபோது, அதேகாலத்தில் மாகாண போக்குவரத்து அமைச்சு ஊழியர்களின் வேலை நிறுத்தமும் நடந்தபடியால், அந்த ரிக்கற்றினை நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது.

அந்தப்பிரச்சினையிலிருந்து தப்பியது அவருக்கு சிறிது நிம்மதி மாதிரி அந்த நேரம் அமைந்துவிட்டது. அடுத்த சட்டப்பிரச்சினை அவரை நோக்கி வாகன காப்புறுதி நட்டஈடு கோரல்களில் எழுந்தது.




வாகன காப்புறுதி நட்டஈடு கோரும் நிபந்தனைகளில் (statutory condition for automobile policy) வாகனம் செலுத்துவ தற்கு அதிகாரபூர்வமான சாரதி அனுமதி பத்திரம் வைத்திருத்தல் வேண்டும் என்பது உறுதியாக வரைவிலக்கணம் படுத்தப்படு கின்றது. இங்கு விபத்து நடந்த நேரம், வலிமையான சாரதி அனுமதி பத்திரம் இல்லாத காரணத்தினால், இவரது உடல் காயத்திற்கோ, அல்லது வாகனத்தின் இழப்புகளுக்கோ இவரது காப்புறுதி கம்பனி நட்டஈடு வழங்குவதனை உறுதியாக மறுத்து விட்டது. பரவாயில்லை, அவரும் அதனை சகித்துக் கொண்டு ஏற்றுக்கொண்டு போக வேண்டிய நிலைமையினை தவிர வேறு வழியில்லை.

ஆனால் காப்புறுதி நட்டஈடு கோரலில் அடுத்து மூன்றாம் கட்டப்பிரச்சினை தலை தூக்கியது. அதாவது விபத்தின்போது தப்பு இவரது பக்கம் என்றபடியால், பாதிக்கப்பட்ட மூன்றாம் நபர் தமது காப்புறுதி கம்பனி யினூடாக, இவரது காப்புறுதி ஒப்பந்தத்திலிருந்து அறவிடமுயற்சிக்கும் போது, இவரது ஒப்பந்தத்தின் 'பொறுப்பு காப்புறுதி பிரிவிலிருந்து' (liability coverage) நட்டஈடு வழங்கியே தீர வேண்டும். அங்கும் விபத்து நடந்த நேரம் சாரதி அனுமதி பத்திரம் இல்லாது வாகனம் செலுத்தியபடியால் மூன்றாம் நபரின் பாதிப்புக்குரிய நட்டஈடும் மறுக்கப்பட்டு விட்டது. மூன்றாம் நபரின் இழப்புக்கு மூன்றாம் நபரின் கம்பனி நட்டஈடு வழங்கி விட்டு அதனை இவரிடமிருந்து சட்டரீதியாக அறவிட இவரை பின்னால் துரத்த தொடங்கியது.

வாகன காப்புறுதி சட்டங்களின்படி வாகன உரிமையாளரின் அனுமதியின்றி அவரது வாகனம் ஒன்றினை எடுத்து ஓடியவர் விபத்தினை உருவாக்கி, வீதியால் போன மூன்றாம் நபருக்கு பாதிப்பை ஏற்படுத்தி னால், அங்கு வாகன உரிமையாளருக்கு பாதிப்பு எதுவுமில்லாது மூன்றாம் நபருக்கு அவரின் காப்புறுதியில் இருந்து நட்டஈடு வழங்கப்படும். பின்னர் அனுமதியில்லாமல் வாகனத்தினை எடுத்து செலுத்திய நபரிடம் சட்டரீதியாக அது அறவிடப்படும்.

ஆனால் இங்கு வாகனம் செலுத்தி விபத்துக் குள்ளானவரும் காப்புறுதி ஒப்பந்தத்தில் பதியப்பட்டவர். கம்பனிக்கு தெரியாமல் கம்பனி வாகனத்தினை எடுத்து ஓட்டினார் என்ற வாதம் எடுபடாது. அவர் அனுமதி பத்திரம் இல்லாது வாகனம் செலுத்தி விபத்து நடந்தபடியால் தமது பாதிப்புகளுக்கும் நிவாரணம் இல்லாமல் போனதுடன், தம்மால் பாதிக்கப்பட்ட ஏனையோருக்கும் இவர் பதில் கூற வேண்டும். இந்தப் பிரச்சினை இவரால் வாகனக்காப்புறுதிக் கம்பனிக்கு எதிராக உயர் நீதிமன்றம்வரை எடுத்து செல்லப்பட்டது.

உயர்நீதிமன்ற தீர்ப்பிலும் சாரதி அனுமதி பத்திரம் என்பது வாகனம் செலுத்தும் ஒரு சலுகையினை ஒரு குறிப்பிட்ட காலத்திலிருந்து அது காலாவதியாகும் ஒரு குறிப்பிட்ட திகதிவரை (சராசரி ஐந்து வருடங்கள்) அரசு வழங்கியுள்ளது. அந்தக் காலம் முடிவடைந்து விட்டால் அதனை புதுப்பித்து மீண்டும் அந்த சலுகையினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு புதுப்பிக்காவிட்டால் சலுகை மறுக்கப்பட்டது என்பதே அர்த்தமாகும். இவ்வாறு சலுகை மறுக்கப்பட்டவர் அதனை மீறி வாகனம் செலுத்தி உருவாக்கிய விபத்துக்களுக்கு காப்புறுதி கம்பனி பொறுப்பு எதுவும் எடுக்கவேண்டிய அவசியம் இல்லை எனவும் விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு இவரே நேரடி பொறுப்பாளி ஆகின்றார் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வாறு சட்டரீதியாக பொறுப்பாளி ஆகும் போது அவரது நிரந்தர வருமானம், வீடு, வங்கி கணக்குகள், சொத்துக்கள் யாவற்றினையும் நீதித்துறை எந்த சந்தர்ப்பத்திலும் முடக்கலாம். போக்கு வரத்து அமைச்சு சாரதி அனுமதி பத்திரத்தினை புதுப்பிக்க வேண்டும் என நினைவூட்டி கடிதம், வேலை நிறுத்தம் காரணமாக அனுப்பத் தவறியது என்ற வாதங்கள் எவற்றினையும் இங்கு நீதிமன்றம் ஏற்கவில்லை. இந்த செய்தியிலிருந்து நாம் அறிந்து கொண்ட பாடம் யாதெனில் தங்களின் சாரதி அனுமதி பத்திரம் காலாவதியாகி விட்டதா? அல்லது ஏதாவது தண்டனைப்பணம் செலுத்தாது தடைப் பட்டுள்ளதா? என்பதனை இடைக்கிடை நினைவூட்டி பரிசீலனை செய்து பாருங்கள் என்பதாகும்.

**காலாவதியாகிவிட்ட சாரதி அனுமதி பத்திரத்தினை** (G License) **மீளப் பெற வேண்டுமானால்....?**
(Requirement for expired Ontario driver's license holders)

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை $80 டொலர் பணம் செலுத்தி புதுப்பிக்க வேண்டிய சாரதி அனுமதி பத்திரம் காலா வதியாகும் திகதிக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்களின் முன்பே, இதனை நினைவூட்டும் கடிதம் அனுமதி பத்திரப் பதிவிலிருக்கும் வீட்டு விலாசம் தேடிவரும். உடனே சென்று அதனை புதுப்பித்து விடுவோம். ஒவ்வொரு வருடமும் ஒன்ராரியோ மாகாணத்தில் 1.6 மில்லியன் அனுமதி பத்திரம் மொத்தமாக புதுப்பிக்கப்படுகின்றது.

**சில நேரங்களில் குறிப்பிட்ட காலத்தினுள் புதுப்பிக்கத் தவறி, சாரதி அனுமதி பத்திரம் நிரந்தரமாகவே ரத்து**



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative

Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# காலத்தோடு வளரும் கணினிகள் - 44

அன்பான வாசகர்களே!

கடந்த இதழில் படங்களில் மாற்றங்களைச் (Photo Editing) செய்வதற்குரிய Adobe மென்பொருட்களைப் பற்றிக் கவனித்தோம். மேலும் சில மென்பொருட்களைப் பற்றி இந்த இதழில் கவனிப்போம். Paint Shop Pro X6 Ultimate என்ற மென்பொருளை Corel நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. Corel நிறுவனம் CorelDraw என்ற முதலாவது Graphics Design மென் பொருளை 1989ஆம் ஆண்டு வெளியிட்டதன் மூலம் புகழ் பெற்ற ஒரு நிறுவனமாகத் திகழ்ந்தது. Corel இனது Graphics Designs Software பற்றி நாம் பின்பு ஆராய்வோம். இப்பொழுது நாங்கள் எமது கவனத்தை Photo Editing மென்பொருட்கள் பற்றியே ஆராய்கின்றோம். இந்த மென்பொருள் 80 கனேடியன் டொலர் விலைக்கு வாங்க முடியும். Paint Shop Pro X6, Paint Shop Pro X5, Paint Shop Pro X4, Paint Shop Pro X3 போன்ற மென்பொருட்கள் இந்த மென்பொருளின் முந்திய வடிவங்கள் ஆகும். Paint Shop Pro X6 Ultimate மென்பொருள் தற்போது அதிகம் பாவனையில் உள்ள 64 bit கணினிகளில் மிகவும் வேகமாகத் தொழிற்படக் கூடியதாக உருவாக்கம் பெற்றுள்ளது. தற்போதுள்ள கணினி களுக்கு முந்திய கணினிகளின் கட்டமைப்பு 32 bit ஆகும். இந்த மென்பொருள் 32 bit கட்டமைப்பு கொண்ட கணினிகளில் தொழிற்படுவதற்கான வடிவத்திலும் விற்பனை செய்யப்படு கின்றது. இந்த மென்பொருள் பற்றிய தகவல்களை www.corel.com என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்த மென்பொருள் தொழிற்படுவதற்கு 4GB RAM உடன் நிலைவட்டில் 700MB வெற்றிடமும் இருக்க வேண்டும்.

Serif Photoplus X6 என்ற மென்பொருள் Serif நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள ஒரு Photo Editing மென்பொருள். இந்த மென்பொருளில் படங்களில் மாற்றங்களைச் செய்வதற்கு வேண்டிய பல்வேறு வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த மென் பொருள் மூலம் மிகவும் இலகுவாகவும் நேரடியாகவும் படங்களை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து கொள்ளக் கூடிய வசதிகள் உள்ளன. இந்த மென்பொருளையும் குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்ள முடியும். இந்த மென்பொருளுடன் வரும் Photo Projects என்ற மென்பொருள் மூலம் Presentations செய்ய முடியும். இந்த மென்பொருள் 64 bit கணினிகளில் மிகவும் விரைவாகத் தொழிற்படுகின்றது.

Red Eye Removal, Resize Image, Rotate Image, Crop, Adjusting Brightness, Color Management, Background Removal, Touch up Tools, Whiten Teeth போன்ற வசதிகள் இத்தகைய Photo Editing மென்பொருட்களில் பொதுவாகக் காணப்படுகின்றன. Photo Impact X3 என்பது Corel நிறுவனத்தின் இன்னுமொரு Photo Editing மென்பொருள் ஆகும். இந்த மென்பொருளில் வலைப்பக்கங்களை உருவாக்கும் வசதியும் உள்ளது. இந்த மென்பொருளும் மிகவும் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றது. இந்த மென்பொருளில் படங்களை மாற்றம் செய்வதற்கு ExpressFix, FullEdit என்பதாக இரண்டு வழிகள் உள்ளன. இந்த மென்பொருள் தொழிற்படுவதற்கு 1GB RAM உடன், நிலைவட்டில் 750MB வெற்றிடமும் தேவைப்படுகின்றது.




படங்களில் மாற்றங்களைச் செய்வதற்குப் பயன்படும் பல மென்பொருட்களைப் பற்றிய விபரங்களைக் குறிப்பிட்டுள்ளேன். இங்கே குறிப்பிட்ட மென்பொருட்களில் ஒரு சில மென்பொருட்களைத் தவிர ஏனைய மென் பொருட்கள் மிகவும் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன. ஏதாவது ஒரு மென் பொருளைத் தெரிவு செய்து கணினியில் நிறுவிச் செயன்முறையில் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளுங்கள். படங்களை அச்சுப்பதிவு செய்ய முதல் அவற்றில் மாற்றங்களைச் செய்து பாருங்கள். இந்தக் காலத்தில் குறைந்த விலைக்கு ஒரு கமராவை வேண்டிக் கொள்ளலாம். அதன் மூலம் எடுக்கும் படங்களில் இத்தகைய மென்பொருட்களைப் பயன்படுத்தி சில மாற்றங்களைச் செய்து பாருங்கள். நாளுக்கு நாள் புதிய புதிய மென் பொருட்கள் வந்த வண்ணம் இருக்கும். நீங்கள் காலத்திற்குக் காலம் இணையத்திற்குச் சென்று கூகிள் மூலம் இவ்வாறான மென்பொருட்கள் பற்றி வாசித்து அறிந்து கொள்ளுங்கள். இங்கே குறிப்பிட்ட எல்லா மென்பொருட்களில் அதிக விலை கூடிய மென்பொருளாக Adobe PhotoShop என்ற மென்பொருளே உள்ளது. இந்த மென்பொருளில் உள்ள தராதரம் வாய்ந்த வடிவமைப்புக் கருவிகள் இதற்கான காரணமாக இருக்கலாம். ஆனாலும் குறைந்த விலைகளில் காணப்படும் மென்பொருட்கள் மூலமும் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதில் ஐயமில்லை. சொற்பரி மாற்ற மென்பொருட்களைப் பயன்படுத்தி பல்வேறு காரியங்களைச் செய்திருப்பீர்கள். இப்பொழுது படங்களில் மாற்றங்களைச் செய்து கொள்ள இங்கே குறிப்பிடப்பட்ட மென்பொருட்களில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி படங்களை விரிவாக்கவும், சுருக்கவும், தேவையற்ற விடயங்களை நீக்கவும், படங்களின் நிறங்களில் மாற்றங்களைச் செய்யவும், படங்கள் மீது எழுத்துக்களைப் பொறிக்க வும், படங்களை மேலும் அழகுறச் செய்ய வும் எனப் பல்வேறு காரியங்களைச் செய்வதில் செயன்முறையில் பயிற்சி செய்யுங்கள். இந்தப் பயிற்சி மனதிற்கு மகிழ்ச்சி தரும் பொழுது போக்காகவே இருக்கும். வருடல் கருவி மூலமும் சில படங்களை வருடிக் கணினிக்குள் செலுத்தி விட்டு அவற்றில் மாற்றங்களைச் செய்து பாருங்கள். ஒரு படம் இருட்டாக இருப்பின் இத்தகைய மென்பொருட்கள் மூலம் இருட்டை நீக்கிப் படத்தை அழகாக்கிப் பாருங்கள்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள்.

அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.

அன்புடன் அகணி மின் அஞ்சல்:
authorakani@yahoo.com



- அகணி -
authorakani@yahoo.com

AUM WELLNESS CLINIC IN

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

முதுகுவலி கழுத்துவலி தோள்பட்டைவலி
முழங்கால் வலிகள் தீராததலைவலி நரம்புப்பிடிப்பு
நீரிழிவு தூக்கமின்மை கொலஸ்ரோல்
உடல் எடை குறைத்தல் இரத்த ஓட்டத்தை சீராக்குதல்
போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்

Dr. Lata

Based on Appointment



Cell: 416.890.9217 Office: 647.304.6046
5215 Finch Ave. E. #220, Toronto, ON

TBC Toronto Business College



SECOND CAREER

WHO IS ELEGIBLE?

- RECEIVING EI
- LAID OFF AFTER 2005
- RECEIVED MATERNITY / PARENTAL DURING LAST FIVE YEARS
- WORKING LESS THAN 20 HOURS PER WEEK

Those qualify will receive free funding upto $28000 to cover the following

- Living Expense • Daycare
- Tuition Fees • Books
- Transportation

ENROLLING NOW FOR PSW

DIPLOMA PROGRAMS

Accounting & Payroll (35 weeks)

Business Administration (26 Weeks)

Computerized Accounting (26 weeks)

Medical Office Adminstrator (32 weeks)

Personal Support Worker (26 weeks)

PART TIME COURSES

Windows,Word,Excel,PPT.,Access
Quickbooks,Simply Accounting,Accpac
Online Trading of Stocks & Options
Online Trading of Forex
Bank Teller, First Aid & CPR
Food Handler Certification

416 - 291 - 5155

4465 Sheppard Ave. East # 208
( Sheppard & Brimley) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005


# புதுப்பிக்கப்படாத...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

**செய்யப்பட்டு விட்டால் அடுத்த கட்டம் என்ன?**

**காலாவதியாகி ஒரு வருடத்தினுள் மட்டும் என்றால்....?**

எதுவித பிரச்சினையுமில்லை.

ஒன்ராரியோ அரச அலுவலகம் (Service Ontario Center) ஏதாவது ஒன்றுக்குச் சென்று எதுவிதமான பிரச்சினைகளுமின்றி வழமையான கட்டணத்தினை செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம். இணையத்தள வழி மூலமும் (Online) இலகுவாக புதுப்பித்துக் கொள்ளலாம். இணையத்தள வழிமூலம் புதுப்பிக்கும்போது கட்டணம் கடன் அட்டையினூடாக செலுத்த வேண்டும்.

**காலாவதியாகி 1-3 வருடங்களுக் கிடையில் என்றால்.....?**

காலாவதியாகி ஒரு வருடத்தினை கடந்து விட்டாலும் பிரச்சினையில்லை. ஆனால் மூன்று வருடத்தினுள் என்றால், வீதிப்பரீட்சை நிலையம் (Ontario drive test center) சென்று கண் பரிசோதனை செய்து, தேவை யான கட்டணத்தினை செலுத்தி, தங்களின் அடையாளங்களை நிருபித்து சாரதி அனுமதிப்பத்திரத்தினை மீளப் பெறலாம்.

**காலாவதியாகி 3-10 வருடங்களுக்கு இடையில் என்றால்----?**

அதாவது மூன்று வருடங்களுக்கு மேல் காலாவதியாகி, அது பத்து வருடங்களுக்குள் என்றால் வழமையான, கண் பார்வை சோதனைகள், எழுத்துப் பரீட்டை, இரு வீதிப் பரீட்சைகளுக்கும் தோற்றி சித்தியடைய வேண்டும். ஆனால் வீதிப் பரீட்சைக்குரிய காலதாமதம் என்ற அவகாசம் எதுவுமில்லை.

**காலாவதியாகி பத்து வருடங்களுக்கும் மேல் என்றால்...?**

வீதிப்பரீட்சைக்குரிய காலதாமதங்களையும் எதிர்கொண்டு புதிதாக வாகனம் செலுத்த கற்றுக்கொண்டவர் தோற்றுவது போல சகல பரீட்சைகளுக்கும் தோற்றி படிப்படியாக அனுமதிப் பத்திரம் பெறவேண்டும்.

**இன்னொரு நாட்டில் தங்கி நிற்கும் போது அனுமதி பத்திரம் காலாவதி யானால்...?**

காலாவதியாகும் திகதி 180 நாட்களுக்குள் இருந்தால் கனடாவினை விட்டு புறப்பட முன்பே அனுமதிபத்திரம் இன்னொரு ஐந்து




வருடத்திற்கு புதுப்பித்து விட்டு செல்லலாம். ஆனால் ஏனைய நாடு ஒன்றில் நிற்கும் போது அனுமதி பத்திரம் காலாவதியாகி அங்கு நீண்ட காலம் நிற்க வேண்டிய நிலமை ஏற்பட்டு, அனுமதி பத்திரம் தேவையும் அங்கு ஏற்படுமாகவிருந்தால், கடித மூலம் அங்கிருந்து தொடர்பு கொண்டு ஆறுமாதத்திற்கு ஒரு முறை மாத்திரம் தற்காலிகமாக நீடிக்கப்பட்ட அனுமதிபத்திரம் பெறலாம். (ஆனால் ஏதாவது சட்டரீதியாக தடை செய்யப்பட்டிருந்தால் பெற முடியாது.)

அனுப்படும் கடிதத்தில் முழுப்பெயர், சாரதி அனுமதி பத்திர இலக்கம், தங்கியிருக்கும் விலாசம், தொலைபேசி இலக்கம், மின் அஞ்சல், அந்த நாட்டில் நிற்கப்போகும் காலம், காரணம் யாவும் கடிதத்தில் குறிப்பிட்டு கைச்சாத்திட்டு அனுப்புவதுடன், வைத்திருக்கும் அனுமதிப்பத்திர அட்டையின் பிரதியினையும் அனுப்பி வைத்தல் வேண்டும். அனுப்பவேண்டிய முகவரி

Ministry of Transportation
Licensing Administration & Support Office
Special Enquiry Unit
Building A Room 178
2680, Keele St., Toronto, ON M3M 3E6

கனடாவுக்கு திரும்பியதும் நேரடியாகச் சென்று நிரந்தர பத்திரத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

---

13ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்தப் பூமியில் அமைதியைக் கொண்டு வருவதற்கு மக்கள் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக முயற்சி செய்திருக்கின்றார்கள். பிறேம் றாவத் அவர்கள் சிபார்சு செய்வது என்னவெனில் வித்தியாசமானதொன்றை முயற்சித்துப் பார்ப்பதற்கான நேரம் இதுதான். சமூகத்தில் அவதானத்தைச் செலுத்தாமல் சமூகம் எதனால் உருவாக்கப்பட்டுள்ளதோ அதாவது ஒவ்வொரு தனி மனிதனிலும் அவதானத்தைச் செலுத்தவேண்டும்.

"சமூகத்தை மாற்றுவதனால் எதுவும் நடக்கப்போவதில்லை என கூறுகின்றார். நாம் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அமைதிக்காக ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டும்.

"மண்ணினால் செய்யப்பட்ட பானையொன்று உள்ளது. அது அழகாக அலங்காரப்படுத்தப் படாமல் இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு நாளும் இது தண்ணீரினாலோ, பாலினாலோ, சோளத்தினாலோ நிரப்பப்படுகின்றது. இன்னுமொரு பானை உள்ளது. அது மிக அழகானது அது நூதன சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது. பலர் அதை வந்து பார்க்கின்றார்கள். அது எப்பொ ழுதும் வெறுமையாகவே இருக்கின்றது.

நீங்கள் எப்படிப்பட்ட பாத்திரமாக இருக்க விரும்புகின்றீர்கள் - நிறைவாகவா? வெறுமை யாகவா? உங்களுக்கு அந்தத் தெரிவு உள்ளது. நீங்கள் தான் அந்தத் தெரிவைச் செய்யவேண்டும்.

உண்மையான மனிதன் யார் எனில் கருணை யால் நிறைந்தவன், அன்பால் நிறைந்தவன், அமைதியால் நிறைந்தவன், ஆனந்தத்தால் நிறைந்தவன். இதை அறிந்து கொள்ள நீங்கள் யார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் உங்களுள் அமைதியைக் காவிச் செல்கின்றீர்கள் சிறி தளவில் அல்ல. ஆனால் அமைதியின் சமுத்திரமே உங்கள் உள்ளே இருக்கின்றது.

# அந்தப்பதில்

## The Answer

கால ஓட்டத்தில், மக்கள் நம்பிக்கை வைக்கும் விடயங்கள் மாறிக் கொண்டிருக் கின்றன. தொன்றுதொட்டு வந்த நம்பிக்கை கள் இப்பொழுது மூடநம்பிக்கைகளாகவோ கட்டுக்கதைகளாகவோ நோக்கப்படுகின்றன. தொன்று தொட்டு மக்கள் கேட்ட கேள்விகளுக்கு புதிய எண்ணக்கருத்துக்கள் பதில்களை கொடுக்கின்றன. நான் யார்? நான் ஏன் இங்கிருக்கின்றேன். இந்த வாழ்வின் நோக்கம் என்ன?

உலகெங்கும் அமைதியின் தூதுவராக அறியப்படும் பிறேம் றாவத் அவர்கள் அந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலொன்று உள்ள தென்று கூறுகின்றார். இது சொற்களிலோ அல்லது சடங்குகளிலோ காணக்கூடியதொன றல்ல. இது நாம் அமைதி என அழைக்கும் நிறைவென்னும் உணர்வுடன் வருகின்றது.

"நீங்கள் அமைதியினால் முற்றும் முழுதாக நிறைந்திருக்கின்றீர்கள். ஆனால் நீங்கள் அதை உணர்வதில்லை" என அவர் கூறுகின்றார். "நீங்கள் கருணையினால் நிறைந்திருக்கின்றீர்கள். ஆனால் நீங்கள் அதை உணர்வதில்லை. நீங்கள் ஆனந்தத்தினால் நிறைந்திருக்கின்றீர்கள். ஆனால் அதை உணர்வதில்லை."

நாம் யார்? இந்தக்கேள்வி மிகவும் மயக்கம் தரும் ஒன்றாகும். அதற்கு ஒரு பதில் உள்ளது. அந்தப் பதில் உங்களில்தான் உள்ளது. அங்கு உண்மையொன்று உள்ளது. அந்த உண்மை உங்களிடம்தான் உள்ளது. நீங்கள் யார் என்று நீங்கள் எண்ணுவதை விட நீங்கள் மேலானவர்.

### Words of Peace

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
1.877. 707 3221 Toll free
416 431 5000 தமிழ்
416 264 7000 ஹிந்தி
www.wopg.org www.tprf.org

நான் உங்களுக்கு ஒரு சிறிய கதையைக் கூறுகின்றேன். ஒரு புத்திசாலி மனிதன் அங்கு அமைதியாக அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையுடன் ரசித்துக்கொண்டு இருந்தான். கிராமத்தில் இருந்து சிலர் பதிலிறுக்க முடியாத கேள்வி ஒன்றைக் கேட்டு அவரைக் குழப்ப விரும்பினார்கள். அவரிடம் உங்களிடம் கேள்வியொன்றைக் கேட்கப் போகின்றோம் எனக் கூறினர்.

புத்திமான் : கேளுங்கள்: உங்கள் கேள்வியை என்று கூறினார்.
கேள்வி இதுதான். "எங்களுடைய நகரத்தில் எத்தனை பறவைகள் உள்ளன?"

புத்திமான் யோசித்து விட்டு 38,043 எனக் கூறினார்.

மக்கள் அதிர்சியடைந்தார்கள். "எவ்வாறு உங்களுக்கு இவ்வளவு பறவைகள்தான் உள்ளன என்று தெரியும்" என்று கேட்டார்கள். அதற்கு அவர் நீங்கள் என்னை நம்பாவிட்டால் போய் எண்ணிப் பாருங்கள் என்று கூறினார்.

அதற்கு ஒருவர் அதைவிடக் குறைவாக இருந்தால் எனக் கேட்டார்.

அதற்கு புத்திமான் அதிலும் குறைவாக இருந்தால் அதன் அர்த்தம் என்னவெனில் சில பறவைகள் தங்கள் நண்பர்களைப் பார்க்க சென்றிருக்கலாம். "அதைவிடக் கூடியதாக இருந்தால் என்ன"? என்று கேட்க அதற்கு அந்தப் புத்திமான் அவர்களின் சினேகிதர்கள் அவர்களைப் பார்க்க வந்திருப்பார்கள் எனக் கூறினார்.

ஒரு விதத்தில், பிறேம் றாவத் அவர்களின் இந்தப் பதிலை எவராலும் விவாதிக்க முடிய வில்லை. ஏனெனில் எவராலும் விவாதிக்க முடியாத அப்படிப்பட்டதொரு தர்க்கம் அது எனக் கூறினார். "அதனால் அவர்கள் அடைந்த பலன் என்ன?" எனக் கேட்கின்றார். "எதுவுமே இல்லை. இதன் சாராம்சம் முட்டாள் தனமான கேள்விக்கு முட்டாள்தன மான பதில் கிடைத்துள்ளது. இதைத்தான் இந்த உலகம் செய்கின்றது. முட்டாள்தன மான கேள்விகளைக் கேட்டு முட்டாள்தன மான பதிலைப் பெற்றுக் கொள்கின்றார்கள்."

சமார்த்தியமான கேள்வி என்னவென்றால் நான் யார்? என்னும் மிகவும் பழமை வாய்ந்த கேள்வி எனப் பிறேம் றாவத் அவர்கள் கூறுகின்றார்கள். அவர் தரும் பதில் என்ன வென்றால் "நீங்கள் தான் நம்பிக்கையின் சமுத்திரம்", " நீங்கள் தான் கருணைக் கடல்", நீங்கள் தான் ஆனந்தக் கடல்". உங்களுள்ளேயே உள்ள அந்த அமைதியை நீங்கள் மீண்டும் கண்டு கொள்ளுங்கள்.

இதைக்கூறிய முதலாவது நபர் இவரல்ல. அமைதி உள்ளே உள்ளதெனப் பலர் கூறியுள்ளனர். வித்தியாசம் என்னவெனில் நான் கூறுவதை நம்புங்கள் என்று நான் எவரையும் கேட்கவில்லை. என பிரேம் றாவத் கூறுகின்றார். நீங்கள் இதை அறிந்து கொள்ள வேண்டும் என நான் விரும்புகின்றேன். நீங்கள் இதை உணர வேண்டும் என்று நான் விரும்பு கிறேன்.

இது மிகப் பெரியதொரு சவாலாக உள்ளதா? அது பெரியதொரு சவாலக இல்லையா? உங்களுக்கு 38,043 பறவைகள் இருக்கின்றெ தன்பதைப் போன்ற பதிலை விரும்புவீர்களா? அப்படியாயின் அப்பறவை கள் பற்றியும் அவற்றின் உறவினர்கள் பற்றியும் நான் உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றேன்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்


உங்கள் வருங்கால உறவுகளை மில்லியனராக்க




Siva Mailvaganam Direct: 416 230 2991
Fax: 416 298 4664 Email: Rajah.Siva@yahoo.ca
80 Nashdene Rd Unit B 25-26 Ontario M1V 5E4

Build An Investment & Protection For Your Loved Ones

BONUS: Arrange The Best Auto & Home Insurance Rates In The GTA

| TAX FREE MONEY | AGE | FEMALE | | | MALE | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Term 10 | Term 20 | Term 40 | Term 10 | Term 20 | Term 40 |
| $ 500,000 (half million) | 25 | $ 19.25 | $ 27.00 | $ 42.75 | $ 29.70 | $ 37.35 | $ 54.45 |
| | 30 | $ 20.70 | $ 28.35 | $ 47.70 | $ 30.15 | $ 38.70 | $ 75.15 |
| | 35 | $ 25.20 | $ 33.75 | $ 80.10 | $ 30.15 | $ 43.65 | $ 108.0 |
| | 40 | $ 30.60 | $ 44.10 | $ 119.7 | $ 38.70 | $ 57.60 | $ 168.70 |

TERM PLAN - CONVERTIBLE/RENEWABLE WITHOUT ANY MEDICAL EXAMINATIONS UP TO AGE 85.

RBC Royal Bank, IA Pacific, BMO, Canada Life, Manulife Financial, Assumption Life, Royal Brokers

- Super Visa (100% REFUNDABLE)
- RRSP (SAVE 40%)
- RESP (SAVE UP TO $9200)
- Critical Illness Insurance (100% CASH BACK)
- Life Insurance
- Non-Medical Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Travel Insurance
- 100 Years Term
- 40 Years Term

# சிறுநீரக நோய்களைக் குணப்படுத்த வழிகள் என்ன?

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### HEALING KIDNEY DISEASE

மூளை, இதயம், கல்லீரலைப் போன்று நமது உடலிலுள்ள உறுப்புகளில் முக்கிய மானவை சிறுநீரகங்கள். இரத்தத்தைச் சுத்திகரித்து கழிவுகளை சிறுநீராக வெளியேற்றும் வேலையை சிறுநீரகங்கள் ஏற்று மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு வினாடியும் ஓய்வின்றி இயங்குகிறது.

கீழ் முகுதுப் பகுதியில் முதுகுத் தண்டின் இருபுறமும் இரு சிறுநீரகங்கள் உள்ளன. சிறுநீரகங்களால் வடி கட்டப்படும் சிறுநீர் பின்பு சிறுநீர்ப்பையை வந்தடைகின்றது. பொதுவாக 500 மி.மீற்றர் வரை தேங்க இடம் உள்ளது. ஆனால் 200 மி.மீற்றர் தேங்கியவுடனேயே அதனை வெளியேற்றும் உணர்வு ஏற்படும்.

சொட்டாகவோ இரத்தம் கலந்தோ வெளியாகும். சிவப்பு அணுக்களின் உற்பத்தி குறைந்து மரணம் ஏற்படும்.

சிறுநீரை அவ்வப்போது கழித்து விட வேண்டும். அவ்வாறின்றி நீண்டநேரம் சிறுநீர்ப்பையில் தங்கிவிட்டால் அதில் பக்டீரியா கிருமிகள் வளர்ந்துவிடும். சிறுநீர்ப்பை சுருங்கி விரிகின்ற தன்மையை மெல்ல மெல்ல இழந்து விடும் அத்துடன் சிறுநீர் தாரையிலும் கிருமித்தொற்று (urinary tract infection) ஏற்படும். ஆண்களின் சிறுநீர்ப்பையை ஒட்டி அமைந்துள்ள பாலியல் சுரப்பி புரஸ்டேட் சுரப்பி ஆகும். (Prostrate Gland) சிறுநீரகத்தில் நோய்த் தாக்கம் ஏற்படும் போது இந்த சுரப்பியும் பாதிப்படைய வாய்ப்பு உள்ளது. இதேபோல் பெண்களின்




உடலிலுள்ள அதிகப்படியான யூரியா மற்றும் தலைவலி காய்ச்சல் போன்ற நோய் களுக்காக உபயோகிக்கும் மாத்திரைகளின் நஞ்சுகளையும் நீரின் உதவியுடன் கரைத்து வெளியேற்றுகின்றது. இதற்குத் தேவையான தண்ணீர் குடிக்கவில்லையென்றால் நஞ்சு களின் அடர்த்தி அதிகமாகி வெளியேற்றம் தடைப்பட்டு சிறுநீரக வலைப்பின்னலில் தங்கி சிறுநீரகக் கல் உருவாகின்றது. சர்க்கரை நோய், அதிக இரத்த அழுத்தம் உள்ள நோயாளிகளுக்கு சிறுநீரகம் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு அதிகம். மது, புகை பழக்கம் உள்ளவர்களுக்கு, பலகாலம் தொடர்ந்து மாத்திரைகள் சாப்பிடுபவர்களுக்கு முதலில் கல்லீரலும், அதைத் தொடர்ந்து சிறுநீரகமும் செயலிழந்து விடும். சிறுநீரக செயலிழப்பை தற்காலிய செயலிழப்பு என்றும், நிரந்தர செயலிழப்பு என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். இரத்தத்தில் யூரியாவின் அளவு அதிகமாவதால் நோயாளிகளுக்கு வயிற்றில் குமட்டல் ஏற்படும். சாப்பிட முடியாது. சிலருக்கு சிறுநீரகங்கள் சுருங்கிவிடும். கண்பார்வை மங்கும், காது கேட்கும் திறன் குறையும், மிகுந்த களைப்பு ஏற்படும், சிறுநீர் சொட்டு

பெண்ணுறுப்பும் சிறுநீர்ப்பையும் அருகருகே அமைந்திருப்பதால் கிருமித் தொற்று பரவலாக காணப்படும்.

சிறுநீரக செயலிழப்பிற்கு எந்தவிதமான சிரமமும் இல்லாது குறைவான செலவில் இயற்கை மருத்துவத்தில் குணமாக்கலாம். பக்க விளைவுகளும் இல்லை. பழச்சாறுகள், மூலிகைச்சாறுகள் இரத்தத்திலுள்ள கழிவுகளை சிறப்பாக வெளியேற்றுகிறது. இதனால் உப்பு, யூரியா என்பனவற்றின் அளவு குறைகிறது. பாதுகாப்பான மூலிகை மருந்துகள், பொருத்தமான யோகாசன சிகிச்சைகள் சில கொடுத்து இரண்டு வாரங்ககளுக்குள் சிறுநீரக கற்களை (Kidney Stone) கரையச்செய்து சிறுநீர்தாரை வழியாக வெளியேற்றலாம்.

மருத்துவ உலகிலிருந்து கிடைக்கப்படும். அறிக்கைகளின் படி சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்களில் யாரும் 5 முதல் 7 ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழ்ந்ததில்லை. ஆனால் பழுதடைந்த சிறுநீரகங்களை மீண்டும் நன்கு இயங்கும் படி செய்து குணமடைந்தவர்கள் பல ஆண்டுகாலம் வாழ்ந்ததற்கு நிறைய ஆதாரங்கள் உண்டு.

சிறுநீரக நோய்களைத் தடுக்க ஊறுகாய், செயற்கை குளிர்பானங்கள், கருவாடு போன்ற நச்சுத் தன்மையுள்ள உணவுகளை தவிர்க்க வேண்டும். இளநீர், திராட்சைப் பழம் வெண்பூசணி போன்றவற்றை உணவாகச் சேர்ப்பது சிறந்தது. வாழைத்தண்டுடன் சிறிதளவு ஓமம் சேர்த்து தண்ணீரில் கொதிக்க வைத்து கசாயம் செய்து வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வெறும் வயிற்றில் குடித்துவர சிறுநீரகங்கள் (Kidney) சுத்தம் செய்யப்பட்டு இரத்த சுற்றோட்டம் சிறப்பாக நடைபெற வழி செய்கின்றது.

### யோகாசன பயிற்சியில் நிரந்தர தீர்வு

பொதுவாக யோகாசனங்கள் மூலமாக மூளை, இதயம், நுரையீரல் (Lungs), கல்லீரல் (Liver), சிறுநீரகங்கள் (Kidney) என்ற ஐந்து இராஜ உறுப்புகள் செம்மைப் படுத்தப்பட்டு சிறப்பாக தொழில்படுகின்றன. இவற்றுள் சிறுநீரகங்களைப் பொறுத்த வரையில் 80% அளவு பழுதடைந்ததையும் சிறந்த முறையில் இயங்கச் செய்யக்கூடிய சில பயிற்சிகள் உள்ளன.

1. சலபாசனம்
2. ஜானுசீராசனம்
3. மண்டுகாசனம்
4. யோக முத்ரா
5. நாடிசுத்தி பிராணயாமம்

இவற்றின் மூலம் சிறுநீரகத்திலுள்ள அழுக்குகள் வெளியேற்றப்பட்டு அங்கு சுத்த இரத்தம் வந்து சேர்கிறது. பாலியல் சுரப்பிகள் வலிமையாகின்றது. சிவப்பு அணுக்களின் அளவு அதிகரித்து சிறுநீரகங்கள், சிறுநீர்ப்பை என்பன புத்துணர்ச்சி பெற்று திரும்பவும் தனது



தொழில்பாட்டை திறம்பட செய்ய ஆரம்பிக்கும். ஆனால் மேலே கொடுக்கப் பட்ட பயிற்சிகளை முறைப்படி ஒரு ஆசிரியரின் ஆலோசனைப்படி காலை, மாலை தொடர்ந்து சில வாரங்கள் செய்து வரும்போது ஆச்சரியமான பலன் கிடைப்பதை உணர முடியும்.




ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

AMBIHA SILK (Fancy Jewellery)

FINCH & MIDDLEFIELD



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர
Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம்,
மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces
வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top
இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்: 416.297.5261



# வெள்ளை படுதல் (Discharge) பாதிப்பை ஏற்படுத்துமா?

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

வெள்ளை படுதல் (சாய்தல்) வயது வந்த பெண்களுக்குத்தான் ஏற்படுவதுண்டு என்று கூறினாலும் சிறியோர் தொடக்கம் முதியவர்வரை ஏற்படலாம். இந்த வெள்ளை படுதலை 'வெள்ளை சுரத்தல்' எனவும் கூறுவாரும் உளர். இதனை Leucorrhoea என மருத்துவர்கள் சொல்லுவார்கள். இந்நிலை ஏற்படும்போது வெளியே சொல்வதற்கு வெட்கப்பட்டு, தயக்கத்துடன் இந்நோய் ஆபத்தை விளைவிக்குமோ என நினைத்துக் கவலையுடன் மனவருத்தத்திற்கும் சிலர் ஆளாகியிருக்கின்றார்கள்.

இப்படி நிலைப்பட்ட நோய் எப்படி உருவாகின்றது என்பதை முதலில் நாம் அறிந்து கொள்வது மிக நன்று. பெண்களின் பால் உறுப்பு மென்னையான சவ்வால் (Mucous Membrane) ஆனது. (மார்புப் பகுதியை தவிர்க்கவும்) எமது வாய் மூக்கின் உட்புறம், மலவாசலின் உட்புறம் போன்றவையும் இப்படியான மென்மைச் சவ்வால் உருவானவை. மூக்கு, வாய் என்பற்றில் இருந்து நீர் சுரந்து சிந்துவது போல, பெண்களின் பாலுறுப்பில் இருந்து சிறிதளவு திரவம் சுரப்பது இயற்கையானது. இப்படிச் சுரக்கும் (Fluid) திரவமானது அளவிற்கு அதிகமாகும் போது வெள்ளை படுவதாகக் கூறிக் கொள்ளுகின்றார்கள். இதனால் வேலை செய்யும் இடங்களிலும் பிறப்புறுப்பில் இருந்து சளி போன்ற



வெள்ளைத் திரவம் சுரக்கின்றது என்பதை அறியமுடிகின்றது. இதனால் தாங்கள் அணிந்திருக்கும் உள்ளாடை நனைந்து அசௌகரியத்தைக் கொடுப்பதை நினைத்து குடுபத்தவர்களிடம் கூறுவோரும் இருக்கின்றார்கள். இவ்வெள்ளை சாய்தல் (Discharge) திருமணம் ஆனவர்களுக்கும் திருமணமாகதவர்களுக்கும் வர இடம் உண்டு. திருமணமாகி உடலுறவு கொண்ட சிலருக்கும் சில பாலியல் தொற்று நோய் காரணமாகவும் வெள்ளை படுதல் ஏற்படலாம்.

மேலும் திருமணம் ஆகாத சில பெண்களுக்கும் பாலியல் தொற்று வந்திருக்கலாம். அதேபோன்று ஒரு குடும்பத்தலைவன் பாலியல் நோயினால் பீடிக்கப்பட்ட பெண்ணுடன் தொடர்புபட்டு பின் தனது துணைவியுடன் தொடர்புகொண்டு உடல் உறவு கொண்டாலும் துணைவியாருக்கு வெள்ளை சாய்தல் ஏற்பட ஏதுவாகும். எனவே எவரும் மிகக் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும். எதிலும் நன்கு சிந்தித்து செயலாற்ற வேண்டும். இதனால் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படலாம். மேற்கூறியவை இருப்பின் மருத்துவரிடம் செல்லும்போது பல ஆய்வுகள் மூலம் வெளிச்சத்திற்கு வரும். இதனால் தாமதியாமல் மருத்துவரிடம் சென்று தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்வது முக்கியமாகும்.

மேலும் வெள்ளைபடுதல் உடலுறவால் மாத்திரம் ஏற்படும் எனக் கருத வேண்டாம். சாதாரண உடல் தொழிலியல் காரணமாகவும் ஏற்பட இடம் உண்டு. அதாவது கட்டிளம் வயதிலும் மாதவிடாய் வருவதற்கு முன் தினங்களிலும் வெள்ளை படுவதைச் சிலர் அவதானித்திருக்கலாம். இதையிட்டு அதிகம் சிந்திக்க வேண்டியதில்லை. அதாவது இந்நோய் பெண்களின் ஹோர்மோன்களின் (Hormones) அதிகரிப்பின் அளவைப் பொறுத்ததாகும்.

சில சமயங்களில் சில பெண்கள் கர்பவாதியாக இருக்கும் காலத்தில் அதிகளவு வெள்ளை சாய்தல் நிகழலாம். அந்நிலை ஹோமோன்களின் விருத்தியைப் பொறுத்து அமைவதாகும் என அறிய முடிகின்றது. இந்நிலையில் திரவம் எச்சில் போலவும், சளித் தன்மையாகவும் இருக்கலாம் எனவும் அத்திரவம் நிறம் கொண்டதாகவோ துர் நாற்றம் உள்ளதாகவோ இருக்க மாட்டாது. உறுப்பில் எரிவு, வீக்கம், நமைச்சல், புண்நிலை போன்றவை தென்படாது. ஆனால் பாலியல் ரீதியாக வெள்ளை சாய்தல் இருந்தால் மேல்கூறிய குணம் குறிகள் தெரியவரும். எதற்கும் அவதானம் வேண்டும்.

இத்தன்மைகளை தங்கள் மருத்துவர் கேட்டு பரீட்சித்துக் கண்டு கொள்வார். அதற்குரிய

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*



தொடர்ச்சி 24ஆம் பக்கம்



# MARCH SPECIAL

## March Special For Buyers

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

**Also Free Moving**

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

**Get More $$$ For Your House By Calling Me!**

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

(This Deal Start From March 01st to November 30th)



# Lourdson Antonipillai

(Sales Representative)

**Dir: 416.738.8824**

**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

*Independently Owned & Operated

# சார்பியல் - 45

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

# ஈர்ப்பலைகள்

பொதுச்சார்புத் தத்துவத்தின் அடிப்படை கருத்தானது எளிமையானது. ஆனால் பொதுச் சார்புத் தத்துவம் தந்த புலச் சமன் பாட்டின் தீர்வானது மிகவும் சிக்கலானது. அயன்ஸ்ரைன் புலச் சமன்பாட்டினைத் தந்து கிட்டத்தட்ட நூறு ஆண்டு காலமாகிவிட்டது. ஆனாலும் அந்த அழகிய சமன்பாட்டின் தீர்வுகள் முழுமையாகப் பெறப்படவில்லை அச்சமன்பாட்டின் ஒரு சில கூறுகள் மாத்திரமே தீர்க்கப்பட்டுள்ளன. அத்தீர்வு களின் வழியிலே பேரண்டத்தின் முந்நாட் கருதுகோள்கள் முற்றாகவே மாற்றப்பட்டு விட்டன. இன்னமும் என்னென்ன மாற்றங்களை எதிர் காலத்தில் அச்சமன்பாடு தரப் போகின்றதோ தெரியவில்லை.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

புலச்சமன்பாட்டின் தீர்வின் முக்கியமானதாக கருதப்படும் விரிவமையும் பேரண்டம் பற்றிப் பார்ப்பதுதான் எமது அடுத்த முயற்சி. ஆனாலும் இடையில் ஒரு அழகான விடயத்தினைத் தொட்டுவிட்டுச் செல்வோம். விஞ்ஞானிகளிடையே ஆரம்ப நிலையில் இருக்கும் ஈர்ப்பலைகள் எனும் இந்த விடயமானது எங்களது பேரண்ட இரகசி யங்களை பெருமளவில் விளக்கக் கூடியது என்பது ஆய்வாளர்களின் பெருத்த எதிர் பார்ப்பாகும். இந்நாட்களில் பேரண்ட விடயங்களை அறிவதற்கு ஏதோ ஒருவிதத்தில் மின்காந்த அலைகளையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. அது ஒளியாக இருந்தாலும் சரி, எக்ஸ்றே தொலைகாட்டி யாக இருந்தாலும் சரி அல்லது இன்னமும் புறவூதாக்கதிர் ஆய்வாக இருந்தாலும் சரி இவை எல்லாம் மின்காந்த அலையின் வெவ்வேறு வடிவங்களே. எல்லாமும் போட்டோன்களைத்தான் வெவ்வேறு அதிர்வெண்களில் கொண்டுள்ளன.

இப்போது உள்ள அறிவியல் வளர்ச்சியின் வேகத்திற்கு தனியவே மின்காந்த அலைகள் போதாததாக இருக்கின்றன. விரிவுபடுத்தப் பட்ட ஆய்வுகளுக்கு இன்னமும் ஏதோ தேவைப்பட, ஈர்ப்பலைகள் விஞ்ஞானிகளைக் கவர்ந்து கொண்டன. ஈர்ப்பு என்பது வெளி நேரப் பரிமாணத்தின் இயல்பு எனக்காட்டப் பட்டு விட்டதினால், ஈர்ப்பலைகளைப் பற்றிப் பார்பதற்கு அதனையே ஆரம்பப் புள்ளியாகக் கொள்வோம். பேரண்டத்தின் புள்ளிகள் தனித்தனியானவைதான். அப்புள்ளிகளுடன் நேரம் இணைந்ததும் அது புள்ளியாகக் கருதப்படாது நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. இது எங்களுக்கு ஏற்கனவே தெரிந்த விடயம் தான். இந்தப் புள்ளி-நேர இணைப்பானது முழுவதையுமே முழுதாக மாற்றிவிட்டது. நேரம் என்பது தனியனானது இல்லை. எனவே நேரம் இணைந்த நிகழ்ச்சிகள் எல்லாம் ஒன்றுடன் ஒன்று சார்புடையனவா கின்றன. அதனால் நேரத்துடன் இணைந்த புள்ளிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடை யனவாக ஆகிவிட, வெளிநேரப் பரிமாண மானது நிகழ்ச்சிகள் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்ட, ஒரு பின்னல் வலை வேலைப் பாட்டிற்கு ஒத்ததாக காணப்படுகிறது.



இந்த வெளிநேரப் பின்னல் அமைப்பினுள் தான் பொருட்கள் இருக்கின்றன. அப்படிப் பொருட்கள் இப்பின்னலினுள் இருக்கும்போது, வெளிநேரத்தை தங்களுடன் இழுத்துச் சுருட்டிக் கொள்கின்றன. இச்சுருட்டலினால் வெளிநேரப் பரிமாணமானது பொருட்களைச் சுற்றி வளைந்து காணப்படுகிறது. பொருட்கள் தான் வெளிநேரத்சைச் சுருட்டுவதால், பொருட்களின் திணிவு கூடிய இடங்களில் வெளிநேரத்தின் வளைவு பெரியதாக இருக்கும். இங்கே வெளிநேரப் பின்னலானது பொருட்களினால் சுற்றப்படுவதற்கு நேரத்தினை ஒரு காரணியாகக் கூட நாம் வசதியாகக் கருதிக் கொள்ளலாம்.

சக்தியின் ஒருவடிவம் சடம் என்பது எங்களுக்குத் தெரியும். எனவே, சடங்களைப் போலவே சக்தியும் வெளிநேரத்தினைச் சுருட்டி வைத்திருக்கும் கைங்கரியத்தினைச் செய்யக்கூடியது என்பது புலனாகின்றது. அதாவது, வெளிநேரப் பரிமாணத்தை வளைவுறச் செய்கிற கைங்கரியத்தை பொருட்கள் மாத்திரமல்ல, சக்தியும் செய்கிறது. சக்தியினதும் சடத்தினதும் இயல்புகளில் உள்ள ஒற்றுமைகளை ஒரு தடவை ஒப்பிட்டுப் பாருங்கள். பொருட்களுக்கு உந்தம் உண்டு, சக்தியிற்கும் உந்தம் உண்டு. அத்துடன் பொருட்களும் சக்தியைக் கொண்டுள்ளன. எனவே, சடத்தையும் சக்தியையும் ஒன்றாகப் பார்ப்பதற்கு சக்தி-உந்தம் என்கிற பதத்தினை கூறிக் கொள்ளலாம். இதன்படி, பொருட்கள் என்பதற்குப் பதிலாக சக்தி-உந்தம் என்பதனைப் பாவிக்கலாம். அப்படிய-ாயின் சக்தி-உந்தம் காணப்படும் இடங்களில் எல்லாம் வெளிநேரமானது வளைந்து இருக்கும் என்பது தெளிவாகின்றது.

இவையெல்லாம் நாங்கள் அறிந்ததுதான். பேரண்டத்தின் நாற்பரிமாண பின்னலில் பொருட்கள் அதாவது சக்தி-உந்தம் இல்லாத இடங்கள் பெருமளவில் உண்டு. புலச் சமன்பாடுகளின் தீர்வின்படி, சக்தி-உந்தம் இல்லாத இடங்கள் வளைவுகள் இல்லாது தட்டையாகத்தான் இருக்கவேண்டும். ஆனால் அவை தட்டையாக இருப்பதில்லை.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 24ஆம் பக்கம்



# ஒற்றைத் தலைவலி நிரந்தரமான நரம்பியல் ஒழுங்கீனம்

## *Migraine*

இன்றுள்ள சூழ்நிலையில் எவரைப் பார்த்தாலும் ஏதோ ஒரு வகையில் தலை வலி வருவதனை உணர்கின்றார்கள். எந்த ஒரு நோய்வரக்கூடும் என்பதனை தலை வலியே முன்கூட்டி அறிவித்து விடுகின்றது. அத்துடன் எந்த ஒரு தலைவலியாலும் மூளையே குழப்பமடைந்து விடும். ஒரு வேலையும் செய்ய முடியாது. மனக்கவலை, வேலைப்பழு, மனத்தாக்கம் (Tension), பணக்கஷ்டம், குடும்பப் பிரச்சினை, மன அழுத்தம் போன்ற எது ஏற்பட்டாலும் முதல் அறிகுறியாக தலைவலி வந்துவிடுகின்றது. சிலவகை யான தலைவலிகள் கண் கோளாறு, கழுத்தில் ஏற்படும் தசைப்பிடிப்பு, மூளையில் உள்ள கட்டி, இரத்த அழுத்த அதிகரிப்பு, நரம்புக்கோளாறு போன்றவற்றா லும் ஏற்படுகிறது. தலைமுழுவதிலும், பக்கங்களிலும், பிடரியிலும், உச்சியிலும் இவ்வலி ஏற்படுவதால் முதலில் வைத்தியர் எந்த நோய்க்காக இது வருகிறது என்பதில் குழப்பமடைவர். சிலர் தம்மை தப்பித்துக் கொள்வதற்காக எப்போதும் கொஞ்சம் தலைவலியாயுள்ளது என கூறியும் விடுவர். இதனை சாட்டாக வைத்து வேலைக்கும் செல்ல மாட்டார்கள். “தலைவலியும் வயிற்று வலியும் வந்தவனுக்குத்தான் தெரியும்” என்ற பழமொழியும் எம்மிடையே உண்டு.



தலைவலிகள் தோற்றம் பெறுவதிலும் பல பிரச்சினைகள் உள்ளன. திடீரென்று எழுவது, விட்டு விட்டு வலிப்பது, தலை முழுவதும் வலிப்பது, காலை அல்லது மாலையில் வலி ஏற்படுவது, சுவரில் போய் மோத வேண்டும் போல பயங்கரமாக வருவது, ஒரு பக்கத்தில் மட்டும் எழுவது என பல சூழ்நிலைகள் உள்ளன. பொது வாக வைத்தியர்கள் ‘இருதய சிகிச்சை செய்வது சுலபம் ஆனால் தலை வலிக்கான காரணத்தை கண்டுபிடிப்பதென்பது மிகவும் கடினமான விடயம்’ என்று கூறுவர்.

பொதுவாக இன்றுள்ள வாழ்க்கை முறையில் Tension எனப்படும் மனத்தாக்க அலைவினால் பாதிப்புறுகின்றனர். அது வரும்போகும், நிலையாகவும் நிற்காது மருந்தும் தேவைப்படுவதில்லை. இதனால் பாதிக்கப்படுபவர்கள் மிகக் கவலையடைந்து, பதட்டமுற்று காணப்படுவர். இளையோர்களையும், வயது வந்தவர்களையும் இந்த Tension தலைவலி இலகுவில் பாதித்து விடும். இந்த தலைவலிகளுக் கெல்லாம் அப்பாற்பட்டு மிகவும் கடுமையான முறையில் ஒருவரின் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கி விடுவதே ‘ஒற்றைத் தலைவலி’ (Migraine) ஆகும். அதாவது ஒருவர் மகிழ்ச்சியாக வாழமுடியாமல் வந்து செல்வதே இந்த தலைவலியின் தொழிற்பாடாகும்.

ஒற்றைத்தலைவலி என்பது சாதாரண தலைவலி அல்ல. இது அசாதாரணமாக வும், மிகவும் கொடூரமாகவும் ஏற்படுவதொன்றா கும். தாங்கமுடியாத தலைவலியால் வேலைக்கு செல்ல முடியாதவர்கள், வேலையிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் வீட்டுக்கு ஓடிவிடுவார்கள், வாகனத்தை இடைநிறுத்தி விட்டு கண்களை மூடிக்கொண்டிருப்பவர்கள் என பல வகையினர் உளர். எப்போது வரும், என்ன காரணத்தால் வரும் என்று வைத்தியர் களால் இன்னமும் முடிவு எடுக்க முடியவில்லை. ஒரு பக்க தலையில் ஏற்படுவதாலேயே ஒற்றைத்தலைவலி என்பர். மருத்துவ உலகின் தந்தையான ‘ஹிப்போகிரட்டிஸ்’ (Hippocrates) என்பவரே இந்த நோய் பற்றி முதலில் கூறியவராவர். கால்ள்மாக்ஸ், சாள்ஸ் டார்வின், சிக்மண்ட பிராய்ட் என்போர்க்கு இத்தலைவலி இருந்துள்ளதாக நம்பப்படுகிறது. முன்னைய காலங்களில் நுண்ணறி வாளர்களுக்கே இத்தாக்கம் உள்ளதாக கருதினர். ஆனால் இன்று 10-12 வீதமானோர் இத்தலைவலியால் கஷ்டமுறு கின்றனர். சிலருக்கு 20 வயதுக்கு முன்னரேயே இது ஏற்பட்டு தொடர்கிறது. பரம்பரை, குடும்ப உறவு போன்றவற்றினை கூறிவந்தாலும் பல காரணிகள் இன்று அவதானிக்கப்பட்டுள்ளன.

ஒற்றைத்தலைவலி குறிப்பிட்ட சில காலங்களில் வருவதொன்று. சிலருக்கு மாதம் இரு தடவையும், சிலருக்கு மாதம் ஒரு தடவையும் ஏற்படலாம். ஒற்றைத் தலைவலி வருவதற்கு முன்பாக சில குணங்குறிகள் ஏற்படும். முதலில் கண்ணின் பார்வையில் மின்னல் போன்ற குறியீடுகள் ஏற்படும். இந்த ஒழுங்கீனம் ‘Aura’ எனப்படும் சில ஒளிக்கீற்றுகள் தோன்றி மறையும். கண்களால் முழுமையான வெளிச்சத்தினை பார்க்கமுடியாது. கண்களை மூடிக்கொண்டு படுக்கவே என்றும் இதனை விபரிப்பது கடினம். இது மறையத் தொடங்க தலைவலி ஏற்பட்டு பின்பு கூடுதலாகும். இந்த வேளையில் மூளைக்கு இரத்தம் செல்வது குறையும். பின்பு கூடுதலாகும். இந்த நிலையை சமாளிக்க எழுவதே இத்தலைவலியாகும். சில தலைவலி நாட்கணக்கில் நீடிக்கவும் கூடும். இப்படியானவர்கள் இருட்டு அறையில் குப்புற படுத்து கொள்வர். தனித்து இரத்தம் மட்டும் பிரச்சினையல்ல. இது மத்திய மூளைப் பிரச்சினையும் (A Central brain problem) ஆகும். நோவு ஏற்படுவதால் ‘Brad Kininmonth’ என்ற இரசாயன மாற்றம் ஏற்படும். இதனைத் தொடர்ந்து வாந்தி (Vomit) உணர்வோ அல்லது வயிற்றை குமட்டுவது (Nousea) போலவோ ஏற்பட்டு சராசரி 12-18 மணித்தியாலங்கள் அல்லது 2-72 மணித் தியாலங்கள் இத்தலைவலி இருக்கும். வேலை நேரத்தில் வந்துவிட்டால் வீட்டுக்கு ஓடிவிட வேண்டும் போல மனம்வரும். இதனை ஒரு தாக்குதல் (Attack) என்றே குறிப்பிடுவர். இவர்களுக்கு சத்தம், வெளிச்சம், மணம் என்பவை ஏற்பட்டு தொந்தரவு செய்யும்.

அண்மையில் மூளையில் ஏற்படும் ‘Serotonin’ என்பதுடன் தொடர்புள்ளதாக கூறுகின்றனர். சிலருக்கு ‘Endorphin’ என்ற இரசாயன குறைவால் ஏற்படுவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். இந்த நோய் வந்தவுடனேயே சில மாத்திரைகளை உட்கொள்ள வேண்டி ஏற்படும் என்றும், இதில் சிலருக்கு உடன் குணமாவதில்லை. இதற்கு சாதாரண ரைலனோல், அட்வில், மோரின் போன்ற வலித்தீர்வு மாத்திரைகள் பலனளிக்காது. எனவே வைத்தியர்களுடன் ஆலோசனைதேவை.

இந்த நரம்பியல் ஒழுங்கீனம் பற்றி சரியான முடிவு எவராலும் எடுக்கப்படவில்லை. பொதுவாக கடுமையான நரம்பியல் ஒழுங்கீனம் என்றே கூறுகின்றனர். சில மருத்துவர்கள் இதனை சரியாக புரிந்து கொள்ள கஷ்டமுறுகின்றனர். ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு காரணத்தால் இது ஏற்படலாம் என்பதாலேயே இப்பிரச்சினை ஏற்படுகிறது. காலநிலை மாற்றம், பசி உணர்வு, சிலவகை உணர்வுகள், நறுமணங்கள், பிரகாசமான வெளிச்சங்கள், கடுமையான ஒலிகள், கடுமையான மனஎழுச்சிகள், மன அழுத்தம், ஒவ்வாமை, மாதவிடாய் ஒழுங்கீனங்கள், நித்திரைக் குறைவு என்பனவே இத்தலைவலியை மேலும் கூட்டுவனவாகும். இது பொதுவான தாக்கத்தை பலரிடம் ஏற்படுத்தினாலும் அவசர சிகிச்சைப்பிரிவிற்கு செல்ல மாட்டார்கள். ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் 45 மில்லியன் மக்கள் இத்தலைவலி யுடன் வாழ்கின்றனர். இதில் 28 மில்லியன் மக்கள் ஒற்றைத்தலைவலிக்கு உட்பட்டுள்ளனர். உங்களுக்கு ஒற்றைத் தலைவலி இருந்தால் உலகில் ஒரு மில்லியன் மக்களில் நீங்களும் ஒருவர் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.



சிந்தனைப் பூக்கள்
எஸ். பத்மநாதன்

தொடர்ச்சி 25ஆம் பக்கம்

**MATH, PHYSICS & COMPUTER SCIENCE / PROGRAMMING STUDIES HOME TUTORING**



**Subjects**

- *Grade 11, 12: Any Math/Physics/Computer studies credit courses*
- *University (Any year): (Including but not limited to) Calculus, Linear Algebra, Statistics, Probability, Computer programming (Java/C++ etc) Discrete Mathematics, Data Structures, Algorithms.*
- *IB: Any Mathematics/Physics/Computer Science Diploma courses.*

**Contact: பாலா பாலமோகன்**

**416.551.2553**

- B.Sc. & M.Sc. degree in Mathematics from U of Toronto
- M.C.S & Ph.D. degrees in computer science from U of Ottawa
- More than 10 years experience as teaching assistant at U of Toronto & U of Ottawa
- Winner, Graduation prize, Dept. of Computer & Mathematical Science, U of Toronto, Scarborough (UTSC), 2005
- Member, UTSC'S first team for **Putnam Competition**


COTTAGE
FOR RENT
Beautiful waterfront cottage with a capacity of 12 people.
80km away from Scarborough.
Fishing boat and pedal boat is available.
Contact
Ganesh - 416-768-8169
Murali - 416-569-4065


Free Consultation
MON - SAT 9:00 AM - 8:00 PM
SUN 10:00 AM - 5:00 PM
Markham NS Dental
Care, Comfort, Convenience, Confidence.......
Family Dentist / Cosmetic Dentist / Braces / Implant
We are welcoming
New Spring Smile!
Dr. Nalini Sutharsan
New & Emergencies Patients Always Welcome
State-of-the Art Dental Technology!
www.MarkhamNSDental.com
9293 Markham Rd., Suite 4, Markham, ON. L6E 1A3 905-472-4111
Open Seven Days A Week
Like us on facebook
Tips for a Better Smile - Markham NS Dental
www.facebook.com/Markhamdentists

# மகாஜனன் பாட்டுப்போட்டிக்கான பயிற்சிப்பட்டறையில் "கலைமாமணி" உன்னி கிருஷ்ணன்

- மாலினி அரவிந்தன் -

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு சங்கம் நடத்தும் மகாஜனன் பாட்டுப் போட்டிக் கான பயிற்சிப் பட்டறை 20-04-2014 ஆம் ஆண்டு ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு ஸ்காபரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் நடைபெற்றது. மகாஜனன் பாட்டுப் போட்டிக்கான பயிற்சிப் பட்டறையில் தமிழகத்தில் இருந்து வருகை தந்திருந்த பிரபல பாடகர் "கலைமாமணி" உன்னி கிருஷ்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். விஜய் தொலைக் காட்சியில் சுப்பர் சிங்கர் இசைப் போட்டிக்கு நடுவராகக் கடமையாற்றிய அவர், மகாஜனன் பாட்டுப் போட்டியில் பங்கு பற்றும் மாணவ, மாணவிகளுக்கு அவர்களின் தேவை கருதிச் சிறப்பானதொரு பயிற்சியை வழங்கினார். அவர் தனது பயிற்சியில் போட்டிக்கான விதி முறைகளை நடைமுறைப்படுத்த எப்படி மாணவர்கள் ஒத்துழைக்க வேண்டும், ஒவ்வொரு மாணவரும் எப்படித் தங்களைத் தயார்ப்படுத்த வேண்டும், இதை ஒரு போட்டி என்று எடுத்துக் கொள்ளாமல் திறனை வெளிப்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் தனது சொந்த அனுபவங்களைக் கொண்டு விளக்கம் தந்தார்.

பயிற்சிப் பட்டறையில் பங்கு பற்றிய மாணவ, மாணவிகளின் கேள்விகளுக்கும் பதிலளித்தார். கர்நாடக இசையைக் கற்கும் பொழுது வேற்று மொழி இசைகளையும் அறிந்து கொண்டால்தான் பிற்காலத்தில் முழுமை அடைந்ததொரு இசைக் கலைஞனாக மாற முடியும் என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டார். அப்போது மாணவி ஒருவர் முன்வந்து ஒரு பாடலைப் பாடிக்காட்டிய போது அதைத் தனது மகளுக்குப் போட்டுக் காட்டுவதற்காகப் பதிவு செய்வதாகக் குறிப்பிட்ட அவர், இசையில் நல்ல திறமையான செல்வங் களை இந்த மண்ணில் பார்க்கும் போது, தான் மிகவும் பெருமைப்படுவதாகவும் குறிப்பிட்டு, இந்த நிகழ்ச்சியை முன்னெடுத் துச் செல்லும் மகாஜனக் கல்லூரி பழைய மாணவ சங்கத்தினரையும் பாராட்டினார்.




மகாஜனக் கல்லூரி பழைய மணவர் சங்க நிர்வாகக் குழுவினரும், இசைப் போட்டிக்குப் பொறுப்பான கலைக் குழுவினரும், தன்னார் வத் தொண்டர் களும் ஒன்று சேர்ந்து நிகழ்ச்சியை மிகவும் சிறப்பாக நடத்தி முடித்தனர். பயிற்சிப் பட்டறைக்கு "கலை மாமணி" உன்னி கிருஷ்ணனை அழைத்து வருவதற்கு மிகவும் உதவியாக இருந்த அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்தனர். ஒக்ரோபர் மாதம் 2014 இல் நடக்க இருக்கும் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் வெள்ளி விழாவில் போட்டியில் வெற்றி பெற்றவர் களுக்கான விருதுகள் வழங்கப்பட இருப்பதாகத் தெரிய வருகின்றது. எட்டாவது வருடமாக கணிதம், பொது அறிவுப் போட்டிகளும், இந்த வருடம் வெள்ளி விழ- ாவை முன்னிட்டு தமிழ் மொழிப் போட்டியும் ஏற்கனவே நடந்து முடிந்து விட்டன. வெள்ளி விழாவை முன்னிட்டு வேறு பல போட்டிகளும் குறிப்பாக விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற இருக்கின்றன.




# பழந்தமிழ் இலக்கியம் போற்றும் குடும்பங்கள் விழுமியங்கள்



-உலகெங்கணுமே குடும்ப விழுமியங்கள் வீழ்ச்சியடைந்துவரும் இக்காலத்தில், தமிழர்தம் பாரம்பரிய குடும்ப ஒழுக்க முறைகளை அறியாதவருக்குத் தெரிய வைப்பதையும் மறந்தவருக்கு நினைவு படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது இக்கட்டுரை. குடும்பம் என்பது இல்வாழ்க்கைக்குரியதென்றும் விழுமியம் என்பது சிறப்பான பயன்களைத் தரும் பண்பாட்டு ஒழுக்க முறை என்றும் கொண்டு இக்கட்டுரை வரையப்படுகிறது. விழுமியத்தின் சீர்மைகள் பலவாகும் என்பதனைக் கட்டுரை முடிவில் வாசகர் உணர்வர்.

## 1. அன்புடைமை

குடும்பச் சிறப்புகளில் முதன்மையானது கணவனும் மனைவியும் ஒருவர்மீது ஒருவர் அன்புடையவராய் இருத்தல். அன்புடைமைக்கு அடையாளம் இருவரும் இணைபிரியாது வாழ்தல். இதனை அகவாழ்வு பேசும் எல்லா நூல்களும் மிகவே வலியுறுத்தக் காண்கிறோம். குறுந் தொகையில் செவிலித் தாய் தலைவனும் தலைவியும் பிரிவின்றி ஒன்றாக வாழ்கின்றனர் என்று நற்றாயிடம் கூறுவதாக வரும் பாடல் இது:

கானங் கோழிக் கவர்குரற் சேவல்
ஒண்பொறி எருத்தின் தண்சிதர் உறைப்பப்
புதல்நீர் வாரும் பூநாறு புறவில்
சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவரல் அறியாது செம்மல் தேரே.(1)

'தலைவன் தலைவியைப் பிரியாது உறைகின்றான். எச்செயல் குறித்தும் பிரிந்து செல்வதில்லை. தற்செயலாக அரசபணி காரணமாக வெளியூர் செலினும் விரைவாகவே மீண்டு விடுவான்' என்ற செய்தியை இப்பாடலின் பிற்பகுதி தெரிவிக்கின்றது.

நற்றிணையில் தலைவியே தரும் தகவல் இது:

நின்ற சொல்லர் நீடு தோன்(று) இனியர்
என்றும் என்தோள் பிரிபறி யலரே.(2)

'தோழீ! நம் காதலர் நின்று நிலைக்கும் வாய்மையுடையவர். நெடிதாக நினைந்து இன்புறத்தக்க இனிய பண்புகளை உடையவர். என்றைக்குமே என் தோள்களைப் பிரிவதை அறியாதவர்' என்று பெருமையாகவே கூறும் தலைவியின் கூற்று இல்லற வாழ்க்கையின் சிறப்பு எப்பொழுதும் கணவனுடன் இணைபிரியாது இருத்தலே என்ற மரபு வழிவந்த எண்ணக்கருத்தைப் பிரதிபலிக்கின்றது.

## 2. அறஞ் செய்தல்

இல்லற வாழ்க்கையின் இன்றியமையாத நோக்கம் அறஞ் செய்தல். இல்லறம் என்ற சொல்லில் அறமும் கலந்திருப்பதைக் கவனித்தல் வேண்டும். 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை'(3) என்ற வள்ளுவர் பெருமான் வாக்கு இல்வாழ்க்கையின் குறிக்கோளை நன்கு வலியுறுத்துகின்றது.

துறந்தவர்க்கும் வறியவர்க்கும் இறந்தவர்க்கும் இல்வாழ்க்கை நடத்துபவர் துணையாக இருத்தல்வேண்டும். இறந்தவர்க்குத் துணை செய்தலாவது அவர்களுடைய பிள்ளைகள் மற்றும் அவர்களால் நன்மை பெற்றவர்களுக்கு உதவுதல். தொடரும்...



- தமிழ்வேள் விநாயகர் கந்தவனம் -




# ANOTHER PROJECT BY

## ALTER @ CHURCH / CARLTON

TRIDEL® BUILT FOR LIFE




**VIP Price**

**Call to Reserve Your Unit**

**New Project in Downtown steps to Ryerson University**




**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

**5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969**

*Independently Owned & Operated

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

"விசயமெல்லோ பெரிய வில்லண்டமாய் போச்சுது. பொடியனை பெரியவன் எல்லோ பிடிச்சிருக்கிறான்" முனியப்பர் காசியம்மானிடம் கூற,

காசியம்மான் பதறிப் போனார். "இப்பதானே ஒண்டுமில்லை என்டனீர். பேந்தேன் கதையைத் திருப்புறீர்'.

'அது... பெடிச்சியெல்லோ எல்லாத்தையும் கேட்டுக் கொண்டு நிண்டவள். பயந்து கியந்து போயிடுவள். அதுதான் அப்பிடிச் சொல்லிப் போட்டு உம்மை இப்பிடிக் கூப்பிட்டனான்."

"சரி பெரியவன் எண்டால்"

"பெரியவனெண்டால் வேறை ஆர்? அதுதான் எறிமாடன்"

"எறிமாடனோ?" கொஞ்சம் உரத்துத்தான் காசியம்மான் கேட்டுவிட்டார். சிவா வீட்டுக்குக் கேட்டிருக்குமோ என்று பயந்தவர், சிவா வீட்டைத் திரும்பிப் பார்த்தார்.

ஒருவரையும் காணவில்லை.

முனியப்பர் மாமாவை திரும்பிப் பார்த்தவர், "என்ன முனியப்பர் பறையிறீர். கொஞ்சம் விளப்பமாய்ச் சொல்லும்."

முனியப்பர் விளக்கமாய் கூறினார்.

"அம்மான் இது சாதாரணமான எறிமாடனில்லை. பெரிய வில்லண்டமானது. என்னாலை இதை ஒண்டும் செய்யேலாது. கரியான கேவலமான எறிமாடன் பெடியனைப் பிடிச்சிருக்கு. பனங்கூடல் முத்துப் பூசாரிதான் இதுக்குச் சரியான ஆள். அந்தாளைப் பிடிச்சுத்தான் இந்த எறிமாடனுக்கு ஒரு வழி பண்ணலாம்."

"ஒண்டும் விளங்கேல்லை. கொஞ்சம் விளக்க மாய் சொல்லும்" காசியம்மான் மீண்டும் கேட்க, முனியப்பர் விளக்கமாகக் கூறினார்.

காசியம்மான் திகைத்துப் போனார். "இப்ப என்ன பண்ணுறது?"

"சுறுக்காய் என்னெண்டாலும் செய்ய வேணும். இல்லாட்டி எறிமாடனிட்டை இருந்து தப்பேலாது. நான் இப்ப மந்திரிச்சு தயாத்துக் கட்டியிருக்கிறேன். அது எறிமாடனுக்கு பெரிசில்லை. இப்பவோ பையவோ என்னெண்டாலும் நடக்கலாம்." என்றவர், வானத்தைப் பார்த்து யோசித்தார். அவர்கள் நின்று கதைத்துக் கொண்டிருந்த பனையின் உச்சி காற்றுக்கு அங்குமிங்கும் வேகமாக அசைந்தது, அது, ஒருவித பயத்தை அந்த நேரத்திலும் முனியப்பருக்குக்குக் கொடுத்தது.

"நானிப்ப சாப்பிட்டிட்டு முத்துப் பூசாரியாரிட்டைப் போறேன். மனிசன் வீட்டிலை நிக்குதோ தெரியாது. சில சமயத்திலை வேறை இடங்களுக்குப் போய் அங்கை தங்கி நிண்டு வில்லண்டமானதுகளை முடிச்சுப் போட்டுத்தான் வாறவர். எதுக்கும் என்னெண்டு பாப்போம். முனியப்பர்தான் எல்லாத்துக்கும் வழிவிடவேணும்" என்றவர், காசியம்மானைப் பார்க்க,

காசியம்மான் ஒன்றும் கூறவில்லை. முகம் நன்றாக வெளுத்திருந்தது. நெற்றியும் மூக்கும் ஈரலிப்பைக் காட்டின. பனை ஓலைகளின் இடைவெளியால் வந்து காசியம்மானின் முகத்தில் பட்ட கதிரவ ஒளியில் வியர்வை முத்துக்கள் மின்னின.

"ஆரோ எறிமாடனுக்கு பூசை செய்து கழிச்சுப் போட்டடுப் போன கையோடை அந்த இடத்துக்கு பொடியன் போயிருக்கிறான். பூசாரியாரின்ரை பொல்லாத மந்திரங்களாலை கட்டுப்பட்டு தனது இடத்துக்குப் போகேலாமல் கோவத்தோடை நிண்ட எறிமாடனிட்டை இவன் பொடியன் இசகுபிசகாய் அம்பிட்டிட்டான். அதாலை என்னாலை அதைத் துரத்திறது கொஞ்சம் கடினமாய் இருக்கு. முத்தர்தான் இதுகளுக் கெல்லாம் சரியான ஆள்." என்ற முனியப்பர்,

"விசயத்தை வெளிக்காட்டாதையும். காதோடை காதாய் இருக்கட்டும், நான் சுறுக்காய் அலுவலைப் பாக்கிறேன்." என்ற முனியப்பர், "நான் நடக்கிறேன்" எனக் கூறிவிட்டு, தனது வீட்டுக்குப் புறப்பட்டார்.

சற்று நேரம் அவ்விடத்திலேயே நின்ற காசியம்மான் உடைந்த மனத்தோடு, கந்தசாமியின் வீட்டுப்பக்கமாய் திரும்பி நடக்க,

"அம்மான், அம்மான்... ஒண்டைச் சொல்ல மறந்திட்டேன். பொடியனை வெளியாலை கிளியாலை மட்டும் விட்டிடாதையுங்கோ. எறிமாடன் ஏதேன் நடத்தி, பொடியனுக்கு வில்லண்டம் வரப்பண்ணிப்போடுவான். வில்லண்டமெண்டால் உசிர்தான். இன்னொண்டு, மறந்திடாமல் கத்தி கித்து, கயிறு கியிறு ஒண்டையும் பொடியனிண்டை கண்பட வைச்சுப் போடாதையுங்கோ. அதுகளைக் கண்டால் போதும், எறிமாடனுக்கு வாச்சுப் போடும். தன்ரை கூத்தைக் காட்டிப் போடுவான். சாக்கிரதை அம்மான்"

மீண்டு வந்து எச்சரித்துப் போட்டுத் திரும்பினார், முனியப்பர் மாமா.

காசியம்மான் ஒருவருக்கும் கூறவில்லை. முனியப்பரும் ஒருவருக்கும் கூறிவில்லை என்கிறார். ஆனால் எப்படியோ ஊரார் எல்லோருக்கும் கந்தசாமியில் பொல்லாத எறிமாடன் தொற்றிக் கொண்டது தெரிய வந்து விட்டது. கந்தசாமியைத் தவிர மற்ற எல்லோருக்குமே விடயம் தெரியும், முத்தம்மா, சிவா உட்பட.

◊ **கனி** ◊

கந்தசாமியின் வீட்டுப் பக்கமாய் சிறுவர்களை ஒருவரும் போக விடுவதில்லை. கந்தசாமியின் வீட்டுப்பக்கமாய் இரவில் ஒருவருமே நடமாடுவதில்லை. கந்தசாமியுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் எறிமாடனுக்கு அவ்வளவாய் ஊரார் பயந்திருந்தார்கள்.

காசியம்மான் மட்டும் கந்தசாமியின் வீட்டில் இரவில் வந்து தங்குவார். அவரது மனைவியும் முத்தம்மாவுடன் வந்து தங்குவா. இருவரது கையிலும் முனியப்பர் மந்திரித்துக்

தொடர்ச்சி 24ஆம் பக்கம்




A Career for Success

Diploma Courses
- Office Administration - 24 weeks
- Accounting and payroll - 24 weeks
- Computerized Accounting - 42 weeks

Certificate Programs
Maintanance/Electrical
- Emerson Control Technique
- Proface-HMI
- RockWell Automation
- PLCs - AllenBradly, Omron, Seimens,and Panasonic

CAD/CAM Technology
- Auto CAD
- SolidWorks
- MasterCAM X6
- MicroStation
- Blue Print Reading
- Inventor

Multi-Media
- Basic Film Making & Camera
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress
- 3D ANIMATION

Steel Detailing using TEKLA

Electrical Pre Exam Course (309A)

Bank Teller Course
Cashier Course
Income Tax Course

Computer Technology
- PC technician (A+)
- Programs - C++, Visual Basic, Java
- SQL Database
- Web Development
  - HTML, CSS, JAVASCRIPT
- LINUX systems

Accounting Softwares
- Quick Books
- Simply Accounting
- Accpac
- MS Office

Social Media
- Facebook, YouTube, LinkedIn, Twitter

(Certificate Courses are taught individually and each courses less than 40hrs)

Maternity
42 1. Living expenses,
2. Daycare fees 3. Transport expenses

COVERS TUITION AND LIVING EXPENSES UP TO $28,000

beta College
of Business & Technology

Tel: 416.449-BETA(2382)
www.betacollege.ca
info@betacollege.ca
1085 Bellamy Road, Unit 208, (Bellamy & Ellesmere), Scarborough, ON, M1H 3C7

# சார்பியல்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

இயற்கையின் அதிசய வேலையால் அங்கும் வெளிநேரம் விறைப்பில்லாது தளும்பிக் கொண்டுதான் இருக்கின்றது, வளைந்து



நெளிந்துதான் காணப்படுகின்றது. $E = mC^2$ என்ற சமன்பாட்டின், திணிவு உள்ள இடமொன்றில், அதாவது பொருள் ஒன்று இருக்கின்ற இடத்தில் சக்தி செறிந்துள்ளது எனலாம். இப்பொழுது அப்பொருளின் திணிவில் சடுதியில் மாற்றம் ஏற்படுகின்றது என்போம். ஏதோ காரணத்தால் அப்பொருளின் திணிவு குறைகின்றது என்போம். அதனால் அவ்விடத்தில் சடுதியில் சக்திப் பரம்பலில் மாற்றம் உண்டாகிறது. இன்னமும் தெளிவாகக் கூறின் சக்தியின் அளவு அவ்விடத்தில் குறைக்கப்படுகிறது. குறைக்கப்பட்ட சக்தியானது என்ன செய்யப்படுமெனில் அவ்விடத்தில் இருந்து வெளியே வீசப்படும்.

மீதியை அடுத்த தடவை பார்ப்போம்

# தரமான...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

இது நல்லதல்ல. ஆனால் பெரிய கடன் (உதாரணம்: அடமானக்கடன்) பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பல நிறுவனங்கள் கிறடிட்டை எடுத்தாலும் அது பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. ஏனெனில் பெரிய கடன் எடுக்கும் போது பல இடங்களிற்கு செல்வது நியாயமானதாகவே கொள்ளப்படும். எமது கிறடிட் பெறுமதியை ஒன்லைன் (online) இல் நாமே பெறலாம். இதற்குரிய கொடுப்பனவு Equifax $23.95 மற்றும் TransUnion $16.95 ஆகும்.




இலவசமாக கிறடிட் பெறுமதியை பெற Equifax 1.800.465.7166 TransUnion 1.800.663.9980 ஐ தொடர்புகொள்ள முடியும்.

# பெறுவதில் மேலும் இறுக்கம்

CMHC, அரசினால் நிர்வகிக்கும் கடன் பெறுபவர்களிற்கான நிதி நிறுவனங்களுக்கு பொறுப்பாக நிற்கும் நிறுவனம் 1946ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு கனடிய மக்களின் வீட்டு கனவை நனவாக்கிக் கொண்டு இருக்கிறது. அதாவது 20% இற்கு குறைவாக முதலீடு செய்து அடமானக் கடன் பெறுபவர்களுக்கு காப்புறுதி வழங்கும் நிதி நிறுவனம். இந்நிறுவனம் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி 2014 இல் கடன் பெறுவதில் மேலும் இறுக்கமான இரு நிதி நிலைகளை உருவாக்கியுள்ளது.

அவையாவன இவை இரண்டும் மே 30, 2014 இலிருந்து அமலிற்கு வரவுள்ளது.

1. 20% இற்கு குறைவாக இரண்டாவது வீடு / மனை வாங்குபவர்களுக்குரிய அடமானக் கடனிற்குரிய காப்புறுதி நிறுத்தப்படுகிறது. இதனால் வீடு/மனை வைத்திருக்கும் பெற்றோர்களால் முதல் தடவை வீடு வாங்கும் பிற்ளைகளுக்கு உத்தரவாதம் (Gurantor) கொடுக்க முடியாது.

2. சொந்தமாக தொழில்புரிபவர்கள் தமது வருமானத்தை தகுந்தவர்களால் உறுதிப் படுத்தாமல் போனால் இவர்களின் கடனிற்கு காப்புறுதி தவிர்க்கப்படுகின்றது.

• ஏற்கனவே கடந்த சில வருடங்களாக நான்கு தடவை அடமானக்கடன் பெறுவதில் இறுக்கமான நிலைமை ஏற்படுத்தப்பட்டது என்பது விளம்பர வாசகர்களுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டது.

## அடமானக்கடன்

# பிடித்தவர்கள்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

வாசல் படலையை திறந்து கொண்டு யாரோ உள்ளே வரும் சத்தம் கேட்டு சுய நினைவுக்கு வந்தவள் வாசலை பார்த்த போது, சரோஜா ரீச்சரும் சிநேகாவும் உள்ளே வந்தார்கள். ரீச்சரோடு, சிநேகாவைக் கண்ட கருத்தாயி பதைச்சுப் போய் என்னங்க ரீச்சர் இவ ஏதும் தப்பு பண்ணிட்டாளா? என கேட்டாள். அதுக்கு ரீச்சர் அவ ஒண்டும் தப்புப்பண்ணல, அவட வயசு தான் தப்பு பண்ணிச்சு எண்டு சொல்ல, ஒண்டும் புரியாமல் அப்பாவியாக சிரித்தா கருத்தாயி.. "என்ன கருத்தாயி நான் சொல்லுறது உனக்கு புரியுதா"? என்று சரோஜா ரீச்சர் கேட்க "இந்த மக்குக்கு எங்க ரீச்சர் புரியபோகுது" என்று சொல்லி மௌனமாக நின்றாள்.



அருகில் வந்த ரீச்சர், கருத்தாயி உன் பொண்ணு வயசுக்கு வந்திட்டா என்று சொன்னதும் தான், ஓ... அதுவா எனக்கேட்ட கருத்தாயிக்கு என்ன செய்வதென்று தெரியாமல் எந்தவித உணர்வுகளும் காட்டாமல் நின்றவவைக் கண்ட சரோஜா ரீச்சர் "என்ன நான் நல்ல செய்தி சொல்லுறன் நீ ஒன்றுமே உணர்ச்சியில்லாமல் நிற்கிறாய்'' எனக் கேட்கவும், "என்னங்க ரீச்சர் இந்த செய்திகள் எல்லாம் பணக்காரருக்கு தான் மகிழ்ச்சியானது. எங்களைப்போல் ஏழைகளுக்கு, ஒரு நேர கஞ்சிக்கே வக்கத்தவள் நான் இதுக்கு எப்படி சிரிக்கமுடியும் என்றாள்''. சிநேகாவை கட்டி அணைத்த கருத்தாயி "வாம்மா வா நாமளும் மனிதர்கள் தானே, நாம் வாழும் உலகத்துக்குள் சிரிப்போமென்று" சொல்லி ரீச்சர் புள்ளையைக் கொண்டு வந்து விட்டதற்கு ரொம்ப நன்றி என்று சொன்னார்.

வெளியில் வந்த சரோஜா ரீச்சருக்கு கருத்தாயின் வார்த்தைகள் வலியினை ஏற்படுத்தியது. துன்பம் என்பது ஒரு சிலருக்கு மட்டும் தானா சூழவேண்டுமென்ற கேள்வி ரீச்சர் மனதிலும் எழுந்தது. கருத்தாயியின் இந்த வாழ்க்கைக்கு யார் காரணம்? ஏன் இவவுக்கு மட்டும் இப்படி நடக்கவேண்டும் என்று எண்ணிய சரோஜா ரீச்சர் திரும்பி வந்து கருத்தாயி,. கருத்தாயி எனக் கூப்பிட யாரது என்று கேட்டுக்கொண்டு வெளியில் வந்தா கருத்தாயி. ரீச்சரைக் கண்டதும் என்னங்க ரீச்சர் நீங்க இன்னமும் போகலையா எனக் கேட்க ரீச்சர் பக்கத்தில் வந்து தன்னிடமிருந்த 200 ரூபாவை எடுத்து பிள்ளையின் செலவுக்கு வைச்சிரு எண்டு கொடுத்தா. முதலில் வாங்க மறுத்தவ, சரோஜா ரீச்சரின் வற்புறுத்தலில் வேண்டிக் கொண்டா. ரீச்சர் நீங்கள் எங்கள்ள வைச்சிருக்கும் அன்புக்கும், உங்கட உதவிகளுக்கும் நான் எப்படி கைமாறு செய்யப் போறேனோ தெரியாதென கண்கலங்கி நின்றவவை சரோஜா ரீச்சர் என்ன கருத்தாயி இதுக்கெல்லாம் பெரிய பெரிய வார்த்தைகள் சொல்லுறாய். என்னட்ட இருக்கு தாறன். பிள்ளையைக் கவனமாக பார்த்துக்கொள் என்று சொல்லி சென்றவவுக்கு இரு கரம் குவித்து நீங்க நல்லா இருப்பீங்க ரீச்சர் என்று தன் நன்றியை தெரிவித்தார்.

உள்ளே வந்த கருத்தாயிக்கு மகள் சிநேகாவின் கதறல் கவலையத்தந்தது. என்னம்மா, ராசாத்தி என்ன செய்யுது. அம்மா எனக்கு வயித்து நோ தாங்க முடியாமல் இருக்கம்மா என்று சொல்லி வயித்தை பிடித்துக்கொண்டு கத்தினாள். ராசாத்தி, செல்லம் இரண்டு நாளைக்கு இப்படித்தான் இருக்கும் நான் போய் அந்த மகராசி தந்த காசுக்கு பிள்ளைக்கு சாப்பாட்டு பொருட்கள், நல்லெண்ணை, முட்டையெல்லாம் வேண்டிக் கொண்டு வாறன் அதுவரை பொறுமையாக இரும்மா எண்டு சொல்லி அவசர அசவரமாக வீட்டிலிருந்து இறங்கி நடந்தா, கருத்தாயின் கால்கள் நடந்தனவே ஒளிய, அவவின் எண்ணங்கள் எங்கெங்கோ அலை பாய்ந்தது.

மூன்றாவது தன் வயித்தில் தங்கியதும், ஐயோ இது என்ன பிள்ளையாக இருக்குமோ என நினைத்தவளுக்கு, பெண் பிள்ளையாக இருந்தாலும் எண்டு நினைத்து அழிக்க போனவவை தாய் மகமாயி நம்பிக்கையூட்டினாள். அட புள்ள இது ஆண் பிள்ளையாக இருந்தால் என்று. அம்மாவின் வார்த்தையில் தான் மூன்றாவதையும் பெத்தெடுத்தாள். கடவுளா! யார் இவர்? ஆணா? பெண்ணா? என்ற கேள்வி கருத்தாயின் மனதில் எழுந்தபோது உடனேயே இல்லை இல்லை அது ஆண் தான். அதனால் தான் மனித வர்க்கத்தில் எல்லா உடல் சுமையையும் பெண்ணுக்கே கொடுத்துள்ளார். தன் இனம் சொகுசாக வாழ எண்ணியதால் தான் எங்களை இப்படி போட்டு பாடு படுத்துகின்றார் என்று கடவுளை வஞ்சித்துக்கொண்டு நடந்தவவின் எண்ணங்களில்? படு பாவி இந்த என் ஆம்பிளையான் இப்படி என்னை அனாதையாக விட்டு தொலைஞ்சிட்டானே என்று திட்டிக்கொண்டு கடையை வந்தடைந்தாள்.

கருத்தாயியைக் கண்டதும் கடக்கார கருப்பன் வாம்மா வா என்ன கன நாளாக் காணம் என்று கேட்க, என்னண்னே வீட்டில இருக்கிற வேலையே செய்ய நேரம் காணாது



- ஆசீர் அன்ரனி -
ஸ்காபரோ, கனடா

தொடர்ச்சி 33ஆம் பக்கம்



சந்திரமௌளீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# கண்கள்

கண்கள் முகவீட்டின்
பூட்டு இல்லாத கதவுகள்
கல்லாத கண்களைப்
புண்கள் என்கிறார் வள்ளுவர்
கற்ற கண்கள் பொல்லாதவையாகவும்
கல்லாத கண்கள் நல்லவையாகவும்
நான் கவனித்திருக்கிறேன்.

கண்களின் வழியே கண்டதெல்லாம் புகும்
எனினும்
வேண்டாதவற்றை வடிகட்டி
வெளியேற்றிவிட வேண்டும்
கண்ணால் கண்டதும் பொய் என்றால்
கண்கள்
கவனமாக இருக்க வேண்டும் அல்லவா?
கண்களைப் பார்த்துப் பேசும் கண்கள்
குறைந்து வருவது
நமக்குத் கவலை அளிக்கிறது



உடலில் வளராத உறுப்பு
கண்கள் மட்டும் தானாம்
வயதுக்கு ஏற்றபடி என்னமாய்
வடிவம் காட்டுகின்றன கண்கள்

கண்தானக் கண்கள்
இந்தப் பிறவியிலேயே
இன்னொரு பிறவி காண்கின்றன

கருப்பு வெள்ளைக் கண்களும்
கலர்க் கண்களும் உலகில் கலந்திருக்கின்றன

கண்கள் கலங்குவதும் சிரிப்பதும்
கண்களைப் பொறுத்தவை அல்ல
காட்சிகளைப் பொறுத்தவை

கண்கள் இல்லை எனின்
கனவுகளும் இல்லை எனலாம்
கண்ணாயிரம் என்ற கூற்று
நகக்கண்களையும் ரோமக் கண்களையும்
கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கலாம்

விழிகளோடு விழிகள்
உரையாடிக் கொண்டிருக்கும் வேளையில்
மொழியின் பற்றாக்குறை விளங்கும்
கேமராக்களுக்கு உயிர் கொடுத்த கண்களே
இன்று
கேமராவுக்கு மயங்குகின்றன
கண்ணுக்கு எட்டிய தூரம் என்பது
காதுக்கு எட்டிய தூரமல்ல

கண்கள்
இதயத்தின் இயற்கைக் கோள்கள்
கண்பார்வை உடையவரே
கண்ணாமூச்சி ஆடலாம்
கண்ணுதல் எனின் ஆண்பால்
திருநுதல் எனின் பெண்பால்
இருபாலும் ஒருபாலாவது
புணர்ச்சிக் கலப்பால்
சிவந்த இதழ்கள் வெளுப்பதும்
வெளுத்த விழிகள் சிவப்பதும்
கலவியின் ஒருவிதம்

கண்ணுக்கு அணிகலம் கண்ணாடியோ
கண் மையோ அல்ல கண்ணோட்டம்
கண்களுக்கு வேகத்தடை இருந்தால்
காதல் விபத்துக்கள் குறையலாம்
கண்களின் ஆழத்தைக் காணப்பதரிது
அதனால் தான்
கடலினும் பெரிய கண்கள் என்றான் கம்பன்

**- பரிணாமன்**

**நன்றி - தாமரை**

# தென்னாபிரிக்க...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

கலந்துரையாடியதாகவும் தெரிவித்தனர். இலங்கையின் தேசிய பிரச்சினைக்கான அடிப்படை காரணங்கள், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகள் ஆகியவை தொடர்பில், சகலவிதமான விடயங்கள் பற்றியும் இந்த விஜயத்தின் போது பேசியதாக கூட்டமைப்பினர் மேலும் தெரிவிக்கின்றனர். தென்னாபிரிக்காவின் ஒரு உயர்மட்டக் குழு விரைவில் இலங்கை வரவுள்ளதாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர். "இலங்கை விவகாரத்தில் எமது நட்பு நாடான தென்னாபிரிக்கா வெளிக்காட்டும் ஆர்வத்தை ஆரோக்கியமான விடயமாகவே பார்க்கின்றோம். எதிர்காலத்தில் தென்னாபி ரிக்காவின் இந்த ஆர்வம் எவ்வாறு பரிணாமம் அடையும் என்பதை அடுத்த கட்ட நடவடிக்கைகளை வைத்தே பார்க்க வேண்டியுள்ளது" என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஸ் குணவர்த்தன தெரிவிக்கின்றார்.

அத்துடன், "இலங்கை விவகாரத்தில் மூன்றாம் தரப்பு தலையிடுவதை இலங்கை அரசாங்கம் ஒருபோதும் விரும்பாது எனினும், தென்னாபிரிக்கா எமது நட்பு நாடு என்பதாலும், கடினமான பாதையை அந்த நாடு கடந்து வந்துள்ளது என்பதாலும் அதன் ஆர்வத்தை ஆரோக்கியமாகவே பார்க்கின்றோம்" என்றும் அமைச்சர் குறிப்பிடுகின்றார். ஆனால், நடைபெற விருக்கும் பேச்சுவார்த்தைகள் குறித்த திட்டமிடலையும், அதற்கான நிகழ்ச்சி நிரலையும் யார் தயாரிக்கப் போகின்றார்கள் என்கின்ற கேள்வி இங்கு முக்கியமானது. அரசாங்கம் அமைத்துள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பங்கேற்பதற்கு தென்னபிரிக்கா அழுத்தம்



கொடுக்க வேண்டும் என்று அரசதரப்பு எதிர்பார்ப்பதாகவே தோன்றுகின்றது. அவ்வாறாயின், தெரிவுக்குழுவில் பேச்சுக்கள் நடக்க அதற்கான மத்தியஸ்தராக ரமபோசா செயற்படப் போகின்றாரா என்றும் எண்ணத் தோன்றுகின்றது. எது எவ்வாறாயினும், போரின் பின்னர் சர்வதேச அனுசரணை ஒன்றுடன் நடைபெறப் போகும் பேச்சுக்கள் சரியான திசைவழியில் செல்லுமானால் அது வரவேற்கத்தக்கதே. ஆனால் தென்னாபி ரிக்காவிற்கு இது ஒரு கடினமான பணியாகவே இருக்கும் என்பதையும் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

# ஒருவரிச் செய்தி

- முயல் குட்டிகள் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் மலம் கழிப்பதே கிடையாது.
- இந்தியாவில் மட்டும் 300 பிரிவான மலைஜாதி மக்கள் வாழ்கின்றனர்.
- இந்திய தண்டனை சட்டத்தை உருவாக்கியவர் தாமஸ் பாபிங்கடன்
- கிளிகளுக்கு கேட்கும் சக்தி அதிகம்
- ஜப்பானியர்கள் உப்பை புனிதமாகக் கருதுகின்றார்கள்.
- மூக்கில் பல் உள்ள விலங்கு முதலை
- "காற்று நகரம்" என்றழைக்கப்படும் நகரம் "சிகாகோ"
- மதுவகையின் மேல் கொண்டுள்ள வெறி "டிப்ஸோமேனியா" எனப்படும்
- உலகத்தில் ஒரு நொடியில் 6 குழந்தைகள் பிறக்கின்றன.
- இங்கிலாந்தின் பழைய பெயர் ஆல்பியன்.
- ஆபிரிக்கா என்பதன் பொருள் கறுப்பு என்பதாகும்.
- கழுதைப்புலி நாய் வகையைச் சேர்ந்தது.
- நீர்யானை பன்றி வகையைச் சேர்ந்தது.





## நூல் வெளியீட்டு விழா
## ஆதிமொழி தமிழ் கவிதைகள் பாகம் 2

**சதாசிவம் பரந்தாமன்**

**இடம்:** மார்க்கம் ஸ்காபறோவில் அமைந்திருக்கும் சன்சிற்றி பிளாசாவில் கோவில் கொண்டிருக்கும் சபரிமலை ஐயப்பன் ஆலய ஒன்று கூடல் மண்டபம்.

**காலம்:** 10 - 05 - 2014 சனிக்கிழமை, மாலை 5:00 - 9:00 மணி வரை

இந்த நூல் வெளியீட்டு மூலம் பெறப்படும் நிதி ஸ்காபறோ கிறேஸ் மருத்துவமனைக்கு அன்பளிப்பு செய்யப்படும் என்பதை அறியத்தருவதோடு அனைவரையும் அன்புடன் வருக வருக என வரவேற்கின்றோம்.

# கோப்பி கோப்பையில் பரிசு

கனடாவில் பனி நிறைய கொட்டிக் கொண்டு இருந்தது. பலர் தெருக்களில் குப்பையை போட்டு விட்டு தங்களுடைய பாட்டிற்கு சென்றனர். இன்னும் பலர் நிலத்தில் இருந்த குப்பைகளை கவனிக்காமல் குளிரிலிருந்து தப்பிக்க மட்டுமே எண்ணிக் கொண்டு சென்றனர். இப்படி எல்லாம் நடந்து கொண்டு இருந்ததால் பனியின் கீழே நிறைய குப்பைகள் இருந்தன. வசந்த காலத்தில் பனி உருகிய பின் தான் இக்குப்பைகள் எல்லாம் கண்ணுக்கு தெரியும்.

சிறுவன் ஒருவன் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடத்திற்கு நடந்து போகும்போது இவற்றை கவனித்துக் கொண்டு சென்றான். இப்படி குப்பைகள் நிலத்தில் இருப்பது எல்லோருக்கும், மற்றும் சுற்றுப்புறத்திற்கும் கூடாது என்று அவனுக்கு தெரிந்ததால், ஒவ்வொரு நாளும் அவன் பள்ளிக்கூடம் செல்லுகையில் தான் கண்ட எல்லா குப்பைகளையும் ஒரு பையில் எடுப்பான். பள்ளிக்கு வந்து சேரும்போது அவற்றை எல்லாம் குப்பைத் தொட்டியில் போடுவான். வீட்டுக்கு வரும்போதும் இப்படிச் செய்தான்.



வீட்டிற்குள் குப்பை கொண்டு வருவது பெற்றோருக்கு பிடிக்கவில்லை என்றாலும், அவன் செய்வது நல்ல செயல் என்பதால் அவனது பெற்றோர்களும் ஒன்றும் சொல்லவில்லை. இப்படி செல்லுகையில் கோப்பி குடித்து விட்டு எறிந்த கடுதாசி கோப்பைகளும் தெருக்களில் இருந்தன. கோப்பி குடிக்கும் கடுதாசி கோப்பைகளில், அதன் விளிம்மை உருட்டிப்பார்ப்பதன் மூலம் பரிசு பெறுவதற்கு சந்தர்ப்பம் இருந்ததால் அவை அதிக அளவு தெருக்களில் இருந்தன.

ஒரு நாள் சிறுவனுக்கு முன்னால் நடந்து சென்றுகொண்டு இருந்தவர் ஒருவர், அவனுக்கு முன்னால் அவரது பாவித்த கோப்பி கோப்பையை நிலத்தில் போட்டுவிட்டு சென்றார். அதை எடுத்த சிறுவன் அதன் விளிம்பு இன்னும் உருட்டப்பட்டு பரிசு விழுந்ததா என பார்க்கப்பாடாததால் அதை கண்டு அதிசயப்பட்டான். பள்ளிக்கு நடந்து கொண்டே அவன் அதை உருட்டிப் பார்த்ததால் அதில் பணப் பரிசு இருந்தது.

என்ன செய்யலாம் என்று சிறுவன் நினைத்தான். அந்த கோப்பையை போட்டவர் இன்னும் முன்னால் சென்று கொண்டு இருந்ததால் அவன் அந்த மனிதனிடம் அதை திருப்பி கொடுத்து விட்டு சென்றான். அடுத்த நாள் காலையில் சிறுவன் வழக்கம் போல் நடக்கையில் கோப்பி கோப்பையை கீழே போட்ட அந்த மனிதன் நிற்பதைக் கண்டான். அவரும் அவனிடம் நன்றி கூறி, 'அந்த கோப்பையை நிலத்தில் போட்டது என் தப்பு. இனி இப்படி செய்யமாட்டேன். நீங்கள் செய்த நன்மையால், எனக்கு காசுப் பரிசு கிடைத்து விட்டது. நீங்கள் செய்த நல்ல வேலைக்கு இது என் நன்றி,' என்றார். அவர் சிறுவனிடம் பணத்தைக் கொடுக்கப் போகும் போது சிறுவன், 'பணம் வேண்டாம், தெருக்களை சுத்தம் செய்ய உதவுங்கள். அது போதும்,' என்றான்.

அவரும் வசந்தகாலம் வந்தவுடன் அந்த சிறுவன் உட்பட பலருடன் சேர்ந்து கொண்டு தெருக்களிலிருந்த குப்பைகளை பொறுக்கி சுத்தம் செய்தனர். அதன் பின்னர் தெரு மிக அழகாக இருந்தது.

**நீதி : சுத்தம் சுகம் தரும்.**



**ஞா. ஆரணி**
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# அம்மா

31ஆம் பக்கத்தொடர்ச்சி

என்று சொல்லி தனக்கான பொருட்களை சொன்னாள். அப்போது கருப்பன் என்னம்மா என்ன வீட்டில விசேசமா? எனக் கேட்க, விசேம் ஒன்றும் இல்லையண்ண அவள் ரெண்டாவது வயசுக்கு வந்திட்டாள் அது தான். அட அப்படியா விசயம். அப்ப உன் தம்பி காங்கேயனுக்கு, தாய் மாமன் என்ட முறையில சொல்லத்தானே வேண்டுமென்று கருப்பர் சொல்ல அட போங்கண்ணே, நீங்க இருக்கிற பாசம் கூட என் தம்பி என்னில இல்லை, அத விட அவன் பொண்டாட்டி.... போங்கண்ணே எனக்கு கோபத்தை கிளப்பாமல். சற்று பொறுமையான கருப்பர் பொருட்களை எடுத்து வைத்துக்கொண்டு,

"கருத்தாயி நீ என்னை உன் அண்ணனெண்டு சொல்லுறியே அதுக்கு ரொம்ப நன்றியம்மா. ஆனா இந்த அண்ணன் சொல்லுறன் நீ யாருக்கும் சொல்லாத ஆனா உன் தம்பிக்கு கட்டாயம் சொல்லம்மா, அவர் வாறது வராதது அவங்க பிரச்சினை, நீ சொல்லேல்ல எண்ட குறை வரக்கூடாது தாயி. அம்புட்டும் தான் சொல்லிப்போட்டன்" என்றார்.

கடையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த கருத்தாயி, தம்பி காங்கேன் மீதுள்ள கோபத்தில் தன்வசம் கதைத்துக்கொண்டு வந்தாள். இவ்வளவு வசதியாக இருப்பவன் தன் தாயிக்குரிய கடமையே செய்யாதவன், மருமகளுக்கு மட்டுமா வந்திடுவான், என்று புலம்பிக்கொண்டு வந்தவளுக்கு, என்ன இருந்தாலும் இந்த பயல் பிறந்த வீட்டுக்குள்ள எங்கய்யா பட்ட சந்தேசம் இருக்கே அதை இப்ப நினைத்தாலும் யாராலையும் மறக்க முடியாது. தம்பி என்று இந்த பய மேல தான் வைத்திருந்த அன்பையெல்லாம் படிச்சு முடிச்சதும், படிச்ச பிள்ளையை கல்யாணம் முடிச்சுக்கொண்டு பட்டணத்துக்கு போனவன் தான், ஒரு



அம்மா, அக்கா, பிள்ளைகள் இருக்கென்று ஒரு தடவைகூட வந்து பார்க்காத பயபுள்ள இதுக்கு மட்டுமா வந்திடுவான், என்று நினைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.

கடக்காற கருப்பண்ணை சொன்னதை மூத்தவ என்ற முறையில் மகள் ராதாவிற்கு சொல்லி என்னம்மா என்ன செய்யலாம், உன் கருத்து என்ன என்று கேட்க, அம்மா... மாமனைப்பற்றி சொன்னதும் கடும் கோவம் வந்தது. இருந்தும் அம்மாவின் மனம் வேதனைப்படும் என்றதற்காக மௌனமாக இருந்தாள். சற்றும் எதிர்பாராமல் அம்மா தன்னிடம் அபிப்பிராயம் கேட்டது என்னவென்று புரியாமல் இருந்த ராதாவை, அம்மா, பிள்ளை என்று கூப்பிட்ட குரல் நினைவுக்கு கொண்டு வந்தது. என்னம்மா ராதா என்ன யோசிக்கிறாய் உன்ர அபிப்பிராயம் என்னவென்று கேட்டா, ராதா தன்னை சுதாகரித்துக்கொண்டு அம்மா.... நான் என்ன சொல்ல உனக்கு எது சரியெண்டு படுகிறதோ அதை செய்யணை என்றாள்.

இளையவளுக்கான சாப்பாடெல்லாம் கொடுத்து முடித்துக்கொண்டு சற்று ஓய்வு எடுக்க நினைத்து படுக்க போனவவை அம்மா என்ற குரல் நிற்பாட்டியது. யாரது என்று கேட்டுத் திரும்பியவள் கடைசி ஷோபாவை பார்த்ததும் என்ன புள்ள அதுக்குள்ள பள்ளிக்கூடம் முடிஞ்சிதா? என்று கேட்டு நேரத்தைப்பார்த்தாள். வாடா வா உனக்கும் சாப்பாடு தந்திட்டு கொஞ்சநேரம் கண்ணயர்ந்தால்தான் விடிய நேரத்துக்கு எழும்பலாமென்று சொல்லிக்கொண்டு அடுப்படிக்கு போனாள். உடுப்பு மாத்தி கை, கால் கழுவிக்கொண்டு சாப்பிட வந்த ஷோபா அம்மா சிநேகாவுக்கு என்ன நடந்தது என்று கேட்டாள். அதுக்கு கருத்தாயி ஒரு நீண்ட பெருமூச்சோடு அவ வயசுக்கு வந்துட்டாவடி என்றார். ஓ... அதுவா அது தான் சரோஜா ரீச்சர் கொண்டு வந்து விட்டவவா? என்று ஆச்சரியத்தோடு கேட்டாள்.

மாலையில் எழுந்து ஏதோ தீர்மானித்தவளாக வெளிக்கிட்டுக் கொண்டு கடைப்பேரிப் பக்கமாக போனாள் கருத்தாயி. கருப்பண்ணனின் கடையில் போய் அண்ணே காலையில

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# இந்திய நாடாளு....

08ஆம் பக்கத்தொடர்ச்சி

தேவர், நாடார் சாதிகளைச் சேர்ந்தவர்களை முறையே அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் நிறுத்தியுள்ளன. வாக்காளர்களின் சாதி அபிமானத்தை கடந்து வைகோ வெல்ல வேண்டும். 6ஆம் தேதி முடிவுகள் தெரிந்துவிடும். வைகோவின் பிரதான அரசியல் முழக்கங்களில் ஒன்று, தனி ஈழம். குறிப்பாக, ஈழப் பிரச்சினையைப் பற்றி மட்டுமே தொடர்ந்து பேசி வருவதுதான் வைகோவின் அரசியல் பின்னடைவுக்குக் காரணம் என்று ஒரு கணிப்பும் உண்டு. ஆனால், ஈழத்தமிழர் பிரச்சினைகளில் உறுதியாக இருப்பவர் என்பதால் அவருக்கு இருந்து வந்த கொஞ்ச மதிப்பையும் ஆதரவையும் இந்தத் தேர்தலில் இழக்கும்படி ஆகியிருக்கிறது. தனி ஈழம்தான் தீர்வு என்று சொல்லும் வைகோ, தனி ஈழம் கூடாது என்று சொல்லும் பி.ஜே.பி.யுடன் கூட்டணி சேர்ந்துள்ளார்.

## கம்யூனிஸ்டுகள்

உலகிலேயே தேர்தலைச் சந்தித்து முதலாவது ஆட்சிக்கு வந்த கம்யூனிஸ்டுகள் என்ற பெருமை இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு உண்டு. தொடர்ந்து 40 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கு வங்கத்தில் சி.பி.எம். ஆட்சியிலிருந்தது. கேரளாவில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை உறுதியாக ஆட்சியைக் கைப்பற்றும் நிலையில் இருக்கிறார்கள். திரிபுராவில் மீண்டும் ஆட்சி அமைத்துள்ளார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் விடுதலை பெற்ற பிறகு நடந்த முதல் தேர்தலில் சென்னை இராஜதானியில் பிரதான எதிர்க்கட்சி கம்யூனிஸ்டுகள்தான்.

## ஆனால் இன்றைய நிலை என்ன?

அ.தி.மு.க. அல்லது தி.மு.க. என மாறி மாறி கூட்டு வைத்து ஒவ்வொரு தேர்தலையும் கடத்திக் கொண்டிருந்தவர்கள் இந்தத் தேர்தலில் தனித்து நிற்கிறார்கள். இதுவும் அவர்கள் எடுத்த முடிவு அல்ல. இப்படி நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டதால் நிற்கிறார்கள். கூட்டணிக்காக, அ.தி.மு.க. கட்சிக்காரர்களே வெட்கப்படும் அளவுக்கு அதிகமாக ஜெயலலிதாவைப் புகழ்ந்தார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தா. பாண்டியன். கடைசி தேர்தலின் போது கூட்டணி அமைத்திருந்தாலும் பின்னர் சற்று விலகிநின்று விமர்சனம் செய்தவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர். ஆனால், அவர்களும் ஜெயலலிதாவே பிடித்து வெளியே தள்ளுவது வரைக்கும் கூட்டணி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார்கள். என்ன ஆனது. தற்போது தமிழக அரசியல் காமெடியன்களாக பத்திரிகைகளால் கிண்டல் செய்யப்படும் நிலை. தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகளுக்கு மாற்றாக ஒரு கட்சியை எதிர்பார்க்கும் வாக்காளர்களை ஈர்க்கும் சக்தியாக இடதுசாரி அமைப்புகள் உருவாகியிருக்க முடியும். ஆனால் தற்காலிக அர சியல் சிக்கல்களை சந்திக்கும் போக்கால், அது நடக்காமலே போய்விட்டது. இனிமேலாவது செய்வார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## காங்கிரஸ்

இன்றும் தமிழகத்தில் காங்கிரஸுக்கு 8 – 10 சதவிகிதம் ஓட்டு வங்கி உண்டு. ஒவ்வொரு முறையும் இந்த 8 – 10 சதவிகிதத்தை, 20 – 30 சதவிகிதம் வரை வாக்கு வங்கி வைத்திருக்கும் தி.மு.க அல்லது அ.தி.மு.கவுடன் மாறி மாறிக் கூட்டுச் சேர்ந்து பத்துப் பதினைந்து எம்.பிகளை டெல்லிக்கு அனுப்பிவிடும் காங்கிரஸ். அது இம்முறை நடக்கவில்லை. காங்கிரஸுடன் சேர்ந்தால் அது நம்மையும் சேர்த்து காலி செய்துவிடும் என அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் அஞ்சி அலறி ஓடும் அளவுக்கு காங்கிரஸ் எதிர்ப்பு அலை தமிழகத்தில் நிலவுகிறது. அதற்குக் காரணம் ஈழம்!

தி.மு.க. – காங்கிரஸ் - தே.மு.தி.க. கூட்டணிக்காக கடைசிவரை கருணாநிதி முயற்சித்தார். விஜயகாந்த் மனைவி பிரேமலதா அவமானப்படுத்தும் விதமாக பேசியும் கருணாநிதி காத்திருந்திருந்தார். அப்படி ஒருவேளை இக்கூட்டணி அமைந்திருந்தால் அது பலமான கூட்டணியாகவும் இருந்திருக்கக் கூடும். இது நிகழாமல் சாதுரியமாக தடுத்துவிட்டார் ஜெயலலிதா. விளைவு, சிதம்பரம் உட்பட முன்னணி தலைவர்கள் எல்லாம்கூட களத்தில் இருந்து விலகிவிட்டார்கள். கன்னியாகுமரி தொகுதி மட்டும் இன்றைய நிலையில் காங்கிரஸுக்கு நம்பிக்கை தரும் தொகுதி. இத்தொகுதியில் மொத்தமுள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் மூன்று காங்கிரஸ் வசம் உள்ளது. இத்தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் 'வசந்த் அன் கோ' வசந்தகுமாரும் பணத்தை தண்ணியாக செலவு செய்துள்ளார் என்கிறார்கள். இதனால், சுலபமாக வெற்றிபெற்றுவிடலாம் எனக் கருதியிருந்த பி.ஜே.பி. வேட்பாளர் பொன். ராதாகிருஷ்ணன் கொஞ்சம் ஆடித்தான் போயுள்ளார். வசந்தகுமார் ஜெயிப்பாரா அல்லது பொன். ராதாகிருஷ்ணன் வெற்றி வாய்ப்பைப் பறித்து தி.மு.க. அல்லது அ.தி.மு.க. வேட்பாளர்கள் கையில் கொடுப்பாரா என்பது விரைவில் தெரியும்.

## பா.ஜ.க



தமிழ்நாட்டைப் பொருத்தவரைக்கும் 3 – 4 சதவிகித ஓட்டு வங்கிதான் பாரதிய ஜனதா கட்சிக்கு உண்டு. மோடிதான் அடுத்த பிரதமர் என்னும் அலை இதில் ஒன்று அல்லது இரண்டு சதவிகிதத்தை அதிகரிக்கக்கூடும்.
இது டெபாஸிட் திரும்பப்பெறுவதற்கே போதாது. இந்நிலையில் கூட்டணி கட்சிகளை நம்பி களத்தில் நிற்கிறது இக்கட்சி. பா.ஜ.க.வுக்கு இந்தியாவிலேயே அதிகமான கூட்டணிக் கட்சிகள் தமிழ்நாட்டில்தான் கிடைத்திருக்கின்றன. இக்கூட்டணி வைகோ, அன்புமணி ராமதாஸ் உட்பட 3 – 5 இடங்களைக் கைப்பற்றக்கூடும் என நம்பப்படுகிறது. தேர்தல் முடிவில் அ.தி.மு.க. கை ஓங்கினால், டெல்லியில் காங்கிரசைவிட அது தங்களுக்கே சாதகமாக இருக்கும் என்ற கணிப்பில் பா.ஜ.க. நம்பிக்கையுடன் இருக்கிறது. இந்த நம்பிக்கைதான் ஜெயலலிதா பின்னடைவுக்கும் கருணாநிதி உற்சாகத்துக்கும் காரணம்!

# அம்மா

33ஆம் பக்கத்தொடர்ச்சி

நீங்கள் சொன்ன விடையமாக வந்திருக்கிறேன் என்றாள். அதுக்கு என்னம்மா நான் செய்யவேண்டும் எனக்கேட்டார். வந்தண்ணே தம்பியட தொலைபேசி நம்பர் தெரியாது அது தான் என்று இழுத்த கருத்தாயிக்கு, பொறு புள்ள உன்ர தம்பியோடு படிச்சவர் தான் நம்ம கவுன்சிலர் அவரிட்ட கேட்டு வேண்டித்தாரன், நீ இந்தக் கடைய கவனித்துக்கொள் என்று சொல்லி சைக்கிளை வேகமாக மிதித்தவருக்கு தன்னையும் மதித்து கருத்தாயி சம்மதித்தது மிக மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவசர, அவசரமாக கவுன்சிலரிடம் போன் நம்பரை வேண்டிக்கொண்டு வந்தவர் தன் போனிலிருந்தே தொடர்பினை ஏற்படுத்தினார்.

மறுபக்கம் மணி ஒலிக்கும் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் ஒரு பெண் குரல் ஹலோ சொன்னதும் நான் மாவிலாறு கிராமத்திலிருந்து கருப்பன் பேசுறன், அப்பா இருக்கிறாங்களா என கேட்க, அப்பா உங்களுக்கு தான் போன் என சொல்லி போனை காங்கேயனிடம் கொடுத்தாள். காங்கேயன் போனை வேண்டி ஹலோ யார் பேசுறீங்கள் என்றான். அதுக்கு தம்பி நான் மாவிலாறிலிருந்து கருப்பன் பேசுறன் எப்பிடியப்பு இருக்கிறீங்க என்றார்? ஓ கருப்பண்ணையோ நான் சுகமா இருக்கிறன், நீங்க எப்படி இருக்கிறீங்க? என்றான். ஓம் நல்லா இருக்கிறன் என்று சொன்னவர்... சிறிய இடைவேளையின் பின்.... தம்பி உங்களோட ஒருவர் பேசவேண்டுமாம் என்று சொல்லி போனை கருத்தாயிடம் கொடுத்தார்.. ஹலோ என்று கருத்தாயி கேட்க பதிலுக்கு ஹலோ சொன்ன காங்கேயன் நீங்க யாரு பேசுறீங்க என்றான் வார்த்தைகள் தொண்டைக் குழியிலிருந்து அடைபட்டு பிசிறு பிடித்து வெளிவந்தது. கருத்தாயின் கண்களில் கண்ணீர் துளிகள் அவளை அறியாமல் உதிர்ந்தது. மீண்டும் காங்கேயனின் குரல் ஹலோ நீங்க யார் பேசுறீங்க என்றது. கருத்தாயி கருப்பனை பார்த்தாள் அவர் கையால் சமிக்கை காட்டி பேசசொன்னார். மீண்டும் சிறிது திறந்த குரலில் ஹலோ தம்பி என்று கூப்பிட்டா. தம்பி...தம்பி... நான்... அக்கா பேசுறன், உன்ர மருமகள் சிநேகா வயசுக்கு வந்திட்டா அதை சொல்லுவம் எண்டுதான் எடுத்தனான். எப்பிடி ராசா சுகமா இருக்கிறியா? எனக் கேட்கவும் தொலைபேசி இணைப்பு துண்டித்து சத்தம் கேட்டும் புரியாதவளாக தன் கதை சொல்லிக் கொண்டிருந்தாள் கருத்தாயி. மறுபக்கம் எந்தவித பதிலும் காணாத கருப்பன், பிள்ள என்ன தம்பி உன்னோட கதைக்கிறானோ எனக் கேட்டார். அப்போதுதான் மறு முனையில் சத்தம் கேளாமையினை உணர்ந்தாள்.

என்னம்மா இப்படி செய்து போட்டானே உன் தம்பி என்றார் கருப்பர். அண்ணே உங்களால என் தம்பியின் குரலையாவது கேட்டேனே எனக் கூறி, எவ்வளவண்ணே காசு எனக்கேட்டாள். துக்கம் தாளாமல். "போம்மா... போ இதுக்கெல்லாம் உன்னட்ட காசு வேண்டிறதா என சொல்லி எல்லாம் நல்லபடியாக நடக்கும் கவலைப்படாத" என சொல்லி அனுப்பினார் கருப்பர். மீண்டும் மனச்சோர்வோட நடந்து வந்த கருத்தாயியின் நெஞ்சு பாச வேதனையால் கனத்தது. இருந்தும் எங்கிருந்து வந்தார் இந்த மனிதர், தங்கச்சி, தங்கச்சி என்று பாசம் காட்டினாரே என் கருப்பண்ணை அது போதாதா என எண்ணிக் கொண்டு நடந்து ஒரு மர நிழலில் உக்காந்தாள்.. தன் மனச் சுமைக்கு மரநிழலில் பட்ட காத்து சுகமாக இருந்தாலும், தன் தம்பியால் ஏற்பட்ட வலியின் வேதனையை கருத்தாயினால் தாங்க முடியாமல் இருந்தது. இந்த பயலை வளர்க்க இந்த அக்கா செய்தவைகளையெல்லாம் மறந்து போட்டானே, பரவாயில்லை என் தம்பி எங்கிருந்தாலும் நல்லா இருக்கட்டும் என்று எண்ணிக்கொண்டாள்.

தொடரும்...




PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE

AVAILABLE
FOR RENT
Starting from $100.00

Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. GTA Square Mall (FINCH & MIDDLEFIELD) தொடர்புகளுக்கு: 416.917.6883

# ஏழு பேர் விடுதலை - நடந்தது என்ன?

- தொகுப்பு ஆனந்த் -

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 23 ஆண்டுகளாக சிறையிலிருக்கும் பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி உள்ளிட்ட ஏழு தமிழர் விடுதலை குறித்த வழக்கில் 'நல்ல தீர்ப்பு' வரும் என உலகத் தமிழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த நிலையில், இப்போது இந்திய உச்சநீதிமன்ற தீர்ப்பு வந்துள்ளது. தீர்ப்பு வழங்கிய தலைமை நீதிபதி ப. சதாசிவம், 'இந்த வழக்கு 5 அல்லது 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன பெஞ்ச் விசாரணைக்கு மாற்றம் செய்யப்படுகிறது. மூன்று மாதத்திற்குள் அதற்கான அரசியல் சாசன பெஞ்ச் அமைக்க வேண்டும்' என்று தீர்ப்பளித்துள்ளார். இதனால், ஏழு பேரும் விடுதலையாவார்கள் என்ற நம்பிக்கையுடன் இருந்த அனைவரின் நினைப்பிலும் இடி விழுந்துள்ளது. இது குறித்து தமிழக மனித உரிமை ஆர்வலரும் பி.யூ.சி.எல். செயற்பாட்டாளருமான சுகுமாரன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்த் தேசப் பொதுவுடைமை கட்சித் தலைவர் பெ. மணியரசன் ஆகியோரிடம் கருத்துக் கேட்டோம்.

## சுகுமாரன்

"ஏழு பேர் விடுதலையை எதிர்த்த வழக்கில் 23 அன்று தீர்ப்பு வழங்கப்படும். நல்ல தீர்ப்பு வரும்'' என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ப. சதாசிவம் அவர்கள் சென்ற 18ஆம் தேதியன்று கோவையில் செய்தியாளர்களிடம் கூறினார். இதனைத் தொடர்ந்து தி.மு.க. தலைவர் கருணாநிதி, "தலைமை நீதிபதி சதாசிவத்தின் அறிவிப்பு தேர்தலில் அரசியல் ரீதியான விளைவுகளை ஏற்படுத்தும்'' என அறிக்கை வெளியிட்டார். தேவையே இல்லாமல் ஏழு பேரின் விடுதலையை அரசியலாக்கினார் கருணாநிதி. அவரின் கனவு நனவாவது போல் இப்போது தீர்ப்பு வந்துள்ளது. இத்தீர்ப்புக் குறித்து பேரறிவாளன் தாயார் அற்புதம் அம்மாள் பேட்டி அளித்தபோது கதறிக் கதறி அழுதது மனித நேயமுள்ளவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தன் வாழ்நாள் முழுவதும் கெடுப்பதையே தொழிலாக கொண்ட கருணாநிதி, இவ்வழக்கை அரசியலாக்கியது தான் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் இவ்வழக்கை அரசியல் சாசன பெஞ்சுக்கு மாற்றியதற்குக் காரணம். ஒரு வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே சர்சையாகிவிட்டால் அவ்வழக்கை நடத்தும் நீதிபதிகள் அவ்வழக்கிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்வது மரபு. பல வழக்கு களில் இவ்வாறு நீதிபதிகள் செய்துள்ளனர். அதையேதான் நீதிபதி சதாசிவம் செய்துள்ளார்.



வழக்கு முழுவதையும் விசாரித்து சாதகமாக தீர்ப்புக் கூற இருந்த நிலையில், கருணாநிதி அறிக்கை விட்டு அரசி லாக்கியதால் இவ்வழக்கில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வழக்கை அரசியல் சாசன பெஞ்சுக்கு மாற்றி தீர்ப்பளித்துள்ளார். இவ்வழக்கில் சாதகமாக தீர்ப்பு சொல்ல இருந்தார் என்பதை, இவ்வழக்குக் குறித்து 'தி இந்து' ஆங்கில நாளேட்டில் தொடர்ந்து வந்த செய்திகளை கவனமாகப் படித்தால் தெரியும். முன்னரே இவ்வழக்கு 25ஆம் தேதியன்று தீர்ப்புக்காக பட்டியலிடப்பட்டு உச்சநீதிமன்ற வழக்கு விசாரணைப் பட்டியலில் வெளியிடப்பட்டுள்ளது. இதையே தலைமை நீதிபதி சதாசிவம் செய்தியாளர்களிடம் கூறினார். வழக்கை விசாரித்தவர் என்ற அடிப்படையில் ஓய்வு பெறுவதற்கு முன்னர் இவ்வழக்கில் தீர்ப்பு அளித்துவிட வேண்டும் என்ற அக்கறையில் பட்டியலிட்டுள்ளார். இதற்கும் தேர்தலுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. தேர்தல் ஆணையம் போன்றே உச்சநீதி மன்றமும் அரசியல் சட்ட அமைப்புதான். இதையெல்லாம் நன்கு அறிந்த கருணாநிதி தேவையில்லாமல் உச்சநீதிமன்றத்தை தன் அரசியல் விளையாட்டிற்குள் இழுத்தார். 23 ஆண்டுகள் தூக்குத் தண்டனைக் கைதி களாக சிறையில் அடைப்பட்டுக் கிடப்பவர்கள் விடுதலை அடையும் நாளை மனித உரிமையில் அக்கறை உடையோர் எதிர்ப்பார்த்துக் காத்திருந்தனர். இதை அரசி யலாக்கி சீர்குலைத்த கருணாநிதியின் முயற்சி கண்டனத்திற்குரியது.

ஓய்வு பெற்ற பின்னர் லோக் ஆயுக்தா போன்ற அமைப்புகளில் பெரிய பதவிகள் கிடைக்கும் என நீதிபதி சதாசிவம் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளார் என்று இப்போது சிலர் சொல்கிறார்கள். இது அவரைக் கொச்சைப்படுத்தும் செயலாகும். வீரப்பன் வழக்கில் மூவர் உட்பட 15 பேரின் தூக்கு, புல்லரின் தூக்கு, ராஜிவ்காந்தி வழக்கில் மூவரின் தூக்கு என அனைத்தையும் ரத்து செய்து ஆயுள் தண்டனையாக மாற்றி தீர்ப்பளிக்கும் போது வராத அழுத்தம், பதவி ஆசை அவருக்கு இப்போது வந்துள்ளது என்பது ஏற்புடையதல்ல. ஒரு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு அரசியலாக்கப்பட்டு, கருவிலேயே 'அபார்ஷன்' செய்யப்பட்டு விட்டது. வானுயர்ந்து நிற்கும் மதிற் சுவருக்குள் தனிமைச் சிறையில் 23 ஆண்டு களாக வாடும் அந்த உயிர்களின் கதறல் களுக்கு நாம் பதில் சொல்லியே ஆக வேண்டும். இல்லையேல் வரலாறு நம்மை மன்னிக்காது.

## கொளத்தூர் மணி

நீதிபதிகளுக்கு இவ்வழக்கில் இப்போது ஏதோ தயக்கம் உள்ளது போல் தெரிகிறது. அரசியல் சாசன அமர்வுக்கு மாற்ற வேண்டும் என்ற முடிவிற்கு இத்தனை நாட்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இதை அன்றே சொல்லி இருக்கலாம். சென்ற வாரம் கூட தலைமை நீதிபதி தனது பேட்டியில் தேர்தலுக்குள் தீர்ப்பு வரப் போகிறது என்று கூறியிருந்தது கிட்டத்தட்ட சாதகமான தீர்ப்பு பற்றிய உணர்வையே அனைவரிடமும் ஏற்படுத்தியிருந்தது. ஆனால்



இப்போதைய தீர்ப்பானது, இதில் ஏதோ அரசியல் குறுக்கீடு உள்ளதோ என்ற சந்தேகத்தை உணர்வாளர்களிடம் ஏறபடுத்தியுள்ளது.

## பெ. மணியரசன்

இந்த வழக்கில் தேர்தலுக்குள் உச்சநீதி மன்றம் தீர்ப்பு வழங்கக்கூடாது என்றும், அவ்வாறு தீர்ப்பு வழங்கினால் அது தமிழகத்தில் அரசியல் ரீதியிலான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறிய கருத்து, ஏழு பேரின் விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருந்த லட்சோபலட்சம் தமிழ் மக்களுக்கும் மனித உரிமை ஆர்வலர் களுக்கும் பேரிடி தாக்கியது போல் பெருந்துன்பத்தை உண்டாக்கியது. ராஜீவ் கொலை வழக்கில் தடாச் சட்டம் பொருந்தாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள போதிலும் தடாச் சட்டத்தின் கீழ் காவல்துறை அதிகாரியால் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் முதன்மை சாட்சியமாக வைத்து இந்த ஏழுபேரும் தண்டிக்கப்பட்டார்கள். ஒப்புதல் வாக்குமூலம் வாங்கிய காவல்துறை அதிகாரி தியா-கராசன், 'பேரறிவாளன் கூறியதைப் பதிவு செய்யாமல் நான் என் சொந்தக் கருத்தை எழுதினேன். அதனால், அவரை விடுதலை செய்யவேண்டும்' என்று அறிக்கை கொடுத்து ள்ளார். மேன்முறையீட்டில் இவ்வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற அமர்வுக்குத் தலைமை தாங்கிய நீதிபதி கே.டி.தோமஸ், இவ்வழக்கின் குற்ற அறிக்கையில் கூறப்பட்டிருந்த சில முரண்களைக் கணக்கில் எடுக்கத் தவறி விட்டோம் என்று பணி ஓய்வு பெற்ற பின் இப்பொழுது கூறியுள்ளார். இவற்றில் இருந்தே இவ் வழக்கில் அப்பாவிகள் தண்டிக்கப் பட்டுள்ளார்கள் என்பது தெரிகிறது. இந்நிலையில், இருபத்து மூன்று ஆண்டுகள் சிறையிலிருந்து விட்டார்கள் என்பதைக் கணக்கில் கொண்டு நிலையில் தமிழக அரசு



இந்த ஏழு பேரையும் விடுதலை செய்ய முன்வந்தது. இந்திய அரசு அதை எதிர்த்துத்தடை கோரி வழக்குப் போட்டது. உச்சநீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்து விட்டு வழக்கை முழுமையாக விசாரித்து விட்டு தீர்ப்பை ஒத்திவைத்தது. 25.04.2014 அன்று பணி ஓய்வு பெறும் தலைமை நீதிபதி சதாசிவம், தம் தலைமையில் விசாரணை முடிந்த முகாமையான வழக்குகளில் ஓய்வுக்கு முன் தீர்ப்பு வழங்க வேண்டிய சட்டத்தேவையும் சட்ட நிலையும் இருந்ததால், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சதாசிவம் அவர்கள், இந்த வழக்கு பற்றி செய்தியாளர்கள் கேட்டதற்கு ஓய்வு பெறுவதற்கு முன் தீர்ப்பு சொல்வோம் என்று கூறினார். இதனைத்தான் கருணாநிதி எதிர்த்தார். ஏப்ரல் 24இல் தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு நடைபெறுவதற்கு முன் வந்தால் அரசியல் ரீதியான விளைவுகளை ஏற்படுத்தலாம். எனவே இப்பொழுது தீர்ப்பு வழங்க கூடாது என்று கூறினார். தீர்ப்பு வந்தால் அது ஜெயலலிதாவுக்கு சாதகமான உணர்வை வாக்காளர்களிடம் உருவாக்கும் என்று கருணாநிதி அச்சப்படுகிறார். இந்த வழக்கு மனித உரிமை தொடர்பானது, மாநில உரிமை தொடர்பானது. ஆனால், 'இந்த இரண்டு உரிமைகள் பற்றியும் எனக்கு அக்கறையில்லை, எனது தேர்தல் ஆதாயம் தான் எனக்கு முக்கியம்' என்று கருணாநிதி கருதுகிறார். தன்னலவாத அரசி யல் அவர் நெஞ்சத்தை கல் நெஞ்சம் ஆக்கிவிட்டது. புதிய அமர்வு அமைக்கப்பட்டு, அது தொடக்கத்திலிருந்து விசாரணையைத் தொடங்கி, அது ஒரு முடிவுக்கு வர எவ்வளவு காலதாமதமாகும்? அந்த ஏழு பேரின் கதி என்னவாகும்? இருபத்து மூன்றாண்டுகளாக சிறையில் உள்ள அப்பாவித் தமிழர்கள் ஏழு பேர் வாழ்வு பற்றி கருணாநிதிக்குச் சிறிதும் கவலையில்லை. ஈழத்தில் லட்சக்கணக்கான தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்ட போது தன்னல அரசியல் நடத்திக்கொண்டு அந்த இனப்படு கொலைக்கு மறைமுகமாகத் துணைபோனார், கருணாநிதி. இப்போது இந்த ஏழு தமிழர்களைப் பலியிடப் பகிரங்கமாகக் குரல் கொடுத்துவிட்டார்.

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
CHEMISTRY, PHYSICS, BIOLOGY
FUNCTIONS, ADV. FUNCTIONS
CALCULUS & VECTORS, DATA MGT
SCIENCE, MATH, ENGLISH, FRENCH
Individual & Small Group classes, Individual care
GR 1- 12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
SPECIAL CLASSES FOR
PRE-UNIVERSITY
MCAT EXAM
IB & AP program
SUMMER CLASSES "July- August"
REGULAR CLASSES "Throughout the year"


Niru
நிரு
பிராண்ட்
Niru
BRAND
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE
Niru BRAND

# நான் வாசித்து மகிழ்ந்தது

சாதாரண மக்களும் விளங்கிக்கொள்ளும் எளிய நடையில் இலக்கிய நயம் மிகுந்த பாரதியாரின் இப்பாடல் மகிழ்ச்சியைத்தரும் அதேவேளை சிந்திக்கவும் வைக்கின்றது.

சென்றது இனி மீளாது மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவீர்
எண்ண மதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு
தின்று விளையாடி இன்புற்றிருந்து வாழ்வீர்
தீமை யெல்லாம் அழிந்து போம், திரும்பி வாரா.

வாழ்வை வளம்படுத்தும் நல்ல விடயங்களை 'வா வா வா' என கூவி அழைப்பதை படிக்கும் போது மனதில் மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கைதானே?

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிப டைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறு போல் நடையினாய் வா வா வா

- மகாகவி பாரதியார் பாடல்கள்

- ரஞ்சி கதிர்

## நான் வாசித்து மகிழ்ந்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் ***Vlambaram@sympatio.ca***
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

# தொழில் வழி உழைப்பவர் வாழியவே!

தேசத்து மக்களைக் காக்கும் பணியினில்
தினமும் உழைப்பவர் வாழியவே - இந்தக்
காசினி மாண்புறப் பொருண்மியம்
மலர்ந்திடத் திருவினைப் படைப்பவர்
வாழியவே!

மானிடர்க் குணவுப் பொருட்களை
வழங்கிடும் ஏருழு முழவர்கள் வாழியவே -
எங்கள் காணிடை கழனியில் பயிர்வளர்ந்
தெழிலுறக் களிப்புடன் உழைப்பவர்
வாழியவே!

மண்வளம் தேர்ந்தவன் நற்பயன் நல்கிடும்
மண்ணியல் நிபுணர்கள் வாழியவே - உயர்
விண்ணிடை நீர்வளம் ஆய்ந்ததை
உரைத்திடும் விண்ணியல் அறிஞர்கள்
வாழியவே!

வளரும் மழலைகட் கறிவினை யூட்டிடும்
அருளுடை ஆசான் வாழியவே!
தினம் சுழலும் உலகினில் மாறிடும்
இயற்கையைக் கற்றுணர்ந் துரைப்பவர்
வாழியவே!

நோயுற்ற மக்களின் உயிர்களை மீட்டிடும்
நற்பணி மருத்துவர் வாழியவே - தினம்
ஆயுளுக் கிரந்திடும் அபலைகள் துயரினை



அகற்றி மகிழ்பவர் வாழியவே

ஆலைகள் சாலைகள் இயங்கிட இயந்திர
வியல் நெறி யுழைப்பவர் வாழியவே -
என்றும் சோலைக எமைத்து நற்
சாலைகள் பேணிடும் பணியினுக்
குழைப்பவர் வாழியவே

வேத நெறியினி லிறைபணி யாற்றிடும்
உத்தம குருக்களும் வாழியவே - சாதி
பேத மறுத்து நல் லறமும் செழித்திடத்
தீமைகள் தகர்ப்பவர் வாழியவே!

**- மாரீசன்**

# என்னைத் தந்தேன் தலைவன் உண்டான் என்னை இழந்தேன்

குறிஞ்சிநிலத்தலைவி தலைவன் மணம்புரியாது இருப்பதனால் மனம் நொந்து தோழிக்கு உரைக்கின்றாள். எனது உயிர்தோழியே கேட்பாயாக தலைவனை நம்பினேன். அவனி டத்தில் என்னைத் தந்தேன் என்னை முழுமையாக உண்டனன். குறவனது தோட்டத்தில் வளர்ந்த பொன்போன்று காட்சிதரும் தினையை கிளி கோதி உண்டபின் மழையினால் பசுமையாக இன்னும் இலை காட்சியளிப்பதுபோன்று எனது பெண்மையை அவன் உண்டுவிட்டான். அதனால் தானியம் இழந்த பயிரைப்போல உள்ளேன். நானும் அவன் வருவான் என்னை மணந்துகொள்வான் என்ற நினைவில் உயிர்வாழ்கின்றேன். அந்த தானியம் இழந்த தினைப் பயிரின் இலையாக இன்னும் பசுமையாக உள்ளேன். தலைவன் என்னை வரைத்துக்கொள்ளாமல் காலத்தை நீடிப்பது எனக்கு மிகுந்த மனவேதனையைத் தருகின்றது. நானே அவர் வருவார், என்னை வரைத்துக் கொள்ளுவார் என்னும் நம்பிக்கையில் உயிர்வாழ்கின்றேன்.

பெருமழை நீடித்து தினை மீண்டும் கதிர்விடுவதுபோன்று அவர் வந்து என்னை மணந்துகொண்டால் எனது நலிவு, மனவேதனையில் இருந்து விடுபட்டு மீண்டும் நான் நலனடைவேன், என்று தனது தோழிக்கு தனது மனதிலுள்ள வேதனையைக் கூறி ஆறுதல் பெறுகின்றாள். இதனை தோழி தலைவனுக்குத் தெரியத்தருவாள் என்னும் எண்ணமும் அவள் உள்ளத்தில் இல்லாமல் இல்லை.

**- த. சிவபாலு -**
B.Ed (Hons), M.A

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை
கிளி குறைத்து உண்ட கூழை இருவி
பெரும் பெயல் உண்மையின் இலை ஒலித்தாங்கு என்
உரம் செத்தும் உளெனே தோழி! என்
நலம் புதிது உண்ட புலம்பினானே. (குறுந்தொகை)
என்பது உறையூர் முதுகண்ணன் சாத்தனாரின் புலமைக்குச் சான்றாக அமைகின்றது. மிக நுட்பமாக களவொழுக்கத்தில் இன்பமுற்றுப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டும் வந்து விரைவில் தன்னை மணமுடிக்கவில்லையே என்பது அந்த இளம் பெண்ணின் ஏக்கம், பரிதவிப்பு என்பன மிக நுட்பமாக வெளிப்படுத்தப்படுகின்றது. அத்தோடு கூடிப்பிரிதல் பெண் தன்னைத் தந்து கற்பொழுக்கத்தில் நின்று தவறிழைத்ததாக



அன்றி அவனை மணந்து அவனோடு வாழவேண்டும் என்னும் ஆதங்கத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. ஒருத்தி ஒருவனை நினைத்துவிட்டால் அவளது உள்ளத்தில் இருந்து அவனை அகற்றவே முடியாது. அவ்வித காதலால் அவன் மீது பற்றும் பாசமும் மீதூரப்பெற்று காதலாய் மலர்ந்து மனத்தினால் கணவன் மனைவியாகவே நினைந்து வாழும் நிலைமைக்குச் சென்றவர்கள் பிரிந்து வாழுதல் துன்பத்தை தருவதாக அமைகின்றது. 'உன்னிடத்தில் என்னைத் தந்தேன்' என்று 'உன் காகவே நான் உயிர் வாழ்கின்றேன்' 'உடல் வளர்த்தேன் உன்னை அடைவதற்கு'என்றெல்லாம் சினிமாப் பாடல்கள் சங்க இலக்கியத்தின் வழி வந்தவையாகவே காணப்படுகின்றன. புனவன் - குறவன், துடவை 'தோட்டம், குறைத்து' கோதி, கூழை 'கூழையாகிய கதிர், (குறுகியதான) பெரும்பெயல் - பெருமழை, இலைஒலித்தாங்கு - இலைபசுமையாக இருப்பதுபோன்று, என் உரம் - எனது வலிமை, செத்தும் - இழந்தும். உளெனே - இருக்கின்றேனே.

இதனை ஒத்த தலைவியின் விளக்கம் வேறுவிதமாக அமைவதனைச் சங்கச் செய்யுளான குறுந்தொகை 27 வதாக இடம்பெறும் வெள்ளிவீதியாரின் பாடல். தனது தலைவியின் உடலில் ஏற்படும் மாற்றம், அவளது நிலை கவலையைத் தருகின்றது. தலைவியிடம் ஏன் என வினவுகின்றாள். அதற்கு தலைவி தோழிக்குக் கூறியதாக அமைகின்றது இந்தக் கவிதை. தலைவி தனது தலைவனுடன் சேரவில்லை. அவனுக்கு எனது உடலை நான் கொடுக்கவில்லையே, அது வீணாக இழந்து அவனுக்கும் இன்றி எனக்குமின்றி வீணே அழிந்து பாழாகப்போகின்றதே. தலைவனால் அடைய வேண்டிய இந்த இன்பத்தை அவனும் அனுபவிக்காது என்னிடத்தில் வராது எங்குள்ளானோ? என்னை நாடி அவன் வந்து எனது நிலையை அறிந்து என்னை மகிழவைத்துத் தானும் மகிழ்வானோ என ஏங்கும் பாலை நிலத்துத் தலைவி தன் தோழிக்கு தலைவனின் பிரிவால் பசலை படரும் நோய்க்கு ஆளாகி எனது அழகிழந்து நலிந்து போகின்றேனே என்று குறிப்பிடுகின்றாள்.

கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது
நல் ஆன்தீம் பால், நிலத்து உக்கா அங்கு
எனக்கும் ஆகாது. என் ஐக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல், என் மாமைக் கவினே. (குறுந்தொகை -27)

நல்லினப் பசுவின் இன்சுவை பொருந்திய பாலானது அதன் கன்றால் அருந்தப்படாதும், பால் கலையத்தில் அதனை எடுத்து மற்றவர்களும் உண்ணாது வீணாக நிலத்தில் கொட்டுகின்றதே. அது மண்ணுக்கு இரையாவது போன்று எனது அழகு உடலை எனது அருமைத் தலைவன் அனுபவிக்காமல் எனக்கும் பிரயோசனப்படாமல் வீணாக அழகொழிந்து போகின்றதே. எனது பெண்குறிப் பகுதி நிலத்தில் கொட்டிய பாலைப்போல வீணாக பசலையால் அழகிழந்து போகின்றது. அதனை அவரும்

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

நகைச்சுவைத் தொடர் 287

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நிசன்



இந்திய லெக்சன் முடிவுகளை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டு ஒரு கூட்டமும் யார் வந்தால் நமக்கென்ன என அழும் சீரியல்களை அன் லிமிட்டட்டாக பார்க்கும் ஒரு கும்பலும் இது அல்லது இது தான் வரும் என அதுவும் இல்லாமல் இதுவும் அல்லாமல் தங்கள் கருத்துக்கள் கூறுவோரும்.



யார் வந்தால் ஈழத்தமிழர் பிரச்சினை தீரும் என ஏங்கும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும் தேர்தல் முடிவுகளின் எதிர்பார்ப்பு கேள்விக் குறியாக உள்ளது.



வந்ததெடி காளைக்கு.... ஆபத்து....எனும் வசனம் வீரபாண்டிய கட்டபொம்மனில் வரும் வசனம்.



இதுவரை நல்லாத்தானே போய்க்கிட்டிருந்திச்சு. இது அன்றைய புலிகேசி. இன்றைய தெனாலி ராமன் வடிவேலுவின் வசனம்.



ஐ பொட் அகிலாண்டேஸ்வரியின் விரல்கள் மறைந்த தவில் மேதை தட்சணாமூர்த்தியின் விரலைவிட வேகமாக வேலை செய்தன.

லுக் செல்லம்மா... ஐ.நா சபை ஆட்கள் இந்தமாதம் ஸ்ரீலங்காவுக்கு போயினமாம். 4 வருசம் அங்கை நிப்பினமாம் என்று சொல்லிக் கொண்டிருக்க எங்கடை நாயைக்கூட விசாரிக்க...நவநீதம் பிள்ளைக்கு அதிகாரமில்லை யெண்டு சொல்லிச்சினம் என இழுத்தா...
ஆட்டிலறி அன்னம்மா.



ஓநாய் ஓநாய்... என சொல்லி உண்மையாகவே ஓநாய் வந்த கதைபோல ஐ.நா வரப்போகிறதே.... இப்ப என்ன செய்யப்போயினம்? என்று சொல்லும் பொழுதே உலகர் சிரித்தார். செல்லம்மா அமெரிக்கர் வர விசா கேட்டா தரமாட்டினம்.



மன்னார் பலாலி அங்கை இஞ்சையென்று புதைகுழிகளில் தோண்டி எடுத்த மனித எலும்புக்கூடுகளை அது ஆணா பெண்ணா..?..எப்போ (ஆமியால் அடித்துக்கொல்லப்பட்டது) புதைக்கப்பட்டது என ஆராய்வதற்கு அமெரிக்காவுக்கு அனுப்பப்போகிறார்களாம் என சொல்லி முடிக்க முதலே உதைத்தான் சொந்தக் காசிலை சூனியம் வைக்கிறது என சொல்லிச் சிரிச்சா ஆட்டிலறி அன்னம்மா.



முள்ளிவாய்க்கால் இழப்புக்கள் மே..18. 4 வருடங்கள் ஓடி விட்டன. உலகநாடுகளும் அறிக்கை கேட்டு ஓடுகின்றனர். பதில் யாரிடம்?



(எதற்கும் ஒரு காலம் உண்டு பொறுத்திரு மகனே... பாடல் நினைவுக்கு வருகிறது)

## மே....1...15



1. மே தினம்

1. பிராம்ரன் கற்பகவிநாயகர் கொடி

3. வில்லியம் சேக்ஸ்பியர் நினைவுதினம் (1616)

3. சர்வதேச பத்திரிகை சுதந்திர நாள்



5. மாவீரன் நெப்போலியன் நினைவு தினம் (1821)

4. அனைத்துலக தீயணைக்கும் படையினர் நாள்.

5. சர்வதேச மருத்துவச்சிகள் நாள்



11. மதேர்ஸ் டே கனேடிய அன்னையர் தினம்

12. உலக செவிலியர் நாள்

13. தவில் வித்துவான் லயஞான குபேர பூபதி தட்சனாமூர்த்தி நினைவு தினம்.


# கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## வருடாந்த பொதுக்கூட்டம் - 2014

**திகதி:** மே 04, 2014, ஞாயிற்றுக்கிழமை

**நேரம்:** பிற்பகல் 3:00 மணி

**இடம்:** *GTA Square (Second Floor)*
*5215 Finch Ave. E., #224*
*Scarborough, ON M1S 0C2*

இக்கூட்டத்திற்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அவர்களின் வாரிசுகள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:

*416.414.3327* *416.299.6645*
*416.315.9397* *416.296.7037*





# என்னைத்....

37ஆம் பக்கத்தொடர்ச்சி

அனுபவிக்கவில்லையே. எனது காம நோயை வந்து குணப்படுத்தா விட்டால் தலைவனின் பிரிவுத்துயர் ஒன்றே போதும் என்னை அழிப்பதற்கு. அந்த வேதனையால் நான் அழகொழிந்து யாருக்கும் உதவாமல் மண்ணில் மடிந்து போகப்போகின்றதே இந்த அழகிய உடல் எனத் தோழிக்கு தனது பிரிவுத்துயரை எடுத்துரைக்கின்றாள் தலைவி.

இது காமக் கிளர்வின் வெளிப்பாடோ? தலைவனைப் பிரிந்துவாழ்வதின் பிரிவுத்துயரோ? புலவர் வெள்ளிவீதியார் மிக நுட்பமாக எடுத்துரைக்கின்றார். பாலை நிலத்தில் ஊற்றப்படும் பால் புல் பூண்டுக்குக் கூடப் பயன்படாதே! அவ்விதமே தலைவனுக்கான எனது உடல் அவனால் அனுபவித்து இன்பம் காணாமல் வீணாகிப் போகின்றதே. பசலைக்கு எனது அழகு உட்பட்டு பாழாகிப்போகின்றது என்பதனை



எத்துணை உதாரணத்தால் தலைவனின் வாயிலாக விளக்கம் தருகின்றார். இது சங்கப் புலமனாரின் சிறப்பன்றோ?

# GAS STATION FOR SALE





## HWY 403 / King George Rd - Brantford

BUSY ESSO ON THE RUN FOR SALE
IN TOWN, RENOVATED EXTENSIVELY.
NOI OVER $200,000. ASKING ONLY $1.99M
POTENTIAL FOR EXPANSION TDL/ SUBWAY/
COIN CAR WASH/ OIL CHANGER.
FINANCING HELP AVAILABLE FOR A
QUALIFIED BUYER.







## Nel Ketha

Smart Real Estate Solutions

Sales Representative

**416.677.4707**

HomeLife GTA Realty Inc. Brokerage
Tel: 416.321.6969, Fax: 416.321.6963
www. homelifegtarealty.com
203-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

CCIM Individual Member

A MEMBER OF Commercial Division Toronto Real Estate Board

## வாகன விபத்து MOTOR VEHICLE ACCIDENT

SKT PARALEGAL SERVICE

CRIMINAL MATTERS
SUMMARY

**416.803.5296**

Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்



SK THEESAN

TRAFFIC TICKETS

LICENSED PARALEGAL sktheesan@gmail.com

### MOTOR VEHICLE ACCIDENT

SERIOUSLY INJURED ?

ACCIDENT BENEFITS
PERSONAL INJURY

### TRAFFIC TICKETS

DON'T MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS

### CRIMINAL CONVICTION

PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP

CRIMINAL CHARGES ?

EXPERIENCED LAWYERS AVAILABLE

CENTUM Optima Mortgages Inc.

**Need a Mortgage?**

- Residential and Commercial Mortgage
- 2nd Mortgage
- Purchase & Refinance
- Renewal & Switch
- Home Equity loan



**Gini Annarasa**
Mortgage Broker Lic #M08005550
Cell: 416.830.3241
Email: gini.annarasa@gmail.com

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962

**Vany Jeganmohan**
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca



GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2 — Higher Standards Agents... Higher Results!™

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

**SASI CHELVARATNAM**
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated



"Let me help you make the right choice"

**SchurenSriskandarajah** B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393





Low Mortgage Rates

**TD Canada Trust**

Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-800-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit
Consolidation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

Free Real Estate Class - Call: 416.321.6969



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com



## RealEstate / Mortgage / Commercial Investments

**ROSSLAND**



Bedrooms: 4
Washrooms: 3
Price: $509,900

**VANHORN & HWY404**



Bedrooms: 4
Washrooms: 3
Price: $669,888

**MCCOWAN & DENISON**



Bedrooms: 3
Washrooms: 3
Price: $499,900

**MARKHAM & SHEPPARD**



Bedrooms: 2
Washrooms: 2
Price: $279,900

**TAUNTON & HWY 115**



Gas Station, Motel
1 Hour from Toronto
Price: $1.4M

**SCAR.GO.CLUB& BRIMORTON**



Bedrooms: 3
Washrooms: 2
Price: $539,900

MORTGAGE ALLIANCE
RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage



**A. Anton Jeeva** B.Eng
Hall Of Fame Award Winner
Ranked among the top 1% of all Realtors in the GTA
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage
8 Shadlock St, Unit #7
Markham, ON L3S 3K9

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
REAL ESTATE List Buy Sell
TOP 5% SALES REPRESENTATIVES IN CANADA
CHAIRMAN'S CLUB AWARD WINNER 2012
HomeLife GTA Realty Inc., Brokerage
**Raj Paramasamy** Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
Guaranteed Result



காப்புறுதி அனைவரும் வைத்திருக்க வேண்டிய ஒன்று. அதனை உங்களில் ஒருவரிடம் பெற்றுக்கொள்ளுங்களேன்.

**Mailvaganam Mahindan,** M.Sc.
Insurance Advisor
Call: 647.215.5967



Life Insurance, Travel Insurance , Mortgage Insurance , Non Medical Insurance , Disability /Critical Illness , RESP, RRSP போன்ற தேவைகளுக்கு அழையுங்கள். உங்களுக்கான காப்புறுதியை முப்பதுக்கு மேற்பட்ட நிறுவனங்களில் இருந்து தெரிவு செய்துதரப்படும்.

காப்புறுதி பற்றிய உங்கள் சந்தேகங்களுக்கு அனைத்துலக தமிழ் வானொலியில் (GTR) புதன்கிழமை இரவு 9 மணி - 10 மணி வரையும் கதிரொளி வானொலியில் திங்கட்கிழமை இரவு 9:30 - 10:30 வரையும் பதில் தரப்படும்.

**Sales Reps. Welcome**

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)



For All your Real Estate & Investments Needs!

**HomeLife/GTA Realty Inc.** Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED